**தமிழக அரசின் நிதியமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், 2012–2013 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தை, 2012 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாள் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றும் உரை**

***மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே***

*"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்*
*எஞ்சாமை வேந்தர்க் கியல்பு"*

உலகப் பொதுமறையாம் திருக்குறளில், நல்வேந்தர்களின் நான்கு நற்குணங்கள் என விளக்கப்பட்ட – அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் ஆகிய – நான்கு குணங்களின் உறைவிடமாகவும், அளவற்ற கருணையின் திருவுருவாகவும் திகழும் ஒப்பற்ற தலைவி, நமது **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா** அவர்களின் ஆசியுடன் தமிழக அரசின் 2012–2013 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளை இந்த பேரவை முன் வைக்க விழைகிறேன். இது இந்த அரசின் இரண்டாவது நிதிநிலை அறிக்கை என்ற முறையில், என்போன்ற எளியவனுக்கும் இத்தகைய பெரிய வாய்ப்பை வழங்கியமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்றென்றும் நன்றிக்கடன்பட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. இன்றும் என்றும் நமது மாநிலத்தின் நம்பிக்கை நட்சத்திரம் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மட்டுமே என்பதை உணர்ந்துள்ள தமிழக மக்கள், அண்மையில் சங்கரன்கோயில் சட்டமன்ற தொகுதிக்கு நடந்த இடைத்தேர்தலில் மகத்தான வெற்றியை வழங்கி தமது நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளனர். பொறுப்பேற்ற

பத்து மாதங்களுக்குள்ளாகவே, தமிழக வரலாற்றில் முன் எப்போதும் இல்லாத சாதனையாக, வீழ்ச்சியுற்றிருந்த மாநிலத்தை மீட்டெடுத்து, மீண்டும் செழிப்பான வளர்ச்சிப் பாதையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு சென்றுள்ளார். தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிடும் பொருட்டு செயல்படுத்தப்பட்டுவரும் பெரும் எண்ணிக்கையிலான திட்டங்களே, தமிழக மக்கள் அவர் மீது வைத்துள்ள நம்பிக்கை என்றும் பொய்க்காது என்பதற்கு சான்றாகும்.

3. வெற்றி, பெரும் பொறுப்புகளையும் உண்டாக்குகிறது. எனவே, அளிக்கப்பட்ட வாக்குறுதிகளையும், மக்களுடைய எதிர்பார்ப்புகளையும், அனைத்து தடைகளையும் மீறி நிறைவேற்றிடும் கடமை எங்களுக்கு உள்ளது என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம். நாங்கள் பதவியேற்றபோது, மாநிலம் எண்ணற்ற பிரச்சனைகளை எதிர்கொண்டிருந்தது. சட்டம்–ஒழுங்கு முழுமையாக சீர்கெட்டிருந்தது. மாநிலத்தின் வளர்ச்சி பின்நோக்கிச் சென்று கொண்டிருந்தது. நிதி நிலைமையும் மிகமோசமாக இருந்தது. சட்டமன்றத் தேர்தலில் பெரும் வெற்றி பெற்ற பின், இந்நிலையை மாற்றி, மாநிலத்தின் நிதிநிலையை சீரமைத்து மேம்படுத்தி, மக்களின் தேவைகளை அறிந்து செயல்படக்கூடிய அரசாக இந்த அரசு விளங்க, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அயராது உழைத்து வருவதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். வளம் மிக்க மாநிலமாக; கண்ணியமான வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் எல்லோருக்கும் வழங்கும் மாநிலமாக; வறுமையும், ஏழ்மையும் ஒழிக்கப்பட்ட மாநிலமாக; வேலைவாய்ப்பற்ற இளைஞர்களே இல்லாத மாநிலமாக; ஒடுக்கப்பட்டோர் உள்ளிட்ட அனைவரின் வாழ்வுரிமையை அனைத்து வகைகளிலும் உறுதி செய்யும் மாநிலமாக; அனைவரின் கண்ணீரையும் துடைத்தெறியக்கூடிய மாநிலமாக; நமது மாநிலத்தை உருவாக்கிட வேண்டும் என்பதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பேராவல்.

**4.** சமூகப் பொருளாதார வளர்ச்சி, அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கியதாகவும், அனைவருக்கும் பலன் அளிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். ஆகவே, இத்தகைய வளர்ச்சி அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய வகையில் அமைய எங்களது கொள்கைகள் கவனமுடன் வகுக்கப்பட்டு வருகின்றன. எனவேதான், நமது மாநிலப் பொருளாதாரத்தை புதிய உச்ச நிலைக்கு கொண்டு செல்லக்கூடிய, வளர்ச்சிக்காக ஓய்வின்றி பாடுபடக்கூடிய அதே வேளையில், ஏழை எளிய மக்களை உயர்த்துவதற்கான வழிமுறைகளையே எங்களின் கொள்கைகளின் அடித்தளமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறோம். இந்தக் குறிக்கோள்களை நோக்கி நடைபோடக் கூடிய அதேதருணத்தில், நிதிநிலை மேம்பாடு, அரசின் செயல்திறனை உயர்த்துதல், வேளாண் உற்பத்தித் திறனை அதிகரித்தல், ஆக்கத் துறையில் உற்பத்தியைப் பெருக்கும் வகையில், கட்டமைப்புகளை, குறிப்பாக மின்சாரக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் போன்ற சவால்களையும் சந்தித்து கவனமுடன் செயல்பட்டு வருகிறோம்.

**5.** இத்தகைய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, பொருளாதார வளர்ச்சியின் மூலமாக வளம் பெருக்கவும், கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, சமூகப் பாதுகாப்பு, உணவுக்கு உத்தரவாதம் ஆகியவற்றின் வாயிலாக மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும், எண்ணற்ற புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகையை இருமடங்காக்கியது; மாநிலத்தில் பசிப்பிணியை அறவே அகற்றிட விலையில்லா அரிசி வழங்குவது; ஏழைப் பெண்களுக்கான திருமண உதவித் தொகையுடன் தாலிக்குத் தங்கமும், பட்டப்படிப்பும், பட்டயப்படிப்பும் முடித்த பெண்களுக்கு கூடுதல் உதவித் தொகையும் வழங்குவது; ஏழைத் தாய்மார்களுக்கு வழங்கப்படும் மகப்பேறு உதவித் தொகையை இருமடங்காக்கியது; பள்ளிகளில் மாணவ மாணவியரின்

இடைநிற்றலை குறைக்க பண உதவி வழங்குவது; எளியோர் நலன் கருதி விரிவாக்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துவது; பெண்களுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கிவருவது; ஏழைக் குடும்பங்களுக்கு கறவைப் பசுக்கள், ஆடுகள் வழங்குவது; வறிய குடும்பங்களுக்கு சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டித்தருவது, என பற்பல திட்டங்கள் ஏழை எளியோர்பால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டிருக்கும் பரிவுக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாக அமைந்துள்ளன. இவற்றோடு, மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை வழங்குவது; கல்வி, சுகாதாரத் துறைகளில் கட்டமைப்பு வசதிகளை பெருமளவு மேம்படுத்துவது; முதன்மைத் துறைக்கு புத்துயிரளித்திட முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு உதவி; இரண்டாவது பசுமைப் புரட்சியை உருவாக்கிடும் நோக்கில் வேளாண் உற்பத்தியைப் பெருக்க பன்முனைத் திட்டம்; கொள்கை முன்முயற்சிகள் மூலமாக, தொழில் துறை மூலதனத்தையும் வளர்ச்சியையும் ஊக்குவிக்கக் கூடிய சூழலை உருவாக்கும் பணிகள்; நகர்ப்புரத்தின் கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கிட இரு சிறப்பு நோக்குத் திட்டங்கள் (mission mode schemes) ஆகியன பொருளாதார வளர்ச்சியை மேலும் உயர்த்திட வலுவான அடித்தளத்தை அமைத்துள்ளன.

## பேரிடர் நிவாரணம்

**6.** கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் கடும் சேதத்தையும், பெருந்துயரையும் ‘தானே’ புயல் ஏற்படுத்தியது. கருணையும், கனிவும் உருவாகக் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உடனடி நிவாரணப் பணிகளை அனைவரும் போற்றக்கூடிய மன உறுதியுடன் மேற்கொண்டார்கள். உடனடி நிவாரணத்திற்காக **850** கோடி ரூபாய் ஒப்பளிக்கப்பட்டது. சேதமடைந்த **5,77,584** குடிசைகளுக்கு இழப்பீடாக

160 கோடி ரூபாயும், 5,58,163 ஏக்கர் பரப்பளவில் சேதமடைந்த பயிர்களுக்கான இழப்பீடாக விவசாயிகளுக்கு 205 கோடி ரூபாயும் வழங்கப்பட்டன. அத்தியாவசியத் தேவைகளான மின்சாரம், சாலை இணைப்புகள், குடிநீர் விநியோகம் ஆகியன மின்னல் வேகத்தில் சீரமைக்கப்பட்டன.

7. குடிசைகளுக்கும், நிரந்தரப் பயிர்களுக்கும் ஏற்பட்ட மிகப் பெரும் சேதத்தை கருத்தில் கொண்டு, அவற்றை நிரந்தரமாக சீரமைப்பதற்கான திட்டங்களையும் செயல்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். ஏற்கெனவே **ஆளுநர் உரையில் அறிவித்தது போல, இந்த இரண்டு மாவட்டங்களில் நிரந்தர சேதத்திற்கு உள்ளான குடிசைகளுக்கு மாற்றாக, ஒரு லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டித்தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.** இதுதவிர, முந்திரி, தென்னை, இதர தோட்டப் பயிர்களை மீண்டும் நடவு செய்து, புதுப்பிக்கவும், ஆண்டு பயிர்களை மீண்டும் பயிரிட்டு விவசாயிகளின் வாழ்வில் வளமையை கொண்டுவரும் வகையிலும், 790.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு சிறப்பு திட்டத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இந்த இரண்டு மாவட்டங்களில் நடைபெற்று வரும் நிவாரணப் பணிகளை கண்காணிப்பதற்கென ஒரு தனி திட்ட மேற்பார்வை அலகும் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. **ஏதாவது ஒரு வகையில், இயற்கை இடர்பாடுகளை தமிழகம் அடிக்கடி சந்தித்து வருவதால், பேரிடர் நேரிடும்போது விரைவாகவும், திறமையாகவும் செயல்படக்கூடிய மாநில பேரிடர் மீட்புப் படை ஒன்று ஏற்படுத்தப்படும். தேசிய பேரிடர் மீட்புப் படை போன்று மீட்பு நடவடிக்கைகளில் விரைந்து செயல்பட சிறப்பு பயிற்சி பெற்ற அமைப்பாக இந்த அமைப்பு செயல்படும்.**

## தொலைநோக்குத் திட்டம் 2023

**8.** தற்போதுள்ள பொருளாதாரச் சூழலில், தமிழ்நாட்டை இந்தியாவிலேயே மிகுந்த வளம் செழிக்கும் முன்னணி மாநிலமாக மாற்றிட, தொலைநோக்கும், குறிப்பிட்ட இலக்கை நோக்கமாகக் கொண்டு செயல்படும் வழிமுறையும் அரசிற்குத் தேவைப்படுகின்றன. **நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த சவாலினை எதிர்கொண்டு, அடுத்த இரண்டு ஐந்தாண்டுத் திட்ட கால வரம்பைக் கருத்தில் கொண்டு, 2023 ஆம் ஆண்டு இறுதியில் மாநிலம் எய்த வேண்டிய தெளிவான இலக்குகளை வகுத்து, தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ஐ தீட்டியுள்ளார்கள். பத்து முக்கிய அம்சங்களை உள்ளடக்கிய இந்த தொலைநோக்குத் திட்டத்தை, 22.3.2012 அன்று நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். அடுத்த பத்து ஆண்டுகளில், மாநிலத்தின் தனிநபர் வருவாயை ஆறு மடங்கு உயர்த்தவும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியின் மூலமாக மாநிலத்தை வறுமையற்ற மாநிலமாக மாற்றவும், இத்தொலைநோக்குத் திட்டம் வழிவகுக்கின்றது. மேலும், அனைத்து முக்கியத் துறைகளிலும் நாட்டிலேயே மிகச் சிறந்த கட்டமைப்புகளைக் கொண்டுள்ளதாகவும், மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளில் முதன்மை மாநிலமாகவும், நமது மாநிலத்தை உயர்த்துவதை இத்திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இந்த உயரிய இலக்குகளை அடைவதற்கான தெளிவான திட்டங்களையும், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வை வரையறுத்துள்ளது. நமது மாநிலப் பொருளாதாரத்தில் உற்பத்தித் துறையின் பங்கினை அதிகரித்தல், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறையை மேலும் எழுச்சிபெறச் செய்தல், திறன்களை மேம்படுத்துதல், வேளாண் உற்பத்தித் திறனை அதிகரித்தல், தமிழ்நாட்டை இந்தியாவின் அறிவுசார் தலைநகரமாகவும், புதுமைகளைப்**

**படைக்கும் மையமாகவும் (Innovation Hub) முன்னிலைப்படுத்துதல் ஆகியன இத்திட்டங்களுள் அடங்கும்.**

**9. பொருளாதாரத்தை வேகமாக வளர்ச்சி அடையச் செய்யவும், பெரும் மாற்றங்களை ஏற்படுத்தவும், 15 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முக்கிய கட்டமைப்புத் திட்டங்களில் முதலீடு தேவை என இத்தொலைநோக்குத் திட்டம் கணக்கிட்டுள்ளது. இந்த கொள்கை இலக்குகளைக் கருத்தில் கொண்டு, இந்த வரவு–செலவுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே உறுதியளித்தவாறு, இந்த புதிய திட்டங்களைத் தொடங்கி செயல்படுத்துவதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையின் கீழ் தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தை விரைவில் அமைப்பதற்கான சட்டம் இயற்றப்படும். தொடக்கமாக, தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு நிதிக்காக 1,000 கோடி ரூபாய் இந்த 2012–2013 வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** தொலைநோக்குத் திட்டம் 2023–ல் வகுக்கப்பட்டுள்ள இலக்குகளை எய்துவதற்கு நாம் பயணிக்க உள்ள பாதையில், இது நல்லதொரு தொடக்கமாக அமையும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

## பொருளாதார மேம்பாடு

10. பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் (2007–2011) முதல் நான்கு ஆண்டுகளில், தேசிய சராசரி வளர்ச்சி வீதம் 8.15 சதவீதமாக இருந்த நிலையில், நமது மாநில பொருளாதார வளர்ச்சி, 8.05 சதவீத அளவிலேயே இருந்தது. முன் மதிப்பீடுகளின்படி (Advance Estimates), இந்த ஆண்டு மாநில பொருளாதார வளர்ச்சி 9.39 சதவீதமாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. நமது வளர்ச்சி பெரும்பாலும் சேவைத் துறை மூலமாகவே உள்ளது. 2011–2012 ஆம்

ஆண்டில், மாநிலத்தின் முதன்மைத் துறை மற்றும் உற்பத்தித் துறை ஆகியவற்றின் வளர்ச்சி, முறையே 2.63 சதவீதம், 7.12 சதவீதம் என்ற அளவில் மட்டுமே இருக்கும் என்பதால், இத்துறைகளுக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்வதும், முதலீடுகளை உயர்த்த வேண்டியதும் அவசியமாகிறது. பொருளாதாரத்தில், நமது நாட்டில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு விளங்கிவரும் போதும், 2010–2011 ஆம் ஆண்டில் நிலையான விலை அளவுகளின்படியான தனிநபர் வருமானம் 58,177 ரூபாய் என்ற அளவிலேயே உள்ளது. **2023 தொலைநோக்குத் திட்டத்தில், நமது மாநிலத்தின் சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதம் இரண்டு இலக்க அளவிலும், தேசிய சராசரி வளர்ச்சியைவிட இரண்டு சதவீதம் கூடுதலாகவும் இருக்கவேண்டும் என்பதை உறுதிசெய்து, அத்தகைய வேகமான பொருளாதார வளர்ச்சியின் மூலம் நமது மாநிலத்தின் தனிநபர் வருமானத்தை, 2023 ஆம் ஆண்டிற்குள் உயர் நடுத்தர வருவாய் நாடுகளின் அளவிற்கு உயர்த்த வேண்டும் என்று நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திட்டமிட்டுள்ளார்கள். இந்த இலக்கை அடைய அயராது பாடுபடுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

11. முக்கிய வளர்ச்சிக் குறியீடுகளில் நமது மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதை அரசு உணர்ந்துள்ளது. இந்த ஏற்றத்தாழ்வுகளைக் களைவதற்காக, சுகாதாரம், கல்வி, தனிநபர் வருமானம், வறுமை, பாலினம் தொடர்பான குறியீடுகள், வேலைவாய்ப்பு ஆகிய வளர்ச்சிக் குறியீடுகளின் அடிப்படையில் 100 பின்தங்கிய வட்டாரங்களும், பின்தங்கிய நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளும் கண்டறியப்படும். **இவ்வாறு கண்டறியப்பட்ட பகுதிகளில், மேற்கூறிய குறைபாடுகளைப் போக்கிட, 'மாநில சரிநிகர் வளர்ச்சி நிதி' என்ற ஒரு சிறப்பு நிதியை உருவாக்கி, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளும் சீரான வளர்ச்சி காண குறிப்பிட்ட இலக்குகளுடன் கூடிய திட்டங்கள் விரைவில்**

**செயல்படுத்தப்படும். இதன் தொடக்கமாக, இத்திட்டத்திற்கு 100 கோடி ரூபாய் நிதி தற்போது ஒதுக்கப்பட்டுள்ளது.** மத்திய அரசின் பின்தங்கிய பகுதிகளுக்கான உதவி நிதி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கான நிதிகளும் இந்த நோக்கத்திற்கென ஒருங்கிணைக்கப்படும்.

## ஆண்டுத் திட்டம்

12. 2012–2013 ஆம் ஆண்டு பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டாகும். பதினோராம் ஐந்தாண்டுத் திட்ட கால இலக்காக 85,344 கோடி ரூபாய் என்றிருந்த நிலையில், பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்ட இலக்காக 1.85 லட்சம் கோடி ரூபாய் என ஏற்கெனவே நாங்கள் நிர்ணயித்திருந்தோம். **இதை இரண்டு லட்சம் கோடி ரூபாய் என்ற இலட்சிய இலக்காக உயர்த்தி நிர்ணயிக்க அரசு முடிவு செய்துள்ளது.** இதனை எய்த, திட்டப் பணிகளுக்கு மிக அதிகமான அளவு நிதி ஒதுக்கீடு தேவைப்படுவதைக் கருத்தில்கொண்டு, **2011–2012 ஆம் ஆண்டுத் திட்ட அளவான 23,535 கோடி ரூபாய் என்ற நிலையிலிருந்து, 2012–2013 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு 28,000 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.** முன்னுரிமைத் துறைகளுக்குத் தேவையான ஒதுக்கீடுகள் அளிக்கப்படுவதையும், ஆதிதிராவிடர், பழங்குடியின மக்கள் உரிய பங்கினைப் பெறுவதையும், இந்த ஆண்டுத் திட்டம் உறுதி செய்துள்ளது.

## வறுமை குறைப்பு

13. கிராமப்புற வறுமையைக் குறைத்திட, இலக்கின் அடிப்படையிலான, புதுமையான, நடவடிக்கைகள் அவசியமானவை. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2005 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட, உலக வங்கி உதவியுடனான புதுவாழ்வுத் திட்டத்தை

இந்த அரசு செம்மையாகச் செயல்படுத்தி வருகிறது. குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொடக்கத்தில், 16 மாவட்டங்களில் உள்ள 70 பின்தங்கிய வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்ட இந்த திட்டம், தற்போது மேலும் 10 மாவட்டங்களில் உள்ள 50 வட்டாரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, 9.3 லட்சம் குடும்பங்களுக்கு பலன் அளிக்கும் வகையில், 950 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வரும் நிதியாண்டில் இத்திட்டம் 350 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். கிராமப் பகுதிகளில், குறிப்பாக, எளியோர், சமுதாயத்தின் அடித்தட்டு மக்களிடம், சமூகப் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய உந்துகோலாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவெடுத்துள்ளன. தற்போது, நமது மாநிலத்தில் 82.84 இலட்சம் உறுப்பினர்களையும், 3,225 கோடி ரூபாய் சேமிப்பையும் கொண்ட, 5.35 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. மகளிர் திட்டத்தின் கீழ், 15,015 கோடி ரூபாய் அளவிற்கு கடனுதவியும் பெற்றுள்ளன. இவற்றோடு, கிராமப்புற வறுமையைக் குறைக்கும் நோக்கில் 'ஆஜீவிகா' என புதிதாகப் பெயரிடப்பட்டுள்ள, மத்திய அரசுத் திட்டமான 'தேசிய கிராமப்புற வாழ்வாதாரத் திட்டம்', தமிழ்நாட்டில் 2012–2013 ஆம் ஆண்டு முதல் தொடங்கி செயல்படுத்தப்படும்.

14. கிராமப்புற வறுமை போன்றே, நகர்ப்புர வறுமை கடுமையாக இருந்தாலும், சில சமயங்களில் அதன் தாக்கம் மிக அதிகமாக உள்ளது. எனினும், இதில் போதிய கவனம் இதுவரை செலுத்தப்படவில்லை. மத்திய அரசுத் திட்டமான ஸ்வர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா (SJSRY) திட்டம், இப்பிரச்சனையைத் தீர்க்க போதுமானதாக இல்லை. இந்நிலையை சரிசெய்ய இந்த அரசு முடிவு செய்துள்ளது. புது வாழ்வு போன்ற கிராமப்புற வறுமை ஒழிப்புத் திட்டங்களின் முக்கிய கூறுகளின் அடிப்படையில், **'தமிழ்நாடு நகர்ப்புர**

**வாழ்வாதாரத் திட்டம்' என்ற புதிய திட்டத்தை இந்த அரசு வரும் நிதியாண்டில் தொடங்கும். திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு, வீட்டுவசதி, அடிப்படை கட்டமைப்பு, அனைவருக்கும் கல்வி, சுகாதாரம், சமுதாய மேம்பாடு மற்றும் தெருக்குழந்தைகள், வீடற்றவர்கள் போன்ற மிகுந்த பாதிப்புக்குள்ளாகக்கூடிய பிரிவினருக்கான சிறப்பு இல்ல வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கி, நகர்ப்புர ஏழைகளுக்கு வாழ்வாதாரப் பாதுகாப்பினை இத்திட்டம் வழங்கிடும். தற்போதுள்ள பல்வேறு திட்டங்களையும் ஒருங்கிணைத்து பெண்கள், ஆதரவற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு சிறப்பு முன்னுரிமை அளித்து இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 200 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.** இதுவரை புறக்கணிக்கப்பட்ட நகர்ப்புர வறியோர் இதன் மூலம் மிகுந்த பயன்களைப் பெற்று அவர்களும் பொருளாதார வளர்ச்சியில் பங்குபெற இம்முயற்சி உதவும் என இந்த அரசு நம்புகிறது.

## திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு

**15.** வேகமான பொருளாதார வளர்ச்சியின் காரணமாக திறனுள்ள பணியாளர்களுக்கான தேவை பெருமளவு அதிகரித்துள்ள போதிலும், நமது மாநிலத்தில் உள்ள படித்த இளைஞர்களிடையே வேலையின்மையும், முழுமையான வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறாத நிலையும் பரவலாகக் காணப்படுகின்றன. தொழில்நுட்பத் தகுதி பெற்றுள்ள நமது படித்த இளைஞர்களில் பலர் மென் திறன்களிலும், வேலைவாய்ப்புக்கேற்ற தொழில் சார்ந்த திறன்களிலும் குறைபாடு உள்ளவர்களாக இருப்பதால்தான் அவர்களால் தனியார் துறையில் போதிய வேலைவாய்ப்புகளைப் பெற இயலுவதில்லை. அடுத்த 15 ஆண்டுகளில் ஏற்படக்கூடிய திறன்மிக்க பணியாளர்களின் தேவையில் உள்ள இடைவெளியை ஆய்ந்து பார்க்கும்போது, சுமார் இரண்டு கோடி

திறன்மிக்க பணியாளர்கள் தேவைப்படுவர் என கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கென, நமது மாநில இளைஞர்களுக்கு திறன் உருவாக்கும் பயிற்சியும், திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் அளிப்பது அவசியமாகின்றன. இந்தக் கடினமான பணியை முனைப்போடு செயல்படுத்த இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. வரும் நிதியாண்டிலிருந்து தற்போது பல்வேறு துறைகளின் கீழ் செயல்படுத்தப்பட்டுவரும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் அனைத்தையும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கத்தின் கீழ் கொண்டுவந்து, ஒருங்கிணைத்து செயல்படுத்த உள்ளோம். தொழில்களுக்குத் தேவையான திறன்களை உருவாக்க, சூழலுக்கேற்ப மாற்றியமைக்கத்தக்க புதுமையான உத்திகளை உள்ளடக்கி, பயிற்சித் திட்டங்களை வடிவமைத்தல், சான்றிதழ் வழங்குதல், கல்வியுடன், வேலைக்கான பயிற்சியையும் இணைத்தல் போன்றவற்றைத் தனியார் துறையுடன் இணைந்து அரசு செயல்படுத்தும். இதற்கென ஏற்கெனவே உருவாக்கப்பட்ட சங்கம் மாற்றியமைக்கப்பட்டு தனியார் துறையின் பங்களிப்புடன்கூடிய ஒரு சிறப்பு நிறுவன அமைப்பு ஏற்படுத்தப்படும். **பல்வேறு துறைகளின் கீழ் செயல்படுத்தப்பட்டுவரும் இத்தகைய திறன் பயிற்சிகளுக்காக, 2012–2013 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இளைஞர்கள், வேலைவாய்ப்பை நாடுவோர், வேலைவாய்ப்பை அளிப்போர், பெரும் எண்ணிக்கையில் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு வருவதை கருத்தில் கொண்டு, தனியார் துறையில் வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவதற்காக 32 மாவட்டங்களிலும் 37 மாவட்ட அளவிலான உதவி மையங்களை 193.2 இலட்சம் ரூபாய் செலவில் இந்த அரசு அமைக்கும்.**

## ஆளுகை

**16.** நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திறமை, நேர்மை, வெளிப்படையான நிர்வாகம், மக்களின் தேவையறிந்து

செயல்படும் தன்மை ஆகிய நான்கு கோட்பாடுகளை, அடிப்படையாகக் கொண்ட நல்லாட்சியை அளிப்பதாக தமிழக மக்களுக்கு உறுதியளித்துள்ளார்கள். கடந்த பத்து மாதங்களில் இந்த நோக்கத்தை நிறைவேற்ற உறுதியான பல நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துள்ளது. ஊழல் ஒடுக்கப்பட்டுள்ளதோடு, பொதுக் கட்டமைப்பை மேம்படுத்தவும், பொது மக்களுக்கான சேவைகள் அவர்களை எளிதாகச் சென்றடைவதை உறுதி செய்யவும் எண்ணற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. **வரும் நிதியாண்டில், இந்த அரசு தேசிய மக்கள் தொகை பதிவேட்டுத் திட்டத்தை (**National Population Register**) செயல்படுத்தி, இதன் மூலம் பெறப்படும் உயிர் ஆய்வளவு தகவல் தொகுப்பினை (bio-metric data), பொது விநியோகம், சமூகப் பாதுகாப்பு உதவித் தொகைகள் மற்றும் இதுபோன்ற தனிநபர் பயனடையக்கூடிய திட்டங்களான முதலமைச்சர் ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றின் மென்பொருளோடு இணைத்து செயல்படுத்திட ஆவன செய்யும்.** ‘ஆதார்’ எண்ணுடன் கூடிய இந்த உயிர் ஆய்வளவு தகவல்களை, இத்திட்டச் செயலாக்கத்தோடு இணைக்கும் இந்த நடவடிக்கை மூலம், நிதி தவறான முறையில் விரையமாவதைத் தடுக்க இயலும்.

17. பொதுமக்களுக்கும், அரசுக்கும் இடையே ஏற்படக்கூடிய பரிமாற்றங்களை மேலும் எளிதாக்கவும், வெளிப்படையானதாக மாற்றிடவும், அவசியமான, பயனுள்ள கருவியாக மின்னாளுமையை இந்த அரசு கருதுகிறது. புதிய மின்னாளுமைக் கொள்கை ஒன்றை இந்த அரசு விரைவில் வெளியிடும். **பல்வேறு துறைகளில் ஏற்கனவே பல கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கணினிமயமாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, பொதுமக்கள்–அரசு இடையே அதிக சேவை பரிமாற்றங்கள் உள்ள துறைகளை, சிறப்பு நோக்குத் திட்டங்கள் மூலமாக, ஒட்டுமொத்த கணினிமயமாக்கும் முறையை நடைமுறைக்குக் கொண்டுவர இந்த அரசு முடிவெடுத்துள்ளது. காவல் துறை, வணிக வரி,**

**பொது விநியோகம், கரூவூலம் ஆகிய துறைகள் இத்தகைய பணியை ஏற்கெனவே தொடங்கியுள்ளன.** வருவாய், பதிவு, சமூக நலம், சுகாதாரம், ஊரக வளர்ச்சி, பள்ளிக் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைகள், இத்தகைய முழுமையான கணினிமயமாக்கத்திற்கான பணிகளை விரைவில் தொடங்கும். தற்போது ஒரு சில மாவட்டங்களில் செயல்பட்டுவரும் பொதுச் சேவை மையங்களை மற்ற பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்ய இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். **அனைத்து அரசு சார்ந்த பொதுச் சேவைகளும் மக்களுக்கு ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் நகர்ப்புர பகுதிகளிலும் பொதுச் சேவை மையங்கள் வடிவமைக்கப்பட்டு விரைவில் தொடங்கப்படும். மேலும், பல்வேறு துறைகளிடையே வன்பொருள் திறனளவை பங்கிட்டு பயன்படுத்தும் வகையில் 'க்ளொடு கம்ப்யூடிங்'** (cloud computing) **முறையையும் இந்த அரசு ஊக்குவிக்கும்.**

18. **தானியங்கி கருவூல மேலாண்மை முறை (**Automated Treasury Management System**) மூலமாக, அனைத்து வருவாய் இனங்களும், செலவினங்களும் கண்காணிக்கப்படும் வகையில், கருவூல முறையை நவீனமயமாக்கி ஒருங்கிணைந்த நிதி மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த இந்த அரசு உத்தேசித்துள்ளது. வருவாய், செலவினம், இவற்றுடன் வரவு–செலவுத் திட்டம் தயாரிப்பதையும் ஒருங்கிணைத்து அனைத்து நிலைகளிலும் கணினிமயமாக்கப்படுவதை இது உறுதி செய்யும். அரசின் அனைத்து வருவாய்களையும் செலுத்தக்கூடிய ஒரு பொது நுழைவாயிலாக செயல்படக் கூடிய கருவூல வலைத்தளம் (**common payment gateway**) ஒன்று அமைக்கப்படும். பல்வேறு துறைகளின் வருவாயையும், செலவினங்களையும் சிறந்த முறையில் கண்காணிக்க இது உதவும்.**

## வருவாய் நிருவாகம்

19. நில ஆவணங்களை பராமரிக்கும் முறையை ஒழுங்குபடுத்தவும், சேவைகளை துரிதமாக வழங்கவும் இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்த அரசு பதவியேற்ற பின், பட்டா மாற்றம் செய்யும் முறை எளிதாக்கப்பட்டு, கடந்த ஆறு மாதங்களில் மட்டும் 14 லட்சம் பட்டா மாற்ற மனுக்களுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளன. **ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளை எய்தும் வகையில் வரும் 2012–2013 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.** பொது மக்களுக்கு மேலும் சிறந்த முறையில் சேவைகளை அளிப்பதற்காக, கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அச்சு இயந்திரங்களுடன் மடிக்கணினிகளை வழங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன் தொடர்ச்சியாக, கிராம நிர்வாக அலுவலர்களுக்கு 22.49 கோடி ரூபாய் செலவில் மடிக்கணினி மற்றும் அச்சு இயந்திரங்கள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **பொதுமக்களுக்கும், அரசுக்கும் இடையேயான பரிமாற்றங்களுக்கு வட்ட அலுவலகங்கள் மிக முக்கியமான மையங்களாகத் திகழ்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டு, பொதுமக்களுக்கு உகந்த சூழலை உருவாக்கி, வட்ட அலுவலகங்களில் அவர்களுக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 50 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்ய இந்த அரசு முடிவு செய்துள்ளது.**

## சட்டம் ஒழுங்கு

20. நமது மாநிலத்தில் அமைதி தவழச் செய்வது இந்த அரசின் முக்கியக் குறிக்கோள்களில் ஒன்றாகும். கடந்த பத்து மாதங்களில் நமது மாநிலத்தில் அமைதி நிலவியதோடு, சட்டம் ஒழுங்கு மிகச் சிறப்பாக

பேணப்பட்டது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பல தருணங்களில், சமூக விரோதச் சக்திகளுக்கு அணுவளவும் இடம்கொடுக்காது, சட்டம்–ஒழுங்கை நிலைநாட்டுவதில் உள்ள தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். 20.75 கோடி ரூபாய் செலவில் 39 நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை, நில அபகரிப்பு தொடர்பாக பல்வேறு மாவட்டங்களில் 30,071 புகார்கள் பெறப்பட்டு, 724.22 கோடி ரூபாய் மதிப்புடைய நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த நில அபகரிப்பு தொடர்பான வழக்குகளை விசாரிக்க, 25 சிறப்பு நீதிமன்றங்களும் தனியாக அமைக்கப்பட்டுள்ளன.

21. நவீன கருவிகள், பயிற்சிகள் மூலமாக காவல் துறையை இந்த அரசு நவீனமயமாக்கி வலுப்படுத்தி வருகிறது. காவல் துறை திறமையாகவும் மக்களின் நண்பனாகவும் மேலும் திறம்பட செயல்படும் வகையில், மத்திய அரசு உதவியோடு செயல்படுத்தப்படும், குற்றங்களையும், குற்றவாளிகளையும் கண்காணிக்கும் இணைப்புத் திட்டம் (CCTNS) போன்ற மின்னாளுமைத் திட்டங்கள் விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும். குற்றப் பிரிவு, பொருளாதார குற்றப் பிரிவு, சிலை திருட்டு தடுப்புப் பிரிவு போன்ற பல சிறப்புப் பிரிவுகள் இத்திட்டத்தில் இணைக்கப்படாததைக் கருத்தில் கொண்டு மாநில அரசு நிதியின்மூலம் இப்பிரிவுகளும் இந்த மின்னாளுமைத் திட்டத்திற்குள் கொண்டுவரப்படும்.

22. சென்னை மாநகரில் செயல்படுத்தப்பட்டுள்ள ‘இ–சலான்’ திட்டத்தின் மாபெரும் வெற்றியானது, மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஐந்து ஆணையரகங்களுக்கு உட்பட்ட பகுதிகளிலும், சோதனை முறையில் காஞ்சிபுரம் மாவட்டத்திலும் இத்திட்டத்தை செயல்படுத்திட வழி வகுத்துள்ளது. **இதன் அடுத்த கட்டமாக, 150 கோடி ரூபாய் செலவில் சென்னை மாநகரப் பகுதியில் அதிநவீன கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த**

**போக்குவரத்து மேலாண்மைத் திட்டத்தை செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், கண்காணிப்பு முறையை முழுவதும் தானியங்கி முறையாக மாற்றி, போக்குவரத்தை சிறப்பாக முறைப்படுத்தவும் எளிதாக கண்காணிக்கவும் உதவும்.** இத்தருணத்தில், 2011–2012 ஆம் ஆண்டில் சென்னை மாநகர போக்குவரத்து கண்காணிப்பு பணிகளுக்காக, தற்போதுள்ள வாகனங்களுடன் கூடுதலாக 87 ரோந்து வாகனங்களை இந்த அரசு அளித்துள்ளது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

23. அவசரக் காலங்களில் விரைந்து செயல்பட காவலர்களுக்கு, அவர்கள் பணிபுரியும் இடத்திற்கு அருகிலேயே குடியிருப்புகள் இருப்பது அவசியம். எனவே, காவலர்களுக்கான குடியிருப்பு வசதியில் 100 சதவீத தேவையையும் நிறைவு செய்ய இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்காகக் கடந்த ஆண்டு 288 கோடி ரூபாய் செலவில் 3,440 குடியிருப்புகள் கட்ட ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. 2012–2013 ஆம் ஆண்டில் 400 கோடி ரூபாய் செலவில் 4,340 கூடுதல் குடியிருப்புகள் அமைக்கப்படும்.

## சாலைப் பாதுகாப்பு

24. தேசிய அளவிலான சாலை விபத்துகளில் 13 சதவீதமும், இறப்பு ஏற்படக்கூடிய சாலை விபத்துகளில் 12 சதவீதமும் தமிழகத்தில் ஏற்படுகின்றன. எனவே, இதனைச் சரிசெய்வதற்கான நடவடிக்கைகளுக்கு இந்த அரசு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. 2011–2012 ஆம் ஆண்டில் சாலைப் பாதுகாப்பு நிதிக்காக 40 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. **வரும் நிதியாண்டில் இதனை 65 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கவும் இத்தொகையில் 25 கோடி ரூபாய் நெடுஞ்சாலைத் துறைக்காக ஒதுக்கீடு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். போக்குவரத்து கட்டமைப்புகள், சாலை சமிக்ஞைகள் ஆகியவற்றை**

**மேம்படுத்துதல், அதிக விபத்துகள் ஏற்படக்கூடிய சாலைகளில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்தல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பயிற்சி அளித்தல் போன்ற பணிகளுக்காக இத்தொகை செலவிடப்படும். மேலும், கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் இல்லாத 13 மாவட்டங்களில், நன்கு பயிற்சி பெற்ற ஓட்டுநர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க, 13 கோடி ரூபாய் செலவில் ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் அமைக்கப்படும்.** இது தவிர, நெடுஞ்சாலை ரோந்துப் பணிகளை மேலும் வலுப்படுத்த, தற்போதுள்ள 122 ரோந்துப் படைகளின் எண்ணிக்கையை 260–ஆக உயர்த்தி, அவற்றில் 69 கூடுதல் படைகளை தேசிய நெடுஞ்சாலைகளிலும், 69 கூடுதல் படைகளை மாநில நெடுஞ்சாலைகளிலும் பயன்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## தீயணைப்பு–மீட்புப் பணிகள்

25. விழுப்புரம் மாவட்டம்–சின்ன சேலத்திலும், மதுரை மாவட்டம்–தி.கல்லுப்பட்டியிலும், திருநெல்வேலி மாவட்டம்–ஆலங்குளத்திலும் 2011–2012 ஆம் ஆண்டில் புதிய தீயணைப்பு–மீட்பு நிலையங்களை அமைக்க இந்த அரசு அனுமதித்துள்ளது. மேலும், தீயணைப்பு–மீட்புத் துறையை நவீனப்படுத்த, 320.40 லட்சம் ரூபாய் செலவில் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய ஒன்பது தீயணைப்பு வாகனங்கள், எட்டு சிறு தீயணைப்பு வாகனங்களுக்கு இந்த அரசு இந்த ஆண்டு ஒப்புதல் அளித்துள்ளது. 2012–2013 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு 197.58 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## நீதி நிருவாகம்

**26.** நீதித் துறைக்கு போதிய கட்டமைப்பை அளித்திடும் நோக்கத்தோடு, **2011–2012** ஆம் ஆண்டு **21.66** கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு பணிகளுக்கு இந்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அனைத்து நீதி நிருவாக மாவட்டங்களிலும், ஒரு கோடி ரூபாய் வீதம் மாற்று சொற்பூசல் தீர்வு மையங்களை (Alternate Dispute Resolution Centre) அமைத்திட, பதிமூன்றாவது நிதிக் குழு **30** கோடி ரூபாய் நிதியுதவி அளித்துள்ளது. இந்த அரசு பதவியேற்ற உடனேயே, சென்னையில் இத்தகைய மாற்றுத் தீர்வு மையத்தினை அமைப்பதற்காக **4.2** கோடி ரூபாய் ஒப்புதல் அளித்துள்ளது. எஞ்சியுள்ள **29** நீதி நிருவாக மாவட்டங்களிலும், இத்தகைய மையங்களை நிறுவுவதற்காக மேலும் **29** கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**27.** உரிமையியல் நடுவர் பணியிடங்களில் **185** காலிப் பணியிடங்கள் உள்ளதால், சென்னை உயர்நீதிமன்றம் மூலமாக நடுவர்களை தேர்வு செய்து இப்பணியிடங்களை நிரப்பிட இவ்வரசு ஆணையிட்டுள்ளது. மேலும், **2001–2002** ஆம் ஆண்டு முதல் செயல்பட்டுவரும் **49** விரைவு நீதிமன்றங்களை நிரந்தர நீதிமன்றங்களாக இந்த அரசு மாற்றியுள்ளது. நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் நீதிமன்றங்களைத் (Lok Adalats) தொடங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. **நீதி நிருவாகத் துறைக்கு, இந்த 2012–2013 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், 736.15 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.**

## வேளாண்மை மற்றும் கூட்டுறவு

28. இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்திட வேண்டும் என்ற நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்கேற்ப, வேளாண் வளர்ச்சிக்கும், விவசாயிகளின் நலனுக்கும் தேவையான பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துள்ளது. இதுகுறித்து, பண்ணை உற்பத்தி திறன், பண்ணையையும், பயிர்சாகுபடியையும் பல்வகைப்படுத்துதல், விவசாயத்தை இயந்திரமயமாக்கல், சிறந்த நீர் மேலாண்மை, அறுவடைக்குப் பிந்தைய கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கு மதிப்புக் கூட்டுதல் போன்றவற்றில் இந்த அரசு தொடர்ந்து கவனம் செலுத்தும். **2012–2013 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், முன் எப்போதும் இல்லாத அளவாக, வேளாண் துறைக்கு 3,804.96 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதன் மூலமாக, இத்துறைக்குத் தேவையான நிதி உறுதி செய்யப்பட்டுள்ளது.**

29. 2010–2011 ஆம் ஆண்டில் 75.9 இலட்சம் மெட்ரிக் டன் என இருந்த உணவு தானிய உற்பத்தி நிலையை மாற்றி, 2011–2012 ஆம் ஆண்டில் 115 இலட்சம் டன் என்ற உயர் இலக்கை இந்த அரசு நிர்ணயம் செய்திருந்தது. இந்த ஆண்டு தானே புயல் மற்றும் வெள்ளத்தால் பயிர்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். இருந்த போதிலும், இந்த அரசு முன்னுரிமை அளித்து எடுத்த உடனடி நடவடிக்கைகளால், 2011–2012 ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி **105 லட்சம் மெட்ரிக் டன்** என்ற அளவில் இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். **வரும் நிதியாண்டில் உணவு தானிய உற்பத்தி இலக்கினை 120 லட்சம் மெட்ரிக் டன் என இந்த அரசு நிர்ணயித்துள்ளது.**

30. 2011–2012 ஆம் ஆண்டில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 483 கோடி ரூபாய் செலவில் புதிய திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **2012–2013 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 500 கோடி ரூபாய் வரவு–செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2011–2012 ஆம் ஆண்டு 25.03 இலட்சம் ஏக்கர் என்று இருந்த திருந்திய நெல் சாகுபடி பரப்பு 2012–2013 ஆம் ஆண்டு 27.55 இலட்சம் ஏக்கர் என உயர்த்தப்படும். வரும் ஆண்டில் 15,000 ஏக்கரில் நவீன கரும்பு சாகுபடி உற்பத்தி திட்டம்** (sustainable sugarcane initiative) **செயல்படுத்தப்படும். பயறு உற்பத்தியை அதிகரித்திட, திருந்திய பயறு சாகுபடி முழு கிராம அடிப்படையில் 1.6 லட்சம் ஏக்கர் பரப்பில் செயல்படுத்தப்படும்.** வேளாண் உற்பத்தித் திறனை உயர்த்த, தரமான விதைகள் கிடைக்கும் வகையில், உயர் ரகங்கள், வீரிய ரகங்களுக்கான விதைகளை பெருமளவில் உற்பத்தி செய்து வழங்குவதற்காக தனியார் உற்பத்தியாளர்களையும் இணைத்து ஒரு திட்டம் செயல்படுத்தப்படும். 2011–2012 ஆம் ஆண்டில், தேசிய தோட்டக்கலை இயக்கம் ரூபாய் 145 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தியை பெருக்குவதற்கான இந்த அரசின் முயற்சிகள் தொடரும். **2012–2013 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு 150 கோடி ரூபாயாக இருக்கும். இந்த வரவு–செலவுத் திட்டத்தில் மாநிலத்தின் பங்காக 21.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு இதற்கென செய்யப்பட்டுள்ளது.**

31. நமது விவசாயிகளின் விளை பொருள்களுக்கு, போதிய, நியாயமான, உத்தரவாதமான விலை கிடைப்பதை உறுதிப்படுத்தும் நோக்கோடு, **மத்திய அரசு நெல்லுக்கு நிர்ணயித்த அடிப்படை ஆதரவு விலையை விடக், கூடுதலாக, குவிண்டால் ஒன்றுக்கு சாதாரண ரகத்திற்கு 50 ரூபாயும், சன்ன ரகத்திற்கு 70 ரூபாயும் ஊக்கத்**

**தொகையாக மாநில அரசு வழங்கி வருகிறது. இதனால் மொத்த விலையாக குவிண்டால் ஒன்றுக்கு சாதாரண ரகத்திற்கு 1,130 ரூபாயும், சன்ன ரகத்திற்கு 1,180 ரூபாயும் விவசாயிகளுக்கு கிடைக்க வழி ஏற்பட்டுள்ளது.** மாநில அரசின் இந்த உற்பத்தி ஊக்கத் தொகைக்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், கரும்புக்கு, போக்குவரத்துக் கட்டணங்கள் உள்ளிட்ட மாநில அரசின் பரிந்துரை விலை டன் ஒன்றுக்கு 2,100 ரூபாய் என உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. **2012–2013 ஆம் ஆண்டில் விலைகள் பற்றிய தகவல்களை பரவலாக்க வேளாண் சந்தை தகவல்கள்– வர்த்தக மேம்பாட்டு மையம் ஒன்று திருச்சியில் அமைக்கப்படும். இந்த மையத்தின் மூலமாக, பயிர் சாகுபடி, சந்தை நிலவரம் குறித்த அறிவுரைகள் விவசாயிகளுக்குக் கிடைக்க வழிவகை செய்யப்படும்.**

32. வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் உற்பத்தி இழப்புகளிலிருந்து பயிர் காப்பீடு, விவசாயிகளை பாதுகாக்கிறது. காப்பீட்டுத் தொகையில் மாநில அரசின் பங்கு, விவசாயிகளுக்கு வழங்கப்படும் கூடுதல் இழப்பீட்டுத் தொகை ஆகியவற்றுக்காக அரசு 252.65 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. 2010–2011 ஆம் ஆண்டில் 8.18 லட்சமாக இருந்த பயிர்க் காப்பீடு செய்த விவசாயிகளின் எண்ணிக்கையானது, 2011–2012 ஆம் ஆண்டில் 8.48 லட்சமாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். **வரும் நிதியாண்டில் 10 லட்சம் விவசாயிகளை பயிர்க் காப்பீட்டின் கீழ் கொண்டுவர இந்த அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.**

33. சிறந்த நீர் மேலாண்மையையும், பயிர் பலவகைப்படுத்துதலையும் ஊக்குவிப்பதற்காக, நுண்ணீர் பாசனத் திட்டங்களுக்கு, சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தையும், மற்ற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தையும் இந்த அரசு வழங்கி வருகிறது. 2011–2012 ஆம் ஆண்டில் 1,12,500 ஏக்கர் பரப்பு நுண்ணீர்

பாசனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. **2012–2013 ஆம் ஆண்டில் 1.73 லட்சம் ஏக்கர் பரப்பில் இதனைச் செயல்படுத்திட முடிவெடுக்கப்பட்டு, இதற்கான மானியமாக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் 75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகளுக்கு மானியத்தை நேரடியாக வழங்கி, நுண்ணீர் பாசன கருவிகளை நிறுவும் நிறுவனத்தை அவர்களே தேர்ந்தெடுக்கவும், மூன்றாவது அமைப்பின் ஆய்வுகளின் (third party inspection) மூலமாக நிதியுதவி சரியாகப் பயன்படுத்தப்படுவதை கண்காணிக்கவும் வகை செய்யும் புதிய திட்டமுறை வரும் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.**

**34.** அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்புகளைக் குறைக்கும் நோக்கோடு, நபார்டு கடன் உதவியைப் பயன்படுத்தி, 274.97 கோடி ரூபாய் செலவில் சேமிப்பு வசதிகளையும், சந்தை வசதிகளையும் மேம்படுத்துவதற்கான உன்னத முயற்சியை இந்த அரசு தொடங்கியுள்ளது. இப்பணிகள் வரும் நிதியாண்டில் முடிக்கப்படும். **2012–2013 ஆம் ஆண்டில், நபார்டு கடன் மூலமாக சேமிப்பு, சந்தை வசதிகளை மேம்படுத்த, இந்த அரசு மேலும் 300 கோடி ரூபாய் முதலீடு செய்யும். விவசாயிகள்–தனியார் துறை பங்கேற்பின் மூலமாக வேளாண் பொருள் பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவிக்கும் இந்த அரசின் முயற்சி தொடரும்.**

**35.** உர மானியக் கொள்கையில் மத்திய அரசு மேற்கொண்டுள்ள தவறான முடிவுகளின் காரணமாக உரங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. மத்திய அரசின் இத்தகைய மாற்றங்களை இந்த அரசு மிக வன்மையாக எதிர்க்கிறது. உரங்களுக்கான மதிப்புக் கூட்டு வரியிலிருந்து விலக்களித்து மாநில அரசு விவசாயிகளின் சுமையை ஓரளவு குறைப்பதற்கான தனது பங்கினை ஆற்றியுள்ளது. விவசாயிகளுக்கு சாதகமாக இருக்கும் வகையில் புதிய உரக் கொள்கையில் மத்திய அரசு தகுந்த மாற்றங்களை செய்திட வேண்டும்

என்று வலியுறுத்துகிறோம். உரங்களை, குறிப்பாக பாஸ்பேட் உரங்களை குறைந்த விலையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்வதற்காக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. **விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் நியாயமான விலையில் உரங்கள் கிடைப்பதை உறுதி செய்திட, இந்த இணையத்திற்கு வழங்கப்படும் வட்டி இல்லாக் கடன் வரும் நிதியாண்டில் 150 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

36. 2011–2012 ஆம் ஆண்டு கூட்டுறவு நிறுவனங்கள் வாயிலாக பயிர்க் கடன் வழங்க நிர்ணயிக்கப்பட்ட 3,000 கோடி ரூபாய் இலக்கில் இதுவரை 8,68,000 விவசாயிகளுக்கு 3,113 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. பயிர் கடனுக்கான கூடுதல் தேவையைக் கருத்தில் கொண்டு, **2012–2013 ஆம் ஆண்டில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் பயிர்க் கடன் இலக்கை 4,000 கோடி ரூபாயாக இந்த அரசு உயர்த்தி நிர்ணயித்துள்ளது. கடனை முறையாக திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு, இப்பயிர்க் கடன் வட்டியில்லாக் கடனாக அளிக்கப்படும். இந்த வட்டிச் சலுகைக்காக, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் 160 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.**

## கால்நடைப் பராமரிப்பு

37. விவசாயிகளுக்கு நிலையான வருவாய் வாய்ப்பை ஏற்படுத்திட, கால்நடை-பால் உற்பத்தித் துறையின் வளர்ச்சி இன்றியமையாததாகும். தேர்தல் அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், கிராமப்புற ஏழை மக்களுக்கு விலையில்லா கறவை பசுக்கள், வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தினை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த ஆண்டில், மாநிலத்தில் பால் உற்பத்தி குறைவாக உள்ள கிராமங்களில், 12,000 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை பசுக்கள்

வழங்கப்பட்டுள்ளன. மாநிலத்தின் பால் உற்பத்தியை அதிகரிக்க இந்த முயற்சி பெரும் உதவிபுரிந்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஒரு இலட்சம் நிலமற்ற ஏழை கிராமப்புற பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த, தலா நான்கு வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. **இந்த முன்னோடித் திட்டங்கள் வரும் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 2012–2013 ஆம் ஆண்டில் மேலும் 12,000 பயனாளிகளுக்கு கறவைப் பசுக்களும், 1.5 லட்சம் ஏழைப் பெண்களுக்கு தலா நான்கு வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வழங்கப்படும். இந்த திட்டத்திற்காக, 2012–2013 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 244 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

38. பசுந்தீவனத் தட்டுப்பாட்டை குறைக்கும் நோக்கத்தோடும், கால்நடைகளின் உற்பத்தித் திறனை, குறிப்பாக கறவை மாடுகளின் பால் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காக இந்த அரசு ஒரு பெரும் தீவன உற்பத்தித் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. **2011–2012 ஆம் ஆண்டில், 24,000 ஏக்கர் பரப்பில் தீவன உற்பத்தி செய்ய 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. விவசாயிகளிடையே மகத்தான வரவேற்பைப் பெற்றுள்ள இத்திட்டம், 2012–2013 ஆம் ஆண்டிலும் 20 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

39. மாநிலத்தின் பால் மற்றும் இறைச்சி உற்பத்தியை உயர்த்திட தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், தமிழகத்தின் மேற்கு மாவட்டங்கள் கோழி வளர்ப்புத் தொழிலில் பெற்றுள்ள வெற்றியை மற்ற பகுதிகளுக்கும் கொண்டு செல்ல இந்த அரசு விரும்புகிறது. ஆண்டொன்றிற்கு 1,080 கோடி முட்டைகளை உற்பத்தி செய்து, நாட்டின் முட்டை உற்பத்தியில் தமிழகம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. மேலும், நாட்டின் கோழிகளின் எண்ணிக்கையில் 17.71 சதவீதம் தமிழகத்தில் உள்ளது. கிராமப்புற ஏழை மக்களுக்கு, சுற்றுப்புற

சூழலுக்குக் குந்தகமின்றி அதிக வருவாயை ஈட்டித் தரக்கூடிய, இலாபகரமான தொழிலாக கோழி வளர்ப்புத் தொழில் உருவெடுத்து வருகிறது. **இதனைக் கருத்தில் கொண்டு, வணிக ரீதியில் நாட்டுக் கோழி வளர்ப்பதை ஊக்குவிக்கும் வகையில், மாநிலம் முழுவதும் சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். மேலும், நாமக்கல் பகுதியில் இருப்பதை போன்று, சங்கரன்கோயில் மற்றும் விழுப்புரம் பகுதிகளிலும், கறிக்கோழி மற்றும் முட்டைக் கோழி வளர்ப்பினை ஊக்குவித்து, கோழிப் பண்ணைகளை அமைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.**

40. மாநிலத்தில் உள்ள கால்நடைத் துறை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும்பொருட்டு, பல நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துள்ளது. 2011–2012 ஆம் ஆண்டில், 585 கால்நடை துணை மையங்கள் கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதோடு, நபார்டு கடன் உதவியின் மூலமாக மாநிலமெங்கும் உள்ள கால்நடை விரிவாக்கக் கட்டமைப்பை வலுப்படுத்த, 122 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டது. 2011–2012 ஆம் ஆண்டில், தற்போதுள்ள கால்நடை மருத்துவமனைகளிலும், சிகிச்சை மையக் கட்டடங்களிலும், பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒரு சிறப்பு ஒதுக்கீடாக 25 கோடி ரூபாய் அளிக்கப்பட்டது. **2012–2013 ஆம் ஆண்டில் தேவைப்படும் இடங்களில் மேலும் 20 புதிய கால்நடை மருந்தகங்கள் மற்றும் 50 கால்நடை துணை மையங்கள் தொடங்கப்படும். கால்நடைப் பாராமரிப்புத் துறைக்கு 2010–2011 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைக் காட்டிலும் இருமடங்காக உயர்த்தி 2012–2013 ஆம் ஆண்டில் 814.03 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.**

## மீன் வளம்

41. 2011 ஆம் ஆண்டு மே மாதம் இந்த அரசு பொறுப்பேற்றவுடன், மீன் பிடிப்புத் தடை காலத்தில் மீனவர்

குடும்பங்களுக்கு அளிக்கப்படும் நிவாரண உதவியை 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தி அறிவித்தது. இந்த திட்டத்தில், 2011–2012 ஆம் ஆண்டில் 1.58 இலட்சம் குடும்பங்களுக்கு 31.63 கோடி ரூபாய் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2012–2013 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இது தவிர, மீன்பிடிப்பு குறைவான காலங்களில், ஒவ்வொரு மீனவக் குடும்பத்திற்கும் 4,000 ரூபாய் கூடுதல் நிவாரண உதவி வழங்கும் புதிய திட்டத்தையும் அறிவித்தோம். இத்திட்டத்தின் கீழ், 1.7 லட்சம் குடும்பங்களுக்கு 2011–2012 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 70 கோடி ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டமும் வரும் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

42. மீன்களை சுகாதாரமான முறையில் கையாளவும், பதப்படுத்தவும் தேவையான வசதிகளை உருவாக்க, நீண்டகாலமாக நிலுவையிலிருந்த நாகப்பட்டினம், பழையாறு ஆகிய மீன்பிடித் துறைமுகங்களில் உள்ள கட்டமைப்பை மேம்படுத்தவும், கடலூர் மாவட்டத்தில் உள்ள அன்னன்கோயில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள நாகூர், திருமுல்லைவாசல் ஆகிய இடங்களில் புதிய மீன் இறங்குதளம் அமைக்கவும், 102.75 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளை இந்த அரசு தற்போது தொடங்கியுள்ளது. சென்னை மீன்பிடித் துறைமுகத்தை நவீனமயமாக்க, 16 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளும் துவங்கப்பட்டுள்ளன. **2012–2013 ஆம் ஆண்டில் தேசிய மீன் வள மேம்பாட்டு வாரியத்தின் உதவியோடு, 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடலூர் மீன்பிடித் துறைமுகத்தைத் தரம் உயர்த்தவும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சின்னமுட்டம் ஆகிய இடங்களில் உள்ள மீன்பிடித் துறைமுகங்களின் மேம்பாட்டுப் பணிகளும் 2012–2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.**

**மேலும், நபார்டு வங்கி நிதியுதவியுடன் 50 கோடி ரூபாய் செலவில் ஒன்பது மீன் இறங்கு தளங்கள் மேம்படுத்தப்படும்.**

43. மாநிலத்தின் தற்போதைய மீன் உற்பத்தியாகிய 5.97 இலட்சம் டன் அளவில், சுமார் 4.25 லட்சம் டன் கடல் மீன்பிடிப்பிலிருந்தும், 1.72 லட்சம் டன் உள்நாட்டு மீன்பிடிப்பிலிருந்தும் கிடைக்கின்றன. உள்நாட்டு மீன் உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கு தற்போதுள்ள உள்நாட்டு நீர்வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். **இதற்காக, உள்நாட்டு மீன் பிடிப்பை அதிகப்படுத்தும் வகையில் மீன் விதைப் பண்ணைகளில் தற்போதுள்ள வசதிகளை 2012–2013 ஆம் ஆண்டில் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது.** கடற்கரையை ஒட்டிய கடற்பகுதிகளில் அதிகமாக மீன்பிடித்தலை தவிர்க்கவும், ஆழ்கடல் மீன்பிடி முறைகளை ஊக்குவிக்கவும், தற்போதுள்ள மீன்பிடி விசைப் படகுகளை ஆழ்கடல் சூரை மீன்பிடி தூண்டில் படகுகளாக மாற்றுவதற்கும், ஆழ்கடலில் மீன் பிடிக்க வசதியான புதிய இயந்திரப் படகுகளை வாங்குவதற்கும், ஒரு பயனாளிக்கு 5 லட்சம் ரூபாய்க்கு மிகாமல், 25 சதவீத மானியத்துடன்கூடிய, நிதியுதவி வழங்கும் புதிய திட்டத்தை 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த அரசு தொடங்கி உள்ளது. இத்திட்டம் ஐந்தாண்டு காலத்தில் படிப்படியாக செயல்படுத்தப்படும்.

## பாசனமும், வெள்ளத் தடுப்பும்

44. நீர் ஓர் அரிய இயற்கை வாழ்வாதாரமாகும். நமது மாநிலத்தின் மேற்பரப்பு நீர், நிலத்தடி நீர் வளம் ஆகியவை குறைந்த அளவிலேயே உள்ளதால், இந்த நீர் ஆதாரங்களை ஒருங்கிணைத்து திறம்பட பயன்படுத்த, நீர் வடிநில மேலாண்மை, ஏரிகளின் கொள்ளவை உயர்த்துதல், நிலத்தடி நீரைச் செறிவூட்டுதல் ஆகியவற்றில் சிறப்புக்கவனம் செலுத்துவது அவசியமாகிறது. எனவே, அணைகள்,

ஏரிகள் ஆகியவற்றை மேம்படுத்தி அவற்றின் முழு கொள்ளளவுக்கு புனரமைத்தல், மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைத்தல், வெள்ளத் தடுப்பு, நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டங்கள், மானாவாரிப் பகுதிகளில் நீர்ப்பிடிப்புப் பகுதி மேலாண்மை, நீர் பயன்பாட்டுத் திறனை உயர்த்துதல் ஆகிய பணிகளுக்கு இந்த அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. **இந்த 2012–2013 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நீர்வள மேலாண்மைப் பணிகளுக்கென இதுவரை இல்லாத உயர் ஒதுக்கீடாக 3,624.73 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

45. பாசனத் துறையில் மிக அதிக அளவு முதலீடுகள் தேவைப்படுகின்றன என்பதை உணர்ந்து, இத்துறைக்கு வாய்ப்புள்ள வெளிநாட்டு நிதி உதவி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற இந்த அரசு முயற்சிகளை எடுத்துள்ளது. **நீர்வள ஆதாரத் துறையில் உள்ள 66 அணைகளையும், தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மான கழகத்திடம் உள்ள 38 அணைகளையும் உலக வங்கி உதவியுடன், அடுத்த ஆறு ஆண்டு காலத்தில் 745.49 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்த, அணைகள் புனரமைப்பு–மேம்பாட்டுத் திட்டம் வரும் 2012–2013 ஆம் ஆண்டிலிருந்து நான்கு கட்டங்களாக செயல்படுத்தப்படும். முதல் ஆண்டில், 12 நீர்வள ஆதாரத் துறையில் உள்ள அணைகள் மேம்படுத்தப்படும். இதற்காக இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் நீர்வள நிலவளத் திட்டத்தில், 1.32 லட்சம் ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில், அமராவதி உப வடிநிலம் 2012–2013 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டு, 128.31 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.**

46. 2006 ஆம் ஆண்டு பிப்ரவரி 27 ஆம் தேதி அன்று உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி, முல்லைப் பெரியாறு அணையின்

நீர்மட்டத்தை முதற்கட்டமாக 142 அடியாக உயர்த்த இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, உச்ச நீதிமன்றம் அமைத்துள்ள அதிகாரம் அளிக்கப்பட்ட குழு முன்பாக நமது தரப்பின் வாதங்களை இந்த அரசு வலுவாக முன்வைத்துள்ளது. இக்குழு விரைவில் தனது அறிக்கையை அளிக்க உள்ளது. இதுபோன்றே, காவிரி நதிநீர்ப் பிரச்சனையிலும் நமது உரிமைகளைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

47. மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டம் இந்த அரசின் கீழ் புதிய உத்வேகம் பெற்றுள்ளது. அண்மையில், தேச நலன் கருதி, நதிகளை இணைக்கும் தொலைநோக்குத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றமும் உத்தரவிட்டுள்ளது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். காவிரி – குண்டாறு இணைப்பின் ஒரு பகுதியாக காவிரி நதியின் குறுக்கே கட்டளையில் கதவணை அமைக்கும் பணி விரைவாக நடைபெற்று வருகிறது. இத்திட்டத்திற்காக 2012–2013 வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 369 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு இணைப்புத் திட்டமும் துரித செயலாக்கத்தில் உள்ளது. இத்திட்டத்திற்காக, 2012–2013 வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

48. நமது மாநிலத்தில் குறைவான அளவிலேயே நீர் ஆதாரம் உள்ளதால், நமது ஏரிகளின் கொள்ளளவை அதிகரிப்பது மிக முக்கியமானதாகும். **அனைத்துப் பாசன ஏரிகளையும் புனரமைத்து, அவற்றின் கொள்ளளவை ஏற்கெனவே இருந்த அளவிற்கு உயர்த்துவதற்கான ஒரு சிறப்புத் திட்டத்தை இந்த அரசு வகுத்துள்ளது. இதன்படி பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 13,699**

**ஏரிகளில், 6,436 ஏரிகளில் பல்வேறு திட்டங்களின் மூலம் ஏற்கனவே பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 7,263 ஏரிகளும் தற்போது நடைமுறையில் உள்ள பல்வேறு திட்டங்களின் கீழ் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும். இதுபோன்றே, ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டில் உள்ள 21,609 சிறு பாசன ஏரிகளும், 3,884 பிற முக்கிய நீர்நிலைகளும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் நபார்டு கடனுதவியுடன் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் மூலமாக அடுத்த மூன்று ஆண்டுகளில் மேம்படுத்தப்படும்.** பதிமூன்றாவது நிதிக்குழு அளித்துள்ள நிதியைப் பயன்படுத்தி, 200 கோடி ரூபாய் செலவில் பாரம்பரிய நீர்நிலைகளை புனரமைப்பதற்கான 674 பணிகள் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. 184.50 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தின் காண்டூர் கால்வாய்ப் பணிகள், 2013 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. நபார்டு கடனுதவியோடு செயல்படுத்தப்பட்டுவரும் நான்கு வெள்ளத் தடுப்புப் பணிகளை உள்ளிட்ட, 67 நீர் ஆதாரத் திட்டங்கள், 685.34 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **வரும் 2012–2013 ஆம் ஆண்டில், நபார்டு கடனுதவியுடன் நீர் ஆதாரங்களை புனரமைக்கவும், நவீனமயமாக்கவும் மேலும் 45 பணிகளை செயல்படுத்த உள்ளோம்.**

## சுற்றுச்சூழல், வனப் பாதுகாப்பு

49. நமது மாநிலத்தில், அருகிவரும் வனவிலங்குகளின் எண்ணிக்கையும், வனப் பரப்பும் அதிகரித்து வருகின்றன என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த ஆண்டு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் உதவியோடு தமிழ்நாடு பல்லுயிரினப் பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டத்தை 686 கோடி ரூபாய்

செலவில் செயல்படுத்த இந்த அரசால் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 2018–2019 ஆம் ஆண்டுவரை செயல்படுத்தப்பட உள்ள இந்த திட்டம், வனங்களை பாதுகாத்தல், பழங்குடியினர் மற்றும் காடுகளையொட்டி இருக்கும் பகுதிகளில் வசிப்போரின் சமூகப் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றின் வாயிலாக பல்லுயிரினங்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தும். வரும் நிதியாண்டில், இத்திட்டத்திற்காக 50 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பசுமைப் பரப்பை அதிகரிக்கும் நோக்கோடு, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளையொட்டி, 29.44 கோடி ரூபாய் செலவில் 64 லட்சம் மரக் கன்றுகளை நடும் பெரும் திட்டம் ஒன்றை இந்த அரசு தொடங்கியுள்ளது. **இதுவரை 32.9 லட்சம் மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. இது தவிர, வரும் நிதியாண்டில், 10,000 ஏக்கர் பரப்பிலான ஏரிப் பகுதிகளில் 9.80 கோடி ரூபாய் செலவில் வனத்துறை மரங்களை நட்டு பராமரிக்கும்.**

50. வனவிலங்குகளால் மக்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண, யானைத் தடுப்பு அகழிகள் போன்ற இடர் களைவுப் பணிகளுக்கு, 2011–2012 ஆம் ஆண்டில் 11.7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. வன விலங்குகள் மனிதர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு வராமல் தடுக்கும் வகையில், வனப்பகுதிகளிலேயே போதிய தீவனப் பயிர்களை வளர்க்க, 2011–2012 ஆம் ஆண்டில் 20.87 கோடி ரூபாய் நிதியொதுக்கப்பட்டது. வனவிலங்குகளால் ஏற்படும் உயிரிழப்பு, பயிர்ச் சேதம் ஆகியவற்றுக்கு அளிக்கப்படும் இழப்பீட்டையும் இந்த அரசு உயர்த்தியுள்ளது. இழப்பீடு வழங்குவதில் தாமதம் ஏற்படாமல் இருக்க, 2.50 கோடி ரூபாய் சுழல்நிதி ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. **யானைத் தடுப்பு அகழிகள் போன்ற தடுப்பு அரண்களை அமைப்பதற்கான கூடுதல் பணிகள் 2012–2013 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்படும். இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் 10 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.**

51. பிளாஸ்டிக் கழிவுகள் சேருவதன் மூலமாக ஏற்படும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைத் தடுப்பதற்காக, 2003–2004 ஆம் ஆண்டிலேயே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிளாஸ்டிக் சாலைகள் அமைப்பதற்கான தொழில்நுட்பத்தை முன்னோடியாக அறிமுகம் செய்தார்கள். இந்த சிக்கனமான, சுற்றுச்சூழலுக்கு உகந்த சாலை அமைக்கும் முறை மீண்டும் உயிரூட்டப்பட்டு, 2011–2012 ஆம் ஆண்டில் 50 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டதில், 446.5 கி.மீ. நீளமுள்ள சாலைகள் அமைப்பதற்கான நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. **சுற்றுச்சூழல் பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிதியின் கீழ், 2012–2013 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 100 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். பிளாஸ்டிக் சாலைகள் அமைக்கும் பணிக்கு உள்ள பெரும் வரவேற்பைக் கருத்தில் கொண்டு, வரும் நிதியாண்டில் இந்த நிதியிலிருந்து 100 கோடி ரூபாய் மதிப்பிலான பிளாஸ்டிக் சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

52. பள்ளிக்கரணை சதுப்பு நிலம் எளிதில் பாதிப்புக்குள்ளாகும் சுற்றுச்சூழல் தன்மை உடையதாகவும், 195 வகை உயிரினங்களுக்கு வாழ்விடமாகவும் திகழ்கிறது. இதனை பாதுகாக்கவும், சுற்றுச்சூழலை பராமரிக்கவும் 15.75 கோடி ரூபாய் செலவில் ஓர் ஐந்தாண்டுத் திட்டத்தைச் செயல்படுத்த இந்த அரசு ஏற்கெனவே ஒப்புதல் அளித்துள்ளது. வரும் ஆண்டில் இத்திட்டம் ஐந்து கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். அடையாறு முகத்துவாரத்தின் சுற்றுச்சூழல் சமநிலையை மீட்டெடுக்க தொடர்ந்து முயற்சிகள் எடுக்கப்படும். மேலும், மன்னார் வளைகுடா உயிரினக்கோளம் அறக்கட்டளைக்கான ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் உதவி, 2012 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களோடு முடிவடையும் நிலையில், இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கான நிதியை இந்த அரசு வழங்கும்.

## பொது விநியோகத் திட்டம்

53. தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியின்படி, 1.6.2011 முதல், 1.85 கோடி அரிசி அட்டைதாரர்கள் பயன்பெறும் வகையில், பொது விநியோகத் திட்டத்தின் மூலம் விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். நாட்டிலேயே அனைவருக்கும் முழுமையான உணவுப் பாதுகாப்பு அளிக்கும் இத்தகைய திட்டத்தைச் செயல்படுத்தியுள்ள ஒரே மாநிலம் தமிழகம் மட்டும்தான். துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு ஆகியவற்றையும் சலுகை விலையில் இந்த அரசு வழங்கி வருகிறது. **2012-2013 ஆம் ஆண்டில், உணவு மானியத்திற்காக 4,900 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.** இந்த அரசால் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஏற்படுத்தப்பட்ட விலை கட்டுப்பாடு நிதியம் மூலம், இந்த ஆண்டில், மிளகாய்வற்றல், புளி ஆகியவற்றை வாங்கி அடக்க விலையிலேயே விற்பனை செய்து, வெளிச் சந்தையில் அவற்றின் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டது.

## தொழில் துறை

54. மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் உற்பத்தித் துறையின் பங்கு 2004-2005 ஆம் ஆண்டில் 20 விழுக்காடாக இருந்து, 2009-2010-ல் 17 விழுக்காடாகக் குறைந்திருப்பது கவலை அளிக்கிறது. வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், சேவைத் துறையில் வளர்ச்சியை ஏற்படுத்துவதிலும், உற்பத்தித் துறை மிக முக்கியப் பங்காற்றுவதால், 2023 ஆம் ஆண்டுக்குள் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் உற்பத்தித் துறையின் பங்கு 23 சதவீத அளவிற்கு உயர்த்தப்பட வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதி கொண்டுள்ளார்.

ஆசியாவில் முதலீட்டிற்கு உகந்த முதல் மூன்று இடங்களில் ஒன்றாகவும், இந்தியாவிலேயே முதலீட்டிற்கு மிக உகந்த இடமாகவும் தமிழ்நாடு திகழ வேண்டும் என்பதும் அவருடைய தொலைநோக்குப் பார்வையாகும். இதனை எய்தக் கூடிய வகையில் புதிய தொழில் கொள்கையை இந்த அரசு விரைவில் வெளியிடும். தற்போதுள்ள தொழில் கொள்கையில் உள்ள குறைபாடுகளை நீக்கி, வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், வளர்ச்சிக்கு வழிவகுக்கவும் இப்புதிய கொள்கை முக்கியத்துவம் அளிக்கும். மேலும், முதன்மைத் துறையினுடைய உற்பத்திக்கு அதிக மதிப்புக் கூட்டப்படும் வகையிலும், அத்துறையில் உள்ள மிகுதிப் பணியாளர்களை ஈர்த்துக் கொள்ளும் வகையிலும், வேளாண் துறை, அதைச் சார்ந்த துறைகளோடும் உற்பத்தித் துறை ஒருங்கிணைந்து வளர்ச்சி பெறுவதை இப்புதிய கொள்கை உறுதி செய்யும்.

55. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்றது, தமிழ்நாட்டில் முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்களிடையே ஒரு புதிய ஆர்வத்தையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசின் சாதகமான அணுகுமுறையால், மிகப் பெரும் நிறுவனங்களாகக் கருதப்படும் 'பார்சூன் 500' நிறுவனங்கள் பல தமது உற்பத்தித் தளங்களை தமிழகத்தில் அமைக்க உத்தேசித்துள்ளனர். **யமாஹா, எய்ச்சர், டான்பாஸ், என்பீல்டு, சுந்தரம்–கிளேட்டன், டி.ஐ. குழுமம், செயின்ட் கோபெய்ன், சன்மினா–எஸ்.சி.ஐ, பிலிப்ஸ் கார்பன் லிமிடெட், நோக்கியா** போன்ற பல்வேறு நிறுவனங்களின் பெரும் முதலீடுகள் மாநில அரசின் ஒப்புதல் பெறுவதற்கான இறுதி கட்டத்தில் உள்ளன. இத்திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் விரைவில் கையெழுத்திடப்பட உள்ளன. இவை தவிர, மேலும் 11 நிறுவனங்களின் முதலீட்டுத் திட்டங்களை முடிவு செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன. அடுத்த ஆறு மாதங்களில், உற்பத்தித் துறையில் சுமார் 20,000 கோடி ரூபாய்

அளவிற்கு முதலீடுகளை ஈர்க்க முடியும் என இந்த அரசு நம்பிக்கை கொண்டுள்ளது.

56. திருவள்ளூர் மாவட்டம் வயலூரில், 160 கோடி ரூபாய் முதலீட்டில் பாலிமர் மாற்றுத் தொழில் பூங்காவை அமைக்க தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் உத்தேசித்துள்ளது. பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க, மேலும் 20,000 ஏக்கர் அளவிலான நில வங்கியை ஏற்படுத்தும் பணியில் சிப்காட் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. **தொழில் வளர்ச்சிக்கு உகந்த வழித்தடங்களை ஊக்குவிக்கும் வகையில், எண்ணூர் துறைமுகத்திற்கான இணைப்பை மேலும் வலுப்படுத்தவும், வடசென்னைப் பகுதியில் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கவும், வடக்கு துறைமுக இணைப்புத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும். இத்தோடு தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் சென்னை வெளிவட்டச் சாலை–II, எண்ணூர்–மணலி சாலை மேம்பாட்டுத் திட்டம் ஆகியன வடசென்னையின் சாலைக் கட்டமைப்பை மேம்படுத்தும் என நம்புகிறேன்.**

## சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள்

57. இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையில் தமிழ்நாட்டில்தான் ஏழு லட்சம் பதிவு செய்யப்பட்ட சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் உள்ளன. அவை ஏறத்தாழ 50 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை அளிக்கின்றன. **இத்துறைக்குப் புத்துயிரூட்டுவதை இந்த அரசு நோக்கமாகக் கொண்டுள்ளதால், 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட தொழில் மையங்கள் ரூபாய் 50 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு, சிறு குறு, நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவும் முக்கிய மையங்களாக செயல்பட வழிவகை செய்யப்படும். புதிய இடங்களில் தொழில் தொகுப்புகளை ஊக்குவிப்பதோடு, ஒரு நீண்டகாலத் தீர்வாக சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் பரவலாக**

குடியிருப்புப் பகுதிகளோடு கலந்துள்ள பகுதிகளிலிருந்து, அவை தொழிற்பேட்டைக்குள் இடம் மாறுவதை ஊக்குவிக்கும் வகையில் தொழிற்பேட்டைகளை அமைத்து, அவ்வாறு குறிப்பிட்ட தொழிற்பேட்டைகளுக்குள் இந்த நிறுவனங்கள் இடம் மாறி, சிறந்த கட்டமைப்பு மற்றும் தடையற்ற மின்விநியோகம் ஆகியவற்றைப் பெறவும், மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பின்பற்றவும், குடியிருப்புப் பகுதிகளில் உள்ள மாசுப் பிரச்சனைகளுக்கு ஒரு தீர்வு ஏற்படவும் வழிவகை ஏற்படுத்தப்படும்.

58. படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில் முனைவோராக மாற்ற உதவும் நோக்குடன் புதிய தொழில் முனைவோர், தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டம் என்ற புதிய திட்டத்தை 2012–2013 ஆம் ஆண்டு முதல் அரசு செயல்படுத்தும். இத்திட்டத்தில், படித்த இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டு, தொழில் தொடங்க திட்டங்கள் தயாரித்து நிதிநிறுவனங்களில் நிதியுதவி பெற உதவுவதுடன், பெரும் தொழில் நிறுவனங்களுடன் அவர்களுக்கு வணிகத் தொடர்பும் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்படும். வங்கிகள், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியவற்றிலிருந்து, 25 லட்சம் ரூபாய்க்கு மிகாத 25 சதவீத முதலீட்டு மானியமும், மூன்று சதவீத வட்டிக் குறைப்புடன் கூடிய கடனும் பெற உதவி செய்யப்படும். ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தில் 1,000 தொழில் முனைவோருக்குப் பயிற்சி அளிக்கப்படும். இதில் 50 விழுக்காடு பெண்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இப்பணிகளில் தொழில் முனைவோர் பயிற்சி நிறுவனமும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமும் முக்கியப் பங்கு வகிக்கும். இத்திட்டத்தின் கீழ், முதலீட்டு மானியம் மற்றும் இதர உதவிகளுக்கு 100 கோடி ரூபாய், இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஜவுளித் துறை

**59.** திருப்பூரில் உள்ள பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், கழிவுநீரே வெளியேராத நிலையை ஏற்படுத்தத் தவறிய காரணத்தால் மூடப்பட்டு, ஜவுளித் தொழில் முற்றிலுமாக முடங்கி, லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்விழக்கக்கூடிய நிலை ஏற்பட்டது. இந்தத் துயர நிலையைக் கருத்தில் கொண்டு நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, கழிவுநீரே வெளியேறாத நிலையை எட்டுவதற்கான வசதிகளை ஏற்படுத்தி, இந்த பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மீண்டும் செயல்பட வைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 200 கோடி ரூபாய் வட்டியில்லா கடனாக வழங்கப்படும் என அறிவித்தார்கள். இதன் அடிப்படையில் 18 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மீண்டும் இயக்க 179.34 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அது தவிர, நொய்யல் ஆயக்கட்டு விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்காக 75 கோடி ரூபாய் முன்பணமாக விடுவிக்கப்பட்டு, 475 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். விரைவில், இந்த பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மீண்டும் செயல்படத் தொடங்கி இத்தொழில் மீண்டும் புத்துயிர் பெறும் என நம்புகிறேன்.

## தகவல் தொழில்நுட்பம்

**60.** 2010–2011 ஆம் ஆண்டில் ரூபாய் 42,100 கோடியாக இருந்த நமது மாநிலத்தின் மென்பொருள் ஏற்றுமதி 2011–2012 ஆம் ஆண்டில் 48,000 கோடி ரூபாயாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வேகமான வளர்ச்சியை நிலைக்கச் செய்வதோடு, இதுவரை வளர்ச்சி பெறாத வன்பொருள் உற்பத்தி போன்ற துறைகளில் வளர்ச்சியை ஏற்படுத்துவதே இந்த அரசு எதிர்கொண்டுள்ள முக்கிய சவாலாகும். சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், ஓசூர்

ஆகிய இடங்களில் எல்காட் நிறுவனம் '**எல்கோசெஸ்**' (ELCOSEZ) என்ற சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைத்துள்ளது. திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் எல்கோசெஸ் பகுதிகளில் காலியாக உள்ள இடங்களிலும், புதிய நிறுவனங்களைத் தொடங்க முன்வரும் தொழில்முனைவோரை ஈர்க்க இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. மேலும், **இத்தகைய இடங்களில், சிறு மற்றும் நடுத்தர தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கென ஆரம்பகட்ட தொழில் அமைப்புகளை ஏற்படுத்தி தரவும், பயிற்சி மையங்கள் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.**

**61.** சென்னை தவிர, மாநிலத்தின் மற்ற பகுதிகள் அனைத்திலும் தமிழ்நாடு அரசு கம்பிவட தொலைக்காட்சி நிறுவனம் கம்பிவட சேவைகளைத் தொடங்கியுள்ளது. சுமார் 100 சேனல்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. இந்த சேவை, மக்களின் ஒட்டுமொத்த ஆதரவினைப் பெற்றுள்ளதால், வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை தற்போது 40 லட்சமாக உயர்ந்துள்ளது. விரைவில் டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலமாக சென்னைக்கும் இத்தகைய சேவைகள் விரிவுபடுத்தப்படும்.

## சாலைகள், சிறு துறைமுகங்கள்

**62.** அனைத்து மாநில நெடுஞ்சாலைகளை இருவழிச் சாலைகளாகவும், முக்கிய மாவட்டச் சாலைகளை இடைவழிச் சாலைகளாகவும் தரம் உயர்த்துவதற்கான மகத்தான பணியை செய்ய இந்த அரசு கொள்கை வகுத்து செயல்படும் என்பதை கடந்த வரவு–செலவுத் திட்டத்தில் தெரிவித்திருந்தோம். 2011–2012 ஆம் ஆண்டில், 546 கோடி ரூபாய் செலவில் 1,345 கி.மீ. சாலைகளில் இத்தகைய பணிகள் மேற்கொள்ளப்பட்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது.

**இதன் தொடர்ச்சியாக வரும் நிதியாண்டிலும், 740 கோடி ரூபாய் செலவில் 1,500 கி.மீ. நீளமுள்ள சாலைகள் அகலப்படுத்தப்படும்.** 257 கோடி ரூபாய் செலவில், தூத்துக்குடி–கன்னியாகுமரி சாலையை மேம்படுத்துவதற்கான பணிகள் விரைவில் தொடங்க உள்ளன. இதுதவிர 2,477 கி.மீ. நீளமுள்ள நெடுஞ்சாலைகளை மேம்படுத்துவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு வெளிநாட்டு நிறுவனங்களின் நிதியுதவி பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைக்கப் பெற்றபின் வரும் ஐந்தாண்டுகளில் இச்சாலைகள் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். நெடுஞ்சாலைத் துறைக்கு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் **5,651.68** கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**63.** சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள நெரிசலைக் குறைப்பதற்காக, **30.50** கி.மீ. நீளமுள்ள சென்னை புறவழிச் சாலையின் இரண்டாவது கட்டப் பணிகள் வெளிநாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் என இந்த அரசு ஏற்கெனவே அறிவித்திருந்தது. சென்னை நகரின் வேகமான வளர்ச்சியைக் கருதியும், இந்த திட்டத்தை விரைவில் செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டும், இந்தத் திட்டத்தை மாநில அரசின் நிதி மூலமாகவே, திட்டத்தை வடிவமைத்து, நிறைவேற்றி, நிதி திரட்டி, பராமரித்து ஒப்படைக்கும் முறை (DBFOT) யின் கீழ் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் விரைவில் தொடங்க உள்ளன.

**64.** சாலைகளை மேம்படுத்துவதோடு, அவற்றை தரமாகப் பராமரிப்பதற்கும் இந்த அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. இதற்காக, சாலைகளை சிறந்த முறையில் பராமரிக்க வகைசெய்யக்கூடிய, செயல்பாட்டின் அடிப்படையிலான சாலை பராமரிப்பு ஒப்பந்த முறையை அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சாலைகளை நன்கு பராமரிக்கத் தேவைப்படும் முழுமையான தகவல்களைப் பெற, அவற்றின் நிலையை மதிப்பிடக் கூடிய நவீன தகவல்

சேகரிப்பு இயந்திரங்கள் பயன்படுத்தப்படும். **வரும் நிதியாண்டில், சாலைப் பராமரிப்புப் பணிகளுக்காக மட்டும் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் 1,180.95 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

65. கிழக்குக் கடற்கரையோரத்தில் உள்ள சிறு துறைமுகங்களை மேம்படுத்திட இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. லார்சன் & டூப்ரோ நிறுவனத்தால் அமைக்கப்பட்டுவரும் காட்டுப்பள்ளி துறைமுகம், கப்பல் கட்டும் தொழில் வளர உதவுவதோடு, திரவ இயற்கை வாயு இறக்குமதிக்கும் உதவும். 380 கோடி ரூபாய் செலவில், அரசு–தனியார் ஒத்துழைப்பின் மூலம் நாகப்பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்துவதற்காக ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கடலூர் துறைமுக மேம்பாட்டிற்கான பணிகளும் விரைவில் தொடங்க உள்ளது. இதுபோன்ற முயற்சிகளால், துறைமுக வளர்ச்சியிலும், கப்பல் கட்டும் தொழிலிலும் ஒரு முன்னோடி மாநிலமாக தமிழகத்தை இந்த அரசு நிலைநிறுத்தும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## போக்குவரத்து

66. பெருமளவு அதிகரித்துள்ள எரிபொருள் விலைகளும், அதிகரித்துவரும் பராமரிப்பு மற்றும் சம்பளச் செலவினங்களும், மாநில போக்குவரத்து நிறுவனங்களை கடும் நிதி நெருக்கடியில் ஆழ்த்திவிட்டன. 2010–2011 ஆம் ஆண்டு இறுதியில், இந்நிறுவனங்களின் மொத்த இழப்பு 6,150 கோடி ரூபாயாக இருந்தது. 2011–2012 ஆம் ஆண்டில், இந்நிறுவனங்களின் உடனடி நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, வழிவகை முன்பணமாக 308.56 கோடி ரூபாயை அரசு அளிக்க நேரிட்டது. இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில்தான், பேருந்துக் கட்டணத்தை உயர்த்த வேண்டிய கட்டாயம் இந்த அரசுக்கு ஏற்பட்டது. இந்த கட்டண உயர்வு,

போக்குவரத்து நிறுவனங்களின் நிதிநிலைமையை ஓரளவு சீரடையச் செய்துள்ளன. இருப்பினும் இந்த நிறுவனங்களுக்கு அரசின் உதவி இன்னும் தேவைப்படும் நிலையிலேயே உள்ளது.

67. இந்த அரசு பதவியேற்ற பின், மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு 3,000 புதிய பேருந்துகளை வாங்க அனுமதி அளிக்கப்பட்டது. தற்போது, இந்நிறுவனங்களின் வசம் உள்ள பேருந்துகளின் சராசரி வயது 4.24 ஆண்டுகளாக உள்ளது. தற்போதுள்ள சேவைகளை சிறந்த முறையில் தொடரவும், தேவைக்கேற்ப புதிய வழித்தடங்களில் வாகனங்களை இயக்கவும், **548 கோடி ரூபாய் செலவில் 2012–2013 ஆம் ஆண்டிலும் 3,000 புதிய பேருந்துகள் வாங்கப்படும். இதற்காக, இந்த அரசு 150 கோடி ரூபாயை பங்கு மூலதன உதவியாகவும், 150 கோடி ரூபாயை கடனாகவும் வழங்கும். மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களிடம் உள்ள பேருந்து கட்டும் பணிக்கான கட்டமைப்புகளை முழுமையாக பயன்படுத்தும் வகையில், புதிய பேருந்துகளை உரிய கால இடைவெளியில் வாங்க நடவடிக்கை எடுக்கப்படும். நீதிமன்றங்களில் பிணையில் உள்ள 219 பேருந்துகளை மீட்பதற்காக, இந்நிறுவனங்களுக்குத் தேவையான நிதியுதவியை ஒருமுறை சிறப்பு நிதியுதவியாக இந்த அரசு வழங்கும். மேலும், பேருந்து நடத்துனர்களின் பணிச்சுமையைக் குறைக்கவும், பயணிகள் எளிதாக பயணச் சீட்டுகளை வாங்கவும், புவி நிலைக் காட்டி (Global Positioning System) வசதி கொண்ட கையடக்க இயந்திரங்களை பயன்படுத்தி மின்னணு பயணச் சீட்டு வழங்கும் முறை அனைத்து அரசு பேருந்துகளிலும் 2012–2013 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்படும்.**

68. சென்னை மோனோ ரயில் திட்டத்தின் முதற்கட்டப் பணிகளை செயல்படுத்துவதற்காக, சர்வதேச ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. 8,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 57 கி.மீ. நீளத்தில் அமைக்கப்பட உள்ள இத்திட்டம், கிழக்குத் தாம்பரம் வழியாக

வண்டலூரிலிருந்து வேளச்சேரி வரையிலும், போரூர் வழியாக பூந்தமல்லியிலிருந்து கத்திப்பாரா வரையிலும், வளசரவாக்கம் வழியாக பூந்தமல்லியிலிருந்து வடபழனி வரையிலும் செல்லக்கூடிய மூன்று வழித் தடங்கள் கொண்டதாக இருக்கும். திட்டத்தை வடிவமைத்து, நிறைவேற்றி, நிதி திரட்டி, பராமரித்து ஒப்படைக்கும் முறையின் கீழ் (DBFOT) இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதன் அடுத்த கட்டமாக, வண்டலூரையும், புழலையும் இணைக்கக்கூடிய 54 கி.மீ. நீளமுள்ள நான்காவது வழித்தடம் செயல்படுத்தப்படும். சென்னை மெட்ரோ இரயில் திட்டப் பணிகளும் மிகவேகமாக நடைபெற்று வருகின்றன. **இத்திட்டத்திற்காக, 2012–2013 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அண்ணா சாலை, ஈ.வே.ரா. பெரியார் சாலை ஆகிய வழித்தடங்களில் பொதுமக்கள் அதிக அளவில் பொதுப் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தும் வாய்ப்பை உயர்த்தும் நோக்குடன், போக்குவரத்து சார்ந்த வளர்ச்சியை ஏற்படுத்த (Transit Oriented Development) இந்த அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.**

69. ஒருங்கிணைந்த சென்னை மாநகரப் போக்குவரத்து அமைப்பினை இந்த அரசு செயலாக்கத்திற்கு கொண்டுவந்துள்ளது. பேருந்துகள், புறநகர் ரயில், அதிவேக மக்கள் திரள் போக்குவரத்து (MRTS), மோனோ ரயில், மெட்ரோ ரயில் உள்ளிட்ட பல்வேறு பொதுப் போக்குவரத்து வசதிகளை ஒருங்கிணைப்பதே இதன் நோக்கமாகும். அனைத்து பொதுப் போக்குவரத்து முறைகளுக்கும் பொதுவான பயணச் சீட்டு முறையைக் கொண்டுவந்து, அனைத்து முறைகளிலும் பொதுமக்கள் தடையின்றி எளிதாக பயணிக்க இந்த ஆணையம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். மேலும், **சென்னை மாநகர வளர்ச்சி குழுமம் மேற்கொண்ட சென்னை போக்குவரத்து ஆய்வறிக்கையின் அடிப்படையில், இணைப்புச் சாலைகள், விடுபட்ட சாலைகள், சாலைகளை**

**அகலப்படுத்துதல், மேம்பாலங்கள், உயர்மட்டச் சாலைகளை அமைத்தல் ஆகிய பணிகளையும் படிப்படியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதியுதவியைக் கோர உள்ளோம்.**

## மின்சக்தித் துறை

70. மின்சக்தித் துறையில் தமிழ்நாடு நெருக்கடியான சூழ்நிலையை சந்தித்து வருகிறது. மொத்தத் தேவையில் நமது சொந்த உற்பத்தித் திறன் 30 சதவீதம் மட்டுமே உள்ள சூழ்நிலையில், மற்ற ஆதாரங்களைச் சார்ந்தும், அதிக விலை கொடுத்தும் மின்சாரத்தைப் பெறவேண்டிய சூழ்நிலை உள்ளது. தேவைக்கும் விநியோகத்திற்கும் இடையே உள்ள பெரும் இடைவெளி காரணமாக, மின்வினியோக அமைப்பின் நிலைத் தன்மையை பராமரிப்பதற்காக மின் வினியோகத்தை கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டியுள்ளது. வெளி மாநிலங்களில் கிடைக்கும் மின்சாரத்தை நமது மாநிலத்திற்கு கொண்டு வருவதற்கான மின் வழித்தட வசதிகளில் நெருக்கடி உள்ளதால், மின்சாரத்தை வெளியிலிருந்து கொண்டு வருவதற்கும் வழிவகை இல்லை. எனவே, தற்போது நமது மாநிலத்திலேயே அமைக்கப்பட்டு வரும் திட்டங்களைத் துரிதப்படுத்தியும், மாநில அரசு மூலமாகவோ கூட்டு முயற்சிகள் மூலமாகவோ புதிய திட்டங்களை தொடங்கியும், நமது மாநிலத்தின் சொந்த மின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கு இந்த அரசு முக்கியத்துவம் அளித்துவருகிறது. பாரத மிகுமின் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்த 1,600 மெகாவாட் உடன்குடி உயர் அழுத்த நிலை அனல் மின்நிலையத் திட்டம், நான்கு ஆண்டுகளாகியும் தொடங்கப்படாத நிலை உள்ளதால், அக்கூட்டு முயற்சியைக் கைவிட்டு, மாநிலத் திட்டமாகவே 8,000 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும் என

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் அறிவித்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். புதிய மின் உற்பத்தித் திட்டங்களுக்காக பங்கு மூலதன உதவியாக இந்த 2012–2013 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 1,500 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

71. தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மான கழகம் சந்தித்து வரும் கடும் நிதிநெருக்கடி குறித்து கடந்த வரவு–செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டிருந்தேன். இந்த நெருக்கடியிலிருந்து இக்கழகத்தை மீட்க போதிய நிதியுதவியை மாநில அரசு அளிக்கும் என்றும் நாங்கள் உறுதியளித்திருந்தோம். 2011–2012 ஆம் ஆண்டு இக்கழகத்திற்கு மானியமாக மாநில அரசு 2,058.19 கோடி ரூபாய் வழங்கியது. தானே புயலால் கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில், மின்சார கட்டமைப்பிற்கு ஏற்பட்ட பெரும் சேதத்தை சரிசெய்ய, மாநில அரசு 300 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கியது. இது தவிர, பங்கு மூலதன உதவியாக 4,100 கோடி ரூபாயும், கடனாக 1455.16 கோடி ரூபாயும் வழங்கப்பட்டது. இவ்வாறு, ஒரு நிதியாண்டிலேயே, இதுவரை வழங்கப்படாத அளவாக தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மான கழகத்திற்கு 7913.35 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. **ஏற்கெனவே உறுதியளித்தவாறு, புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக இக்கழகத்திற்கு பங்கு மூலதன உதவியை தொடர்ந்து அளிப்போம். இக்கழகத்திற்கான மானிய உதவிக்காக 2012–2013 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 3,068.78 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

72. மின்சார சேமிப்பை ஊக்குவிப்பதையும், மின்சாரத்தை கொண்டு செல்வதிலும், விநியோகிப்பதிலும் ஏற்படும் இழப்புகளை குறைப்பதற்காகவும், மின்விநியோக அமைப்புகளை மேம்படுத்துவதை, இந்த அரசு முக்கிய பணியாக மேற்கொள்ளும். இத்தகைய மின்இழப்பை குறைக்கும் நோக்கத்தோடு, மாற்றியமைக்கப்பட்ட விரைவுபடுத்தப்பட்ட

மின்சக்தி வளர்ச்சி, புனரமைப்புத் திட்டத்தை, தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மான கழகம் செயல்படுத்தி வருகிறது. **மேலும், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதியுதவியோடு, 3,572.93 கோடி ரூபாய் செலவில் மின் பகிர்மான கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.** மின் திருட்டைக் கட்டுப்படுத்துவதற்காக, முன்னாள் படைவீரர்களைக் கொண்ட 40 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டு, இந்த ஆண்டு 17.76 கோடி ரூபாய் மதிப்பிலான மின்திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. **மின்சாரத்தை சேமிப்பதற்கான ஒரு முக்கிய முயற்சியாக, 14.62 கோடி ரூபாய் செலவில், 14.62 இலட்சம் குடிசை வீடுகளில் உள்ள இழை பல்புகளுக்கு பதிலாக விலையில்லா சி.எப்.எல்.** (CFL) **பல்புகள் அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதனால் 45 மெகாவாட் மின்சாரம் சேமிக்க வாய்ப்பு ஏற்படும். மின் பயன்பாட்டின் அடிப்படையில், குறிப்பிட்ட பெரிய கட்டட வளாகங்களிலும், வணிக கட்டடங்களிலும் மின் சிக்கனத்திற்கான கட்டுமானக் கோட்பாட்டை அமல்படுத்துவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும். இதனால் 30 சதவீத மின் சேமிப்பு ஏற்பட்டு, 10 லட்சம் சதுர அடி பரப்பிற்கு மூன்று மெகாவாட் அளவிற்கு மின்சேமிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு ஏற்படும்.**

73. காற்றாலைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியை கொண்டுசெல்லத் தேவையான கட்டமைப்பை மேம்படுத்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கென, மத்திய அரசிடமிருந்து நிதியுதவியும் கோரப்பட்டுள்ளது. 2011–2012 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் அவ்வீடுகளுக்கு சூரிய மின்விளக்குகள் அளிக்கும் திட்டமும், சூரிய ஒளி சக்தியில் இயங்கும் தெரு விளக்குகளை அமைக்கும் திட்டமும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். **2012–2013 ஆம் ஆண்டில் மேலும் 60,000**

**வீடுகளுக்கு சூரிய மின்விளக்குகள் 180 கோடி ரூபாய் செலவில் அளிக்கப்படும். அதேபோல், மேலும் 20,000 தெரு விளக்குகளுக்கு 50 கோடி ரூபாய் செலவில் சூரிய ஒளி மின்வசதி அளிக்கப்படும். நமது மின் தேவைகளை நிறைவு செய்வதற்கு நீண்டகாலத் திட்டங்களாக, சூரிய ஒளி மின்சக்தி பூங்காக்கள், கடலோரங்களிலும், கடல் பரப்பிலும் அமைக்கப்படும் காற்றாலை திட்டங்கள், 'பயோமாஸ்' அனல் மின் உற்பத்தித் திட்டங்கள் ஆகிய திட்டங்களுக்கு இந்த அரசு தொடர்ந்து ஊக்கமளிக்கும்.**

## நகர்ப்புர வீட்டுவசதி

74. குடிசைப் பகுதிகளில் உள்ள அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும், அங்கு வசிப்பவர்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டுவதற்கும் இந்த அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. தற்போது 535 கோடி ரூபாய் செலவில் 19,083 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. பதிமூன்றாவது நிதிக்குழு மானியம் மற்றும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு இயக்கம் ஆகியவற்றின் நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தி, 2012–2013 ஆம் ஆண்டில் 817.5 கோடி ரூபாய் செலவில் 18,234 கூடுதல் குடியிருப்புகள் கட்டப்படும். **நிலங்களின் மதிப்பு உயர்ந்து வரும் நிலையில் ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு வீடுகள் வாங்குவது ஒரு எட்டாக் கனியாக உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு கூடுதல் கட்டணம் எதுவுமின்றி, குறைந்த, நடுத்தர வருவாய் பிரிவினருக்கான வீடுகள் கட்டுவதற்கான தளபரப்பளவு குறியீடு (FSI) அதிகரிக்கப்படும். இதனால் இத்தகைய வீடுகளின் விலை குறைய வாய்ப்புள்ளது.**

75. தேர்தல் வாக்குறுதிகளில் வீட்டுவசதி கூட்டுறவு கடன் சங்கங்களில் வீட்டு கடன் பெற்றவர்களுக்கு, அவர்களின் கடன் சுமையைக் குறைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற ஒரு

வாக்குறுதியையும் அளித்திருந்தோம். **அந்த வாக்குறுதியை நிறைவேற்றிடவும், கடன் பெற்றவர்களுக்கு உதவி செய்யும் நோக்குடனும், குறைந்த வருவாய் பிரிவினருக்கான வட்டித் தள்ளுபடியை 50 சதவீதத்திலிருந்து 75 சதவீதமாகவும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வட்டித் தள்ளுபடியை 25 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாகவும், உயர் வருவாய்ப் பிரிவினருக்கான வட்டித் தள்ளுபடியை 10 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகவும் உயர்த்தி, புதிய வட்டித் தள்ளுபடி திட்டத்தை அறிமுகப்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. அபராத வட்டி முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும். இத்திட்டம் 30.9.2012 வரை நடைமுறையில் இருக்கும். இதனால் வட்டி இழப்பிற்கான நிதியுதவியாக அரசுக்கு 390 கோடி ரூபாயும், அபராத வட்டித் தள்ளுபடியால் கூட்டுறவு அமைப்புகளுக்கு 545 கோடி ரூபாயும் இழப்பு ஏற்படும். இது 1.14 லட்சம் பயானாளிகளுக்கு பயனளிப்பதோடு, கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் 665 கோடி ரூபாய் நிலுவைக் கடன்களை வசூலிக்கவும் உதவும்.**

## சுற்றுலா, பண்பாடு

76. மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதை கருத்தில் கொண்டு, கிராமப்புற சுற்றுலா, சுற்றுச் சூழல் சுற்றுலா, பாரம்பரிய–வழிபாட்டுச் சுற்றுலா, ஒருங்கிணைக்கப்பட்ட வழித்தட சுற்றுலா ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கான திட்டங்களை இந்த அரசு அறிவித்துள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன், **ஒருங்கிணைந்த சுற்றுலா கட்டமைப்புத் திட்டத்தைச்** செயல்படுத்துவதற்கான கடன் ஒப்பந்தத்தில் இந்த அரசு விரைவில் கையெழுத்திட உள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கிழக்குக் கடற்கரை ஆன்மீக – பாரம்பரிய சுற்று, தெற்கு ஆன்மீக – சுற்றுச்சூழல் சுற்று ஆகிய இரு சுற்றுகளில் உள்ள சுற்றுலாக்

கட்டமைப்பை இத்திட்டம் மேம்படுத்தும். 2012–2013 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்கு 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த அரசு எடுத்த முன்னோடி முயற்சிகளால், நமது மாநிலத்திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை பெருமளவில் உயர்ந்துள்ளது. 2011 ஆம் ஆண்டில் நமது மாநிலத்திற்கு 13.67 கோடி உள்நாட்டு சுற்றுலா பயணிகளும், 33.08 லட்சம் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் வருகை தந்துள்ளனர். இது 2010 ஆம் ஆண்டைவிட 22.38 சதவீதம் அதிகமாகும்.

77. **சுற்றுலா வாய்ப்புகளைக் கண்டறிந்து முழுமையாக பயன்படுத்திட, மாநில அளவிலான தொலைநோக்கு சுற்றுலா திட்ட அறிக்கை ஒன்றை இந்த அரசு தயாரிக்கும். சிறப்பு சுற்றுலா பகுதி என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள, முட்டுக்காட்டிலிருந்து புதுச்சேரி வரை உள்ள கிழக்குக் கடற்கரைச் சாலை பகுதியில், சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காக விரிவான திட்ட அறிக்கை ஒன்றை இந்த அரசு தயார் செய்யும். அந்த அறிக்கையின் அடிப்படையில், கிழக்கு கடற்கரைத் வழித்தடத்தில் தேவையான கட்டமைப்புகளை மேம்படுத்தி, குறிப்பிட்ட சுற்றுலாத் திட்டங்களைச் செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த வழித்தடத்தில் சிறப்பு சுற்றுலாத் திட்டங்களைச் செயல்படுத்திட, வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளைத் தளர்த்துவது குறித்தும் இந்த அரசு பரிசீலிக்கும்.**

## இந்து சமய அறநிலையத் துறை

78. கோயில்கள், வழிபாட்டுத் தலங்களை பாதுகாத்து பராமரிக்க இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. 2011–2012 ஆம் ஆண்டு 1,006 திருக்கோயில்கள் புதுப்பிக்கப்பட்டு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளன. **இதே போன்று, வரும் ஆண்டிலும் 1,006 கோயில்கள் தெரிவுசெய்து குடமுழுக்கு செய்யப்படும்.**

தவறாக வகைமாற்றம் செய்யப்பட்ட மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட கோயில் சொத்துகளை மீட்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. **கோயில் சொத்துகளை விரைந்து மீட்பதற்காகவும், கோயில் நிலங்கள் குறித்த வழக்குகளை தீர்ப்பதற்காகவும் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு வருவாய் அலகுகளும், வருவாய் நீதிமன்றங்களும் மேலும் வலுப்படுத்தப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிந்தையில் உதித்த உன்னதத் திட்டமாகிய 'அன்னதானத் திட்டம்' தற்போது 468 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2012–2013 ஆம் ஆண்டில் மேலும் 50 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்படும். இத்திட்டம் செயல்படுத்தப்படும் அனைத்துக் கோயில்களிலும், பக்தர்களுக்கு சுகாதாரமான உணவு அளிக்கும் வகையில், சமையற்கூடங்கள் நவீனப்படுத்தப்படும். ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலிலும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலிலும், காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை நாள் முழுவதும் தொடர்ந்து அன்னதானம் அளித்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

79. ஸ்ரீரங்கத்தில், 25 கோடி ரூபாய் செலவில் பயணியர் விடுதி அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். **பழநி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்காக, குறிப்பாக, முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள், பெண்கள், குழந்தைகள் ஆகியோருக்கு வசதியான நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கம்பிவட சீருந்து வசதி ஏற்படுத்தப்படும். இன்னொரு சிறப்பு முயற்சியாக, நமது பண்டைய இலக்கியங்களில் உள்ள நற்பண்பு, நீதிநெறிக் கருத்துகளை கதைகள் வாயிலாக குழந்தைகளின் மனத்தில் ஆழப்பதித்திட, சனிக்கிழமை தோறும் ஆன்மீக, நீதிநெறி வகுப்புகளை முக்கிய திருக்கோயில்களில் நடத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்**

**ஆணையிட்டுள்ளார்கள். இந்த வகுப்புகளின்போது சிற்றுண்டி அளிக்கப்பட்டு, சிறந்த மாணவ மாணவியருக்கு பரிசுகளும் அளிக்கப்படும்.**

## தமிழ் வளர்ச்சி

**80.** சிறந்த தமிழ் புத்தகங்களுக்கு அளிக்கப்படும் உதவி, தமிழ் அறிஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை, தமிழ் மொழித் திறன் போட்டிகளில் வெற்றிபெறும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை ஆகியவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீர்மிகு தலைமையின் கீழ் செயல்படும் இந்த அரசு பெருமளவு உயர்த்தியுள்ளது. ஏற்கெனவே அறிவித்தபடி, ஆராய்ச்சி மற்றும் பிற பணிகளை மேற்கொள்வதற்காக தமிழ்ப் பல்கலைகழகத்திற்கு கூடுதலாக 1.30 கோடி ரூபாயை இந்த அரசு வழங்கியுள்ளது. பாவேந்தர் பாரதிதாசன் விருது, திரு.வி.க. விருது, திருவள்ளுவர் விருது, பாரதியார் விருது, கி.ஆ.பெ.விசுவநாதம் விருது ஆகிய விருதுகள் மட்டுமன்றி, **பெரும் தமிழ் அறிஞர்களுக்கு கபிலர் விருது, உ.வே.சா. விருது என்ற இரண்டு புதிய விருதுகளும், தமிழ் மொழி வளர்ச்சிக்காக நமது நாட்டில் அருந்தொண்டாற்றும் தமிழ் அமைப்புகளுக்கு தமிழ்த் தாய் விருதும் வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.**

## செய்தி, விளம்பரத் துறை

**81.** பெருந்தலைவர்களின் நினைவிடங்களைப் பாதுகாப்பது, இளைய தலைமுறையினர் அவர்களின் நினைவினைப் போற்றி அவர்தம் வழிநடப்பதற்கு உதவுகிறது. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நினைவிடத்தையும், பேரறிஞர் அண்ணா நினைவிடத்தையும் 8.90 கோடி ரூபாய் செலவிலும், காந்தி மண்டபத்தை 12 கோடி ரூபாய் செலவிலும்

புதுப்பிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. **கன்னியாகுமரியில் உள்ள காமராஜர் மண்டபத்தையும், சென்னையில் உள்ள காமராஜர் இல்லத்தையும் புதுப்பிப்பதற்கான பணிகள் 2012–2013 ஆம் ஆண்டில் இந்த அரசு மேற்கொள்ளும்.**

82. **இளைய தலைமுறையினரின் திறனை மேம்படுத்தும் வகையில், 2012–2013 ஆம் ஆண்டிலிருந்து எம்.ஜி.ஆர். திரைப்பட–தொலைகாட்சிக் கல்லூரியில், உயிர்ப்பூட்டல்** (Animation) – **காட்சிப்பயன்** (Visual effect) **பற்றிய புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்படும். தமிழரசு அச்சகத்திற்கு 5.83 கோடி ரூபாய் செலவில் புதிய அலுவலகம் அமைக்கப்பட்டு, தரமான வெளியீடுகளை பிரசுரிக்கும் வகையில் இவ்வலுவலகத்திற்கு நவீன இயந்திரங்கள், சாதனங்கள் ஆகியவை வாங்கப்படும்.**

## மக்கள் நல்வாழ்வு

83. மருத்துவத் துறையில் நமது நாட்டில் முன்னோடி மாநிலமாக தமிழகம் தொடர்ந்து விளங்குகிறது. இதற்குச் சான்றாக, பச்சிளம் குழந்தைகளின் இறப்பு விகிதம் ஆயிரம் பிறப்புகளுக்கு 24 ஆகவும், பேறுகால பெண்கள் இறப்பு விகிதம் ஒரு லட்சம் பிறப்புகளுக்கு 79 ஆகவும் குறைந்துள்ளன. எதிர்பார்க்கப்படும் வாழ்வு காலம் ஆண்களுக்கு 71.8 ஆண்டுகளாகவும், பெண்களுக்கு 75.2 ஆண்டுகளாகவும் உயர்ந்துள்ளது. பல புதிய முயற்சிகள் மூலமாக, செயல்பாடுகளை மேலும் உயர்த்திட இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. 2012–2013 ஆம் ஆண்டிற்கு, இந்த அரசு மருத்துவத் துறைக்கு 5,569.28 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

84. 2012 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 11 ஆம் நாள் முதலமைச்சரின் விரிவாக்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டு திட்டத்தை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தில் காப்பீட்டுத் தொகை ஆண்டொன்றுக்கு ஒரு லட்சம் வீதம் நான்கு ஆண்டுகளுக்கு நான்கு இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. கூடுதலான நோய்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதோடு, நோய் கண்டுபிடிப்புக்கான செலவுகளையும் வழங்க இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், அரசு மருத்துவமனைகளின் பங்கினை மேலும் உயர்த்துவதற்கான சிறப்பு விதிமுறைகளும் கொண்டுவரப்பட்டுள்ளன. இதுவரை, 49.42 கோடி ரூபாய் மதிப்பிலான சிகிச்சைகளை 17,723 பயனாளிகள் பெற்று பயனடைந்துள்ளனர். 2012–2013 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

85. **டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், நாட்டிலேயே உயர்ந்த அளவான 12,000 ரூபாயாக நிதியுதவி உயர்த்தப்பட்டுள்ளது.** ஏழைப் பயனாளிகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ள இத்திட்டம், தாய் சேய் இருவரின் உடல் நலத்தைப் பேணிக் காக்க பேருதவி புரிகிறது. மூன்று தவணைகளில் இந்த உதவியை வழங்கும் முறை, பிரசவத்திற்கு முன்பும் பின்பும் அளிக்கப்படும் மருத்துவ கவனிப்பையும், குழந்தைகளுக்கான நோய்த் தடுப்புச் சேவையையும் மேலும் வலுப்படுத்த வழி செய்துள்ளது. **இத்திட்டத்திற்காக 720 கோடி ரூபாய் 2012–2013 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

86. கிராமப்புற பெண்களுக்கு விலையில்லா சானிடரி நாப்கின்களை அளிக்கும் புரட்சிகரமான திட்டத்தை இந்த அரசு அறிவித்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட உள்ள இத்திட்டம், பெண்களின் சுகாதார நிலையை மேம்படுத்துவதற்கும், எதிர்காலத்தில் சுகாதாரம் சார்ந்த பிரச்சனைகள்

அவர்களுக்கு ஏற்படாமல் தடுப்பதற்கும் வழிவகுக்கும். **இந்தியாவிலேயே முதல் முறையாக மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டுள்ள இந்த முன் முயற்சியின் மூலமாக, கிராமப்புறங்களில் உள்ள 10 வயதிலிருந்து 19 வயதிற்கு உட்பட்ட 41 லட்சம் வளரிளம் பெண்கள் பயன்பெறுவார்கள்.** பள்ளிகள், அங்கன்வாடிகள் மூலமாக இந்த சானிடரி நாப்கின்கள் வழங்கப்படும். வரும் நிதியாண்டில் இந்தத் திட்டத்திற்காக 55 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

87. **தேசிய கிராமப்புற சுகாதார இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களுக்காக, 2012–2013 ஆம் ஆண்டில் இந்த அரசு 950 கோடி ரூபாய் செலவிடும். தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாத வட்டாரங்களில், 20 ஆரம்ப சுகாதார நிலையங்கள் வரும் ஆண்டில் தரம் உயர்த்தப்படும்.** இந்த அரசின் முந்தைய ஆட்சிக் காலத்தின்போது தொடங்கப்பட்ட தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டம், வட்ட, மாவட்ட மருத்துவமனைகளில் பேறுகால மற்றும் குழந்தைகள் மருத்துவ சேவைகளை மேம்படுத்துவதில் பெரும் பங்கு வகித்துள்ளது. 2012–2013 ஆம் ஆண்டில், **இதற்காக 158 கோடி ரூபாய் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

88. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையின் கட்டமைப்புகளை வலுப்படுத்த பல்வேறு முன் முயற்சிகளை இந்த அரசு எடுத்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். கடந்த வரவு–செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறே, 385 வட்டாரங்களிலும் 29.36 கோடி ரூபாய் செலவில் நடமாடும் மருத்துவமனைத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. முப்பத்தியொரு தொலைதூர இடங்களில் தொலை மருத்துவ வசதிகளை வழங்குவதற்கு ஏதுவான பணிகள் நடைபெற்று வருகின்றன. 2012–2013 ஆம் ஆண்டில் புதிய முயற்சிகளாக, **மாவட்ட மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள அறுவைசிகிச்சை அரங்கங்கள் 20 கோடி ரூபாய் செலவில்**

**மேம்படுத்தப்படும். பத்து கோடி ரூபாய் செலவில் பிரேதப் பரிசோதனை நிலையங்களின் வசதிகள் மேம்படுத்தப்படும். போதிய நோய்க் கண்டுபிடிப்பு வசதிகளை உறுதி செய்யும் வகையில், 10 கோடி ரூபாய் செலவில் நோய் கண்டுபிடிப்புக் கருவிகள் வழங்கப்படுவதோடு, ஐந்து மருத்துவக் கல்லூரிகளுக்கு அரசு–தனியார் ஒத்துழைப்பு மூலமாக எம்.ஆர்.ஐ. கருவிகள் அளிக்கப்படும். கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள தீக்காய சிகிச்சைப் பிரிவு சிறப்பு உயர்நிலை மையமாக 5 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும். கிங் நிறுவனத்தில் திசு வங்கியை அமைப்பதற்கும், மீண்டும் தடுப்பூசி உற்பத்தியைத் தொடங்கவும், 5 கோடி ரூபாய் வழங்கப்படும். புற்றுநோய்க்கு சிறப்பு மருத்துவச் சிகிச்சைகளுக்கான தேவைகள் அதிகரித்துவருவதைக் கருத்தில் கொண்டு, மதுரை அரசு இராஜாஜி பொது மருத்துவமனையிலும், கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் தலா 15 கோடி ரூபாய் செலவில் மண்டல புற்றுநோய் சிகிச்சை மையங்கள் அமைக்கப்படும். மாநிலத்தின் தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் உள்ள புற்று நோயாளிகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க இவை பேருதவியாக இருக்கும். இது தவிர, வாய்ப் புற்றுநோய் அதிகம் ஏற்பட வாய்ப்புள்ளவர்களுக்கு பரிசோதனை செய்து நோயை ஆரம்பகட்ட நிலையிலேயே கண்டறிவதற்கான புதிய திட்டமும் தொடங்கப்படும்.**

## பள்ளிக் கல்வி

89. கல்வி உரிமைச் சட்டத்திற்கான விதிகளை, 2011 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் வெளியிட்டு, ஆறிலிருந்து பதினான்கு வயதிற்கு உட்பட்ட அனைத்து குழந்தைகளும் கல்வி கற்பதை உறுதி செய்வதில் முனைப்புடன் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. அரசுப் பள்ளிகளாயினும், தனியார் பள்ளிகளாயினும் அவற்றின் ஆரம்ப

சேர்க்கையில் 25 சதவீதத்தை, அப்பகுதிகளில் உள்ள பின்தங்கிய, ஒடுக்கப்பட்ட பிரிவினருக்கு ஒதுக்க வேண்டும் என குறிப்பிட்டிருப்பது இந்த விதிகளிலேயே முக்கிய அம்சமாகும். 2012–2013 ஆம் கல்வியாண்டிற்குள், 6 வயதிலிருந்து 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில், பள்ளி செல்லாதோர் அனைவரும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, நமது மாநிலம் 100 சதவீத பள்ளிச் சேர்க்கை அளவை எட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

90. அனைவருக்கும் ஆரம்பக் கல்வி அளிப்பதற்கான 'அனைவருக்கும் கல்வி இயக்கம்' இந்த நிதியாண்டில் 1,891.42 கோடி ரூபாய் செலவில், செயல்படுத்தப்பட்டு வருகிறது. கல்வியின் தரம், பள்ளிக் கட்டமைப்பு ஆகிய இரண்டு இனங்களில் இந்த இயக்கம் முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. **வரும் நிதியாண்டில், இந்த திட்டம் 2,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். இதில் மாநில அரசின் பங்களிப்பு 700 கோடி ரூபாயாகும்.** அனைவருக்கும் இடைநிலைக் கல்வி கிடைக்கச் செய்யும் நோக்கோடு தேசிய இடைநிலை கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2011–2012 ஆம் ஆண்டில், இத்திட்டம் 1,069.51 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, 710 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டு, பள்ளிக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இடைநிலைக் கல்வியை மேம்படுத்த இந்த திட்டத்திற்கு போதுமான நிதியுதவியை வழங்குமாறு மத்திய அரசை வலியுறுத்துவோம்.

91. மேல் வகுப்புகளில் படிக்கும் குழந்தைகள் இடைநிற்றலைக் குறைப்பதற்காக, அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் படிக்கும் அனைத்து மாணவ மாணவியருக்கும் சிறப்பு ஊக்கத் தொகை வழங்கும் முன்னோடித் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. 10 மற்றும் 11 ஆம் வகுப்பு படிப்பவர்களுக்கு தலா

1,500 ரூபாயும், 12–ஆம் வகுப்பு படிப்பவர்களுக்கு 2,000 ரூபாயும் அரசு நிதி நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டு, அவர்கள் பள்ளிப் படிப்பை முடித்த பின் வட்டியுடன் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு 313.13 கோடி ரூபாய், மாணவர்கள் பெயரில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. **வரும் நிதியாண்டில் 21.36 லட்சம் மாணவ மாணவியர் பயனடையும் வகையில் இத்திட்டத்திற்கு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் 366.70 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

92. தேர்தல் அறிக்கையில் உறுதியளிக்கப்பட்டவாறு, இந்த அரசு 2012–2013 ஆம் ஆண்டிலிருந்து பள்ளி மாணவ மாணவியருக்கு விலை ஏதுமின்றி நான்கு ஜோடி சீருடைகளை வழங்கும். மேலும், ஏற்கெனவே அறிவிக்கப்பட்டவாறு **ஆறாம் வகுப்பிலிருந்து பயிலும் மாணவர்களுக்கு அரைக்கால் சட்டைக்குப் பதிலாக முழுக் கால் சட்டையும், பெண்களுக்கு சல்வார் கமீசும் வழங்கப்படும். 48.63 லட்சம் குழந்தைகளுக்கு சீருடைகள் வழங்குவதற்காக இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 329.89 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல், ஒன்றாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து பள்ளிக் குழந்தைகளுக்கும் விலையில்லாக் காலணிகள் வழங்கும் திட்டத்தையும், 2012–2013 ஆம் ஆண்டிலிருந்து இந்த அரசு தொடங்கி செயல்படுத்தும். இத்திட்டத்திற்காக இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தால் 81 லட்சம் குழந்தைகள் பயனடைவார்கள்.**

93. கல்வி கற்கும் முறையை எளிதாக்கவும், குழந்தைகளுக்கு ஏற்றதாக மாற்றவும், 2012–2013 ஆம் ஆண்டில் சிறப்புக் கல்வி உபகரணங்கள் மாணவ மாணவியருக்கு அளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் **ஒன்றாம் வகுப்பிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்புவரை படிக்கும் மாணவ மாணவியருக்கு புத்தகப் பைகளும், ஆறாம் வகுப்பிலிருந்து**

**பத்தாம் வகுப்புவரை படிக்கும் மாணவ மாணவியருக்கு ஜியாமெட்ரி பெட்டிகளும், ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை படிக்கும் மாணவ மாணவியருக்கு வண்ணப் பென்சில்களும், ஆறாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்புவரை படிக்கும் மாணவ மாணவியருக்கு உலக வரைபடப் புத்தகமும் வழங்கப்படும். இதற்காக, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் 136.50 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மேற்குறிப்பிட்ட அத்தனைப் பொருள்களும் விலையில்லாமல் மாணவர்களுக்கு வழங்கிய பிறகு, மாணவர் தேவைக்கு எஞ்சியிருப்பது நோட்டுப் புத்தகங்கள் மட்டுமே. எனவே, நோட்டுப் புத்தகங்களையும் விலையில்லாமல் ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவியருக்கு வரும் கல்வி ஆண்டு முதல் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கென 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் பிற துறைகளுக்கு ஒதுக்கப்படும் தொகையைவிட அதிகமாக, எப்போதும் வழங்கப்படாத உயர் அளவாக, பள்ளிக் கல்வித் துறைக்கு இந்த 2012–2013 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 14,552.82 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளோம்.**

## உயர் கல்வி

**94.** உயர் கல்வியிலும், உயர் ஆராய்ச்சியிலும் முன்னணி மாநிலமாக தமிழகத்தை மாற்ற வேண்டும் என்பதே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பேரவா. ஏழைகளுக்கும் உயர் கல்வி தடையின்றி கிடைப்பதை உறுதி செய்திட, 2011–2012 ஆம் ஆண்டில் 11 புதிய கலை, அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் புதிய பொறியியல் கல்லூரி, ஸ்ரீரங்கத்தில் தேசிய தகவல் தொழில்நுட்ப நிறுவனம், தேசிய சட்டப் பள்ளி ஆகியவற்றை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. நமது

பல்கலைக்கழகங்களை சர்வதேச தரத்திற்கு உயர்த்தி அவற்றை நேர்த்திமிகு மையங்களாகவும், ஆராய்ச்சிகளை மேற்கொண்டு புதிய படைப்புகளை படைக்கும் மையங்களாகவும் மாற்றுவதற்கான முயற்சிகள் தொடரும். இத்தகைய புதுமைகளை உருவாக்கும் பணிகளில் ஈடுபடுவதற்கு, தொழில் துறையினரோடு இணைந்து செயல்பட இப்பல்கலைக்கழகங்கள் ஊக்குவிக்கப்படும்.

**95.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறன் மிக்க மனிதவள மேம்பாட்டில் அனைத்து மாநிலங்களிலும் முன்னணி மாநிலமாக தமிழகத்தை மாற்றிட நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்து வரும் முயற்சிகள் பற்றி நீங்கள் அறிவீர்கள். அரசு, அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் அனைத்து கல்லூரி மாணவர்களுக்கும், +2 மாணவர்களுக்கும் விலையில்லா மடிக்கணினி வழங்குவதற்கான பெருந்திட்டம் 2011–2012 ஆம் ஆண்டில் இந்த அரசால் தொடங்கப்பட்டது. 2012–2013 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த இந்த வரவு–செலவுத் திட்டத்தில் 1,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் உள்ள இளைய தலைமுறையினரிடையே தகவல் தொழில்நுட்பத் திறன் வேகமாக வளர்ந்திட அரசின் இம்முயற்சி பெரிதும் உதவும் என நம்புகிறேன்.

## இளைஞர் நலன், விளையாட்டு

**96.** அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பான விளையாட்டு கட்டமைப்பை ஏற்படுத்திட அரசு உறுதிபூண்டுள்ளது. இளைஞர்கள் விளையாட்டுகளில் அதிகளவு பங்கேற்பதை ஊக்குவிக்கும் வகையில், விருதுகள், ஊக்கத் தொகைகள், பயிற்சி உதவித் தொகைகள் ஆகிய அனைத்தையும் கணிசமான அளவிற்கு உயர்த்தியுள்ளோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். ஒரு கோடி ரூபாய் செலவில் சென்னையில் விளையாட்டு உயர்நிலை மையத்தையும்,

மூன்று கோடி ரூபாய் செலவில் 5 மாவட்டங்களில் விளையாட்டு வீரர்கள் தங்கும் விடுதிகளையும், 7.50 கோடி ரூபாய் செலவில் ஐந்து மாவட்டங்களில் பல்பயன்பாட்டு உள் விளையாட்டு அரங்கங்களும், ஆறு கோடி ரூபாய் செலவில் திருச்சியில் செயற்கை ஓடு தளத்தையும், ஆறு கோடி ரூபாய் செலவில் மதுரையில் செயற்கை தரையுடனான ஹாக்கி தளத்தையும் அமைத்திட இந்த அரசு ஏற்கெனவே ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகள் விரைவில் தொடங்க உள்ளன. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் 103.48 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஊரக வளர்ச்சி

97. கிராமப்புற கட்டமைப்பு மேம்பாடு, அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல், கிராமப்புற வறுமையை ஒழித்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய, முழுமையான ஊரக வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விருப்பம். 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து **தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்தை (THAI)** இந்த அரசு தொடங்கி, செயல்படுத்தி வருகிறது. அனைத்து கிராம குடியிருப்பு பகுதிகளிலும் அடிப்படை வசதிகளை ஐந்தாண்டு காலத்தில் மேம்படுத்தும் குறிக்கோளுடன் செயல்படுத்தப்படும் இந்த புதுமையான திட்டத்தில், 2011–2012 ஆம் ஆண்டில் 2,020 கிராம ஊராட்சிகளில் உள்ள 25,335 குடியிருப்பு பகுதிகளில் 64,481 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **வரும் நிதியாண்டில் இத்திட்டத்தில் 2,250 கிராம ஊராட்சிகளில் உள்ள 18,581 குடியிருப்பு பகுதிகளில் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த திட்டத்திற்காக 2012–2013 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 750 கோடி ரூபாயாக உயர்த்தி நிதி ஒதுக்கீடு**

**செய்யப்பட்டுள்ளது.** 2001–2006 ஆம் ஆண்டுகளில் அமைக்கப்பட்ட 12,811 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள், 2006–2011 ஆம் ஆண்டுகளில் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டு, பராமரிப்பின்றி பாழடைந்த நிலையில் பயன்படுத்தப்படாமல் இருந்தன. அவ்வாறு இருந்த இந்த சுகாதார வளாகங்கள், 170 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு, பயனாளிகள் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டதன் மூலமாக, கிராமப்புற சுகாதாரத்திற்கு இந்த அரசால் ஒரு புதிய ஊக்கம் கிடைத்துள்ளது.

98. மாண்புமிகு முதலமைச்சரின் சூரிய ஒளி மின்சக்தி வசதிபெற்ற பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தை செயல்படுத்தி, ஏழைகளுக்கான வீட்டு வசதித் திட்டங்களில் இந்த நாட்டிற்கே ஒரு நல்ல முன்னுதாரணத்தை இந்த அரசு உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 2011–2012 ஆம் ஆண்டு தொடங்கி, அடுத்த ஐந்து ஆண்டுகளில், மூன்று லட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு சூரிய ஒளி மின்சக்தி வசதியுடன் நல்ல இடவசதி உள்ள வீடுகள் கட்டி வழங்கப்படும் என ஏற்கெனவே அறிவித்திருந்தோம். இந்த ஆண்டு, தலா 1.80 லட்சம் செலவில், 1,080 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 60,000 புதிய வீடுகளைக் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. **வரும் நிதியாண்டிலும், 1,080 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேலும் 60,000 வீடுகள் கட்டப்படும்.** இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் ஒரு வீட்டிற்கான ஒதுக்கீட்டுத் தொகையை ஒரு லட்சம் ரூபாய் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி வழங்கியதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். இத்திட்டத்தில் மாநில அரசின் பங்காக 66,250 ரூபாய் வழங்கப்படுகிறது. இதில் மத்திய அரசின் பங்களிப்பு 33,750 ரூபாய் மட்டுமே. இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் 1,00,553 வீடுகள் இந்நிதியாண்டில் கட்டப்பட்டு வருகின்றன. **வரும் நிதியாண்டிலும் இந்த திட்டத்தின் கீழ் 1,00,553 வீடுகள் ஏழை குடும்பங்களுக்கென கட்டித் தரப்படும்.**

**இதற்கென 2012–2013–ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் 666 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**99.** சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீட்டினை 1.75 கோடி ரூபாயிலிருந்து இரண்டு கோடி ரூபாயாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள். இதுவரை இத்திட்டத்தின் கீழ் 296.98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11,093 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **வரும் நிதியாண்டில் இத்திட்டத்திற்கென 470 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## நகர்ப்புர வளர்ச்சி

**100.** தமிழ்நாட்டில் 48.45 சதவீத மக்கள் நகர்ப்புரங்களில் வசித்து வருகின்றனர். தமிழ்நாடு இந்தியாவிலேயே அதிக நகர்மயமான மாநிலமாகும். மக்கள் தொகை அதிகரிப்பதற்கு ஏற்றாற்போல் நகர்ப்புரங்களில் அடிப்படை வசதிகள் மேம்படவில்லை. இந்த அடிப்படை வசதிகளின் குறைபாடுகளைக் களையும் வகையில் '**ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்' (IUDM) மற்றும் 'சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்' (CMCDM)** என்ற இரு பெரும் திட்டங்கள் இந்த அரசால் தொடங்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித்திட்டத்தில், சென்னை தவிர இதர நகர்ப்புரப் பகுதிகளின் வசதிகளை மேம்படுத்த 750 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டது. இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த, **2012–2013 ஆம் ஆண்டிலும் 750 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்திற்கு 2011–2012 ஆம் ஆண்டில் 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் சென்னை மாநகராட்சி மூலம் 333.27 கோடி ரூபாய் அளவிற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. குடிநீர்

மேம்பாட்டுப் பணிகளுக்காக மீதமுள்ள தொகை பயன்படுத்தப்படுகிறது. **இத்திட்டத்திற்கென 2012–2013 ஆம் ஆண்டும் 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சியின் அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாடு கடந்த ஐந்து ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்டுள்ள நிலையினை கருத்தில் கொண்டு, அதன் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ஒரு சிறப்பு திட்டம் அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக வரும் நிதியாண்டில் ஒருமுறை சிறப்பு நிதி ஒதுக்கீடாக 250 கோடி ரூபாய் வழங்கப்படும்.**

101. நகர்ப்புர திடக்கழிவு மேலாண்மை திட்டங்களை செம்மையாக செயல்படுத்துவது உள்ளாட்சி அமைப்புகள் முன் உள்ள மிகப்பெரிய சவாலாகும். மாநிலத்தின் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் நாள்தோறும் 13,533 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் ஏற்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது. அரசு–தனியார் ஒத்துழைப்பு (PPP) அடிப்படையில் மதுரை, கோயம்புத்தூர், சேலம் மாநகராட்சிகளும், நாமக்கல் நகராட்சியும் விஞ்ஞான ரீதியிலான திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. இதே அரசு–தனியார் ஒத்துழைப்பு அடிப்படையில் திடக்கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை திருநெல்வேலியில் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. **மக்கக்கூடிய, மக்காத குப்பைகளை ஆரம்ப நிலையிலேயே பிரித்து செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மை முறை அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் படிப்படியாக செயல்முறைக்கு கொண்டுவரப்படும். ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை செயல் திட்டம் குறித்த கொள்கை ஒன்றினை அரசு விரைவில் அறிவிக்கும்.**

102. நகர்ப்புரங்களில், 2015 ஆம் ஆண்டிற்குள் பொது இடங்களில் மலம் கழிப்பதை முற்றிலும் ஒழிக்க அரசு உறுதி பூண்டுள்ளது. இதனை கருத்தில் கொண்டு புதிய பொதுக் கழிப்பிடங்கள் அமைக்கவும், தற்போதுள்ள பொதுக்கழிப்பிடங்களை புனரமைப்பு செய்யவும்,

கழிப்பிடங்களுக்கு நீர் வசதி, மின்சார வசதி செய்து தரவும், 198.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. 2011–2012 ஆம் ஆண்டில் 19.82 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. **இத்திட்டம் 2012–2013 ஆம் ஆண்டிலும் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். பொது இடங்களில் மலம் கழிப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களிடையே தீவிர விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்படும்.**

103. நகர்ப்புரங்களிலுள்ள கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக, குறைந்த வட்டி விகிதத்தில் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடன் வழங்கும் வகையில், உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்–III, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்ப்புர கட்டமைப்புத் திட்டம், ஜெர்மானிய வளர்ச்சி வங்கி வாயிலாக (KfW) செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீடித்தும் நிலைக்கும் நகர்ப்புர கட்டமைப்பு நிதித் திட்டம் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. **பன்னாட்டு நிதி நிறுவனங்களின் உதவியோடு செயல்படுத்தப்படும் இந்த திட்டங்களுக்காக, வரும் நிதியாண்டில் 418.54 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** தமிழ்நாடு நகர்ப்புர கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் (TNUIFSL), தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) ஆகிய நிதி நிறுவனங்கள் நகர்ப்புர கட்டமைப்பை மேம்படுத்த தொழில் நீரியான கலந்தறிதலில் நிபுணத்துவம் பெற்றுள்ளன. இந்நிறுவனங்களின் கலந்தறிதல் உதவியுடன் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தொழில்நுட்ப செயல்திறனை மேம்படுத்தி, கடினமான பெரிய கட்டமைப்பு திட்டங்களை உருவாக்கி செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

104. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சொத்து வரியை உரிய அளவில் விதித்து அதன்மூலம் தங்களது வருவாயை முழுமையாக ஈட்ட

இயலவில்லை என்பதை அரசு உணர்ந்துள்ளது. இதனை கருத்தில் கொண்டு, பதிமூன்றாவது நிதிக் குழுவின் **பரிந்துரைகளின் அடிப்படையில், மாநில அளவிலான சொத்து வரி வாரியம் ஒன்றினை உருவாக்க அரசு உத்தேசித்துள்ளது. இவ்வாரியம், தற்போதுள்ள சொத்துவரி விதிப்பு முறை குறித்து ஆய்ந்து, சரியான முறையில் சொத்துக்களின் மதிப்பினை கணக்கீடு செய்வதற்கும், சீரான முறையில் சொத்துவரி விதிப்பதற்கும் உரிய பரிந்துரைகளை வழங்கும்.**

## உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்வு

**105.** அரசின் சொந்த வருவாய் வரியிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதிப் பகிர்வு குறித்த தனது பரிந்துரைகளை நான்காவது மாநில நிதிக்குழு சமர்ப்பித்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. நான்காவது மாநில நிதி குழுவின் பரிந்துரைகள் மீது முடிவு எடுக்கும் வரை கடந்த ஆண்டு வழங்கப்பட்ட நிதிப் பகிர்வு அளவின் அடிப்படையிலேயே தொடர்ந்து நிதியுதவி வழங்க அரசு முடிவு எடுத்துள்ளது. **உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதிப் பகிர்வு 2012–2013 ஆம் ஆண்டில் 7,014 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், பதின்மூன்றாவது நிதிக்குழு பரிந்துரையின் அடிப்படையில் 1,159.85 கோடி ரூபாய் உள்ளாட்சி அமைப்புகளுக்கென வரும் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## குடிநீர் வழங்கல்

**106.** சென்னை மாநகரின் குடிநீர் தேவையை நிறைவு செய்யும் வகையில், குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்தும் முக்கிய பணிகளுக்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்கிறது. **330 கோடி ரூபாய் திட்ட**

**மதிப்பீட்டில், ஒரு டி.எம்.சி. அடி கொள்ளளவு கொண்ட புதிய ஏரி ஒன்றை திருவள்ளூர் மாவட்டம் தேர்வாய்கண்டிகையில் உருவாக்குவதற்கான ஆரம்பகட்டப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.** இந்தப் பணிகள் 2014 ஆம் ஆண்டில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. **இது தவிர, திருக்கண்டலத்தில், புதிய நீர்நிலை அமைக்கும் பணிகள் 2012–2013 ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.** நேமம், போரூர், அயனம்பாக்கம் ஏரிகள் மறுசீரமைக்கும் பணி, சோழவரம் ஏரியினை ஆழப்படுத்தும் பணி, ஆகிய நீர் சேமிப்பு அளவை அதிகரிக்கும் பணிகள் 130 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்தில் உள்ளன. சென்னை நகரின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் தேவையை நிறைவு செய்ய திருவொற்றியூர், மதுரவாயல், அம்பத்தூர், உள்ளகரம்–புழுதிவாக்கம், நெற்குன்றம், ஆலந்தூர், போரூர் பகுதிகளில் குடிநீர் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

107. நடப்பு நிதியாண்டில், தேசிய ஊரக குடிநீர்த் திட்டம், தமிழக அரசின் குறைந்தபட்ச தேவைகள் திட்டம் ஆகியவற்றின் கீழ், 6,000 ஊரகக் குடியிருப்பு பகுதிகளில் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. **வரும் நிதியாண்டில், மேலும் 7,000 ஊரகக் குடியிருப்பு பகுதிகளில் குடிநீர் வசதிகள் மேம்படுத்தப்படும். இதற்கென, 566.35 கோடி ரூபாய் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் விரைவாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென 2012–2013 ஆம் ஆண்டில் 730 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீரங்கம் வட்டம் கம்பரசம்பேட்டையில் காவிரியின் குறுக்கே தடுப்பணை ஒன்று 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்தடுப்பணையின் வாயிலாக, குடிநீர் பற்றாக்குறை உள்ள ராமநாதபுரம், சிவகங்கை

மாவட்டங்களுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம், திருச்சி குடிநீர் திட்டம் ஆகிய திட்டங்களின் நீர் ஆதாரம் மேம்படும்.

**108.** நகர்ப்புரங்களில் பெருமளவு அதிகரித்துவரும் குடிநீர் தேவை, தூய்மையான நீர் ஆதாரங்களின் மீது அதிக அழுத்தத்தை ஏற்படுத்தி வருகிறது. எனவே, நீர் ஆதாரங்களை நீட்டித்து நிலைக்கக்கூடிய வகையில் பராமரிக்க, தூய்மையான நீரை பாதுகாக்க நீரை மறுசுழற்சி செய்து பயன்படுத்தினால் மட்டுமே முடியும். இந்த அரசு கழிவு நீரை மறுசுழற்சி செய்து குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்குப் பயன்படுத்துவதை ஒரு கொள்கையாக ஊக்குவிக்கும். நாள் ஒன்றுக்கு நாற்பத்தைந்து மில்லியன் லிட்டர் கொள்ளளவுடன் கூடிய எதிர் சவ்வூடு பரவும் முறையில் (reverse osmosis) சுத்திகரிப்பு செய்யத்தக்க மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் ஒன்றினை **90** கோடி ரூபாய் செலவில் கோயம்பேட்டில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. **இது போன்று, மேலும் பல திட்டங்களை அரசு–தனியார் கூட்டு முயற்சி மூலம் மேற்கொண்டு, கழிவுநீரை சுத்திகரித்து தொழிற்சாலைகளின் பயன்பாட்டிற்கு அளித்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். நீர் ஆதாரங்கள் மற்றும் நீர் வழிப் பாதைகளில் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் கலப்பதைத் தடுக்க, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீவிர கவனம் செலுத்தி வருகிறார்கள். சென்னை நகரில் உள்ள நீர் வழிப்பாதைகளில் கழிவு நீர் கலக்கக் கூடிய 337 இடங்களில், அத்தகைய கழிவு நீர் ஆறுகளில் கலப்பதற்கு முன்னர் தடுத்து, சுத்திகரிப்பு செய்ய 300 கோடி ரூபாய் செலவில் திட்டங்களை நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.**

## தொழிலாளர் நலன்

**109.** தொழிலாளர் நலத்துறையின் கட்டுப்பாட்டில் தற்போது **17** தொழிலாளர் நல வாரியங்கள் செயல்பட்டு வருகின்றன. **2011–2012** ஆம்

ஆண்டில், 4,13,118 பயனாளிகளுக்கு, 86.87 கோடி ரூபாய் அளவிற்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் பயன்கள் தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு எவ்வித சிரமுமின்றி கிடைத்திட, அவர்களது வங்கி கணக்குகளிலேயே முழுத்தொகையும் நேரடியாக வழங்கப்படும் வகையில் திருச்சி, காஞ்சிபுரம், கோயம்புத்தூர், திருவள்ளூர், தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில், டிசம்பர் 1, 2011 முதல் ஒரு முன்னோடி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுதவிர, தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்கள் அனைவரும் முதலமைச்சரின் விரிவாக்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். பீடி தொழிலாளர்களுக்கான திருத்தி அமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த வீட்டுவசதித் திட்டத்தில் வீடு கட்டுவதற்கான மாநில அரசின் பங்கு 5,000 ரூபாயிலிருந்து 60,000 ரூபாயாக உயர்த்தி, ஒரு அலகிற்கான மொத்த மதிப்பீடு 45,000 ரூபாயிலிருந்து ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

## ஆதி திராவிடர், பழங்குடியினர் நலன்

110. ஆதிதிராவிட, பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்கு நமது அரசு சிறப்பு முன்னுரிமை வழங்கி வருகிறது. **2012–2013 ஆம் ஆண்டில் பட்டியலினத்தவருக்கான துணைத் திட்டத்திற்காக, இதுவரை எப்போதும் ஒதுக்கப்படாத அளவில் 6,108.60 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது, ஆதிதிராவிடர் நலனில் இவ்வரசு கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகிறது. இது மாநிலத்தின் ஆண்டு திட்ட ஒதுக்கீட்டில் 21.82 சதவீதம் ஆகும். இதன் முழு பயன்களும் ஆதிதிராவிடர்களைச் சென்றடையும் வகையில் அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும்.**

111. ஆதிதிராவிடர், பழங்குடியினரின் கல்வி வளர்ச்சிக்கு இந்த அரசு முக்கியத்துவம் வழங்கி வருகிறது. அரசு விடுதிகளில் தங்கிப் படிக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவ–மாணவியர்களுக்கான மாத உணவுப்படியை 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாகவும், இதே போன்று கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ–மாணவியர்களுக்கான மாத உணவுப்படி 550 ரூபாயிலிருந்து 750 ரூபாயாகவும் இந்த அரசு உயர்த்தியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். **இச்செலவினங்களுக்கென 2012–2013 ஆம் ஆண்டில் 76.76 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

112. **இந்த சமுதாயத்தைச் சார்ந்த மாணவ மாணவியர் பத்தாம் வகுப்பு வரை படிப்பதற்கான கல்வி உதவி தொகைத் திட்டம் (**pre-matric scholarship**) மற்றும் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான கல்வி உதவி தொகைத்திட்டம் (**post matric scholarship**) ஆகிய திட்டங்களுக்கு வரும் நிதியாண்டில் 331.31 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக, அங்கீரிக்கப்பட்ட சுய நிதி கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் மூலம், இலவச மற்றும் கட்டணம் செலுத்தும் இடங்களில் இடம் பெற்று பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவ–மாணவியர்களுக்கும், மெட்ரிக் படிப்புக்கு மேல் உள்ள படிப்புக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை வழங்கப்படுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.**

113. தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் ஆதிதிராவிட மாணவ மாணவியர் விடுதிகள் அனைத்திற்கும் சொந்த கட்டடங்கள் கட்ட அரசு உத்தேசித்துள்ளது. இந்த நிதியாண்டில் 49 விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. **மீதமுள்ள 44 விடுதிகளும் 2012–2013 ஆம் ஆண்டில் 'நபார்டு' வங்கியின் ஊரக கட்டமைப்பு வளர்ச்சி நிதி கடன் மூலம் கட்டப்படும். 1,080 மாணவ–மாணவியர் விடுதிகளில் உள்ள**

**இன்றியமையா கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 83.40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒரு முன்முயற்சியாக, கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்கள் தரையில் படுத்துறங்குவதை முற்றிலும் தவிர்க்க, 2012–13 ஆம் ஆண்டில் கட்டில் வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.**

**114.** பட்டியலினத்தவரின் வறுமை மற்றும் வேலைவாய்ப்பின்மை ஆகியவற்றை நீக்குவதற்கான சிறந்த அமைப்பாக தாட்கோ நிறுவனம், பயன்படுத்தப்படும். தாட்கோ நிறுவனத்தின் பங்கு மூலதனத்தினை அதிகரிக்கும் நோக்குடன் **13.26** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ளது. **ஆதிதிராவிடர் மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக சிறப்பு மத்திய நிதி உதவி திட்டத்திலிருந்து 2012–2013 ஆம் ஆண்டில் 82 கோடி ரூபாய் செலவிடப்படும். சிறப்பு மத்திய நிதி உதவி திட்டத்தில் 5.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை புத்துயிரூட்டப்பட்டு செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படும்.**

**115.** பழங்குடியினர் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முழுமையான வகையில் மேம்படுத்துவது இந்த அரசின் முக்கிய நோக்கமாகும். **2012–2013 ஆம் ஆண்டில் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கு 349.31 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மொத்த ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டில் 1.25 சதவீதம் ஆகும். பழங்குடியினர் இன மக்களின் மேம்பாட்டிற்கு நிதியுதவியை கணிசமாக உயர்த்தும் நோக்கில், வரும் நிதியாண்டில் 'ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்' ஒன்று செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் கல்வி கட்டமைப்புகள், வீட்டுவசதி, சாலை மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியன மேம்படுத்தப்படும். இது தவிர, பழங்குடியினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, வருவாய் ஈட்டும் வாய்ப்புகள் ஏற்படுத்தித் தருவதற்கும்,**

**பழங்குடியின இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையிலான திட்டங்களை செயல்படுத்தவும், பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களை வலுப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். தற்போது செயலாக்கத்திலுள்ள பல்வேறு உள்கட்டமைப்பு மேம்பாடு, வறுமை ஒழிப்புத் திட்டங்களோடு ஒருங்கிணைத்து இத்திட்டம் செயல்படுத்தப்படும். இந்த முன்னோடி திட்டத்திற்கு 2012–2013 ஆம் ஆண்டில் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

## பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலன்

**116.** ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவர்களுக்கு உயர்த்தி வழங்கப்பட்டது போலவே பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் பள்ளி விடுதிகளில் படிக்கும் மாணவ–மாணவியர்களுக்கான மாத உணவுப்படி 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாகவும், கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ–மாணவியர்களுக்கான மாத உணவுப்படி 550 ரூபாயிலிருந்து 750 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. **மாணவ–மாணவியர்களுக்கு போதிய அளவில் தரமான உணவு வழங்கும் வகையில், வரும் நிதியாண்டில் 61.80 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டவாறே, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட கல்லூரி மாணவர் விடுதிகளிலும் 2012–2013 ஆம் ஆண்டில் மாணவர்கள் வசதிக்கென கட்டில்கள் வழங்கப்படும்.** தற்போது தனியார் கட்டடங்களில் இயங்கும் 148 விடுதிகள்அனைத்திற்கும் 115.12 கோடி ரூபாய் செலவில் சொந்த கட்டடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக, 84 விடுதிகள் 64.48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ளன. **இதற்கென 2012–2013 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில்**

**40.58 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் இனத்தை சேர்ந்த மாணவ–மாணவியர்களுக்கு பத்தாம் வகுப்பு வரை படிப்பதற்கான கல்வி உதவித் தொகையும், பத்தாம் வகுப்பிற்கு பின் மேற்படிப்பு படிப்பதற்கான கல்வி உதவித் தொகையும் வழங்கும் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்த 2012–2013 ஆம் ஆண்டு 149 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## சிறுபான்மையினர் நலன்

117. சிறுபான்மையின மாணவ–மாணவியர்கள் கல்வியில் உயர்வு பெறும் வகையில் அரசு பல்வேறு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. 2011–2012 ஆம் ஆண்டில், 2,68,211 சிறுபான்மையின மாணவ–மாணவியர்களுக்கு கல்வி உதவி தொகையாக 39 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. **இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்த 2012–2013 ஆம் ஆண்டிற்கு 55 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** ஹஜ் குழுவின் நிர்வாகச் செலவினங்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானியத் தொகையை பத்து லட்ச ரூபாயிலிருந்து இருபது லட்ச ரூபாயாக இந்த அரசு உயர்த்தி ஆணையிட்டுள்ளது. **2012–2013 ஆம் ஆண்டும், உயர்த்தப்பட்ட இதே அளவில், மானியத் தொகை வழங்கப்படும்.** உலமாக்களின் மாத ஓய்வூதியம் 750 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. **2012–2013 ஆம் ஆண்டில் உலமாக்களின் நலவாரியத்திற்கு உதவி தொகையாக ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டைப் போன்றே 2012–2013 ஆம் ஆண்டிலும் கிருத்துவர்கள் ஜெருசல நகரத்திற்கு புனிதப் பயணம் மேற்கொள்வதற்கு உதவும் வகையில் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## மகளிர், குழந்தைகள் நலன்

**118.** மகளிர் மேம்பாடும், குழந்தைகள் நலன் காத்தலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உள்ளம் கவர்ந்த பணிகளாகும். உலகளவிலும், தேசிய அளவிலும் பெரிதும் பாராட்டப்பட்ட தொட்டில் குழந்தை திட்டம், பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை தொடங்கிய பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சாரும். இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட மாவட்டங்களில் எண்ணற்ற பெண் குழந்தைகளின் உயிரை காப்பாற்றி மகத்தான சாதனையை இது நிகழ்த்தியுள்ளது குறித்து பெருமிதம் கொள்கிறேன். பெண் குழந்தை பாலின விகிதம் குறைவாக உள்ள கடலூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களிலும் இந்த ஆண்டு தொட்டில் குழந்தை திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவுபடுத்தியுள்ளார்கள். இதுவரை, மேற்கூறிய ஐந்து மாவட்டங்களில் மட்டும் 17 குழந்தைகள் மீட்கப்பட்டு மறுவாழ்வு பெற்றுள்ளனர்.

**119.** பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தில் வழங்கப்படும் நிதி உதவி இந்த அரசால் உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் இருந்து பெற்றோரில் ஒருவர் கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டிருந்தால், அப்பெண் குழந்தையின் பெயரில் வைக்கப்படும் மூதலீடு 22,200 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாகவும், இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் இருந்து ஆண் குழந்தைகள் இல்லாத பெற்றோரில் ஒருவர் கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டிருந்தால், ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் முதலீடு செய்யப்பட்டு வந்த தொகை 15,200 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. **இத்திட்டத்திற்கென வரும் நிதியாண்டில் 105 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**120.** திருமண உதவித் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டு வந்த நிதியுதவியை கணிசமாக உயர்த்தி, திருமாங்கல்யம் செய்வதற்காக நான்கு கிராம் தங்கக் காசு வழங்க, இந்த அரசு எடுத்த முடிவு, ஏழை பெற்றோர்களின் சுமையை பெருமளவு குறைத்து, அவர்களின் மகத்தான வரவேற்பைப் பெற்றுள்ளது. திருமண நிதி உதவி திட்டத்தில் வழங்கப்பட்டு வரும் திருமண உதவி, பட்டப்படிப்பு அல்லது பட்டயப் படிப்பு படித்துள்ள பெண்களுக்கு 50,000 ரூபாய் என உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய அறிவுபூர்வமான செயல் மூலமாக, பெற்றோர்களிடையே பெண் குழந்தைகள் உயர் கல்வி கற்கச் செய்ய வேண்டுமென்ற ஆர்வம் பெருமளவு அதிகரித்துள்ளது. இத்திட்டத்தில் இதுவரை 69,892 ஏழை குடும்பங்கள் பயன் அடைந்துள்ளனர். இதற்காக நான்கு கிராம் தங்கம் மற்றும் திருமண நிதி உதவிக்கென 364.64 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. **வரும் நிதியாண்டில் இத்திட்டத்திற்கான நிதி 748.39 கோடி ரூபாயாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**121.** அரிசி பெறத் தகுதியுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி ஆகியவற்றை வழங்கும் திட்டம் போன்று தமிழக வரலாற்றிலேயே, பெண்களால் மிகவும் வரவேற்கப்படும் ஒரு மகத்தான திட்டம் எதுவும் இதுவரை இருந்ததில்லை என்று என்னால் உறுதிபடக் கூற முடியும். வருமான வரம்பின்றி அனைத்து குடும்பங்களுக்கும் பயன் தரும் இத்திட்டம், அதிக சுமை மிகுந்த வீட்டுவேலைகளிலிருந்து பெண்களுக்கு விடுதலை அளித்து, அதன் வாயிலாக கிடைக்கும் நேரத்தை சமூகப் பொருளாதார ரீதியில் பயனுள்ள வகையில் பயன்படுத்த ஒரு சிறந்த வாய்ப்பினை உருவாக்கியுள்ளது. 2011–2012 ஆம் ஆண்டில், 25 லட்சம் மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின் விசிறிகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. **வரும் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 35 லட்சம்**

**குடும்பங்கள் பயனடையும் வகையில் 2,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

122. அங்கன்வாடி மையங்களை சீர்படுத்தி மேம்படுத்துவதில் இந்த அரசு தனிக் கவனம் செலுத்தி வருகின்றது. நடப்பு நிதியாண்டில் சிறிய அளவில் சீரமைப்பு தேவைப்பட்ட 9,873 அங்கன்வாடி மையங்களில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 6,202 அங்கன்வாடி மையங்களில் 39.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரிய அளவிலான சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும், 20,558 அங்கன்வாடி மையங்களில் 12.34 கோடி ரூபாய் செலவில் மின் விசிறி, குழல்விளக்கு வசதிகளுடன் மின்சார இணைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இது தவிர, குழந்தைகள் பயன்படுத்தக்கூடிய 20,244 கழிப்பறைகள் கட்டுவதற்கு 36.44 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு திட்டத்திற்கு 2012–2013 ஆம் ஆண்டில் 1217.97 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## முதியோர், ஆதரவற்றோர் நலன்

123. மாண்புமிகு முதலமைச்சர் பதவி ஏற்ற அன்றே ஆணையிட்ட ஏழு கோப்புகளில், சமூகப் பாதுகாப்பு திட்டங்களுக்கான ஓய்வூதியம் உயர்த்துவது குறித்த கோப்பும் ஒன்று என்பதை குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். இதன் வாயிலாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதியோர், ஆதரவற்றோர் மீது காட்டும் பரிவும், கனிவும் புலனாகிறது. மாதாந்திர முதியோர் ஓய்வூதியம், இதர சமூக பாதுகாப்பு ஓய்வூதியங்கள் ஆகியவற்றை 500 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாக உயர்த்தி வழங்கியதன் வாயிலாக முதியோர் மற்றும் ஆதரவற்றோர், வாழ்வில் புத்தொளி பெற்றுள்ளனர். பல்வேறு சமூக பாதுகாப்பு திட்ட ஓய்வூதியங்களால் 26.41 லட்சம் மக்கள் பயன்பெற்று வருகின்றனர்.

**இத்திட்டங்களின் செயல்பாட்டிற்கென முன்பு எப்போதுமில்லாத அளவாக 3,820.25 கோடி ரூபாய் இந்த வரவு–செலவுத் திட்டக் கணக்கில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** வங்கிக் கணக்குகளின் வாயிலாக சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்தை பயனாளிகளுக்கு நேரடியாக வழங்கும் ஒரு முன்னோடித் திட்டம் மூன்று வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2,000 மக்கள் தொகைக்கு மேலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் இத்திட்டம் 2012 ஜுன் மாதத்திற்குள் விரிவுபடுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் நிதியைத் தவறாக பயன்படுத்த முடியாத வகையில், உயிர் ஆய்வளவு அட்டைகள் (biometric smart cards) வாயிலாக ஓய்வூதியம் வழங்கப்படும். அடுத்த கட்டத்தில், இதர ஊரக மற்றும் நகர்ப்புர பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்படும்.** ஆதரவற்ற முதியோரும், குழந்தைகளும் தங்குவதற்கென ஒருங்கிணைந்த சிறப்பு இல்லங்களை ஏற்படுத்திட அரசு எற்கெனவே அறிவித்துள்ளது. 2011–2012 ஆம் ஆண்டில் இது போன்ற 64 மையங்கள் அமைக்க 10.21 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சிறந்த அரசு சாரா தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களின் உதவியோடு கூட்டாக இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

## மாற்றுத்திறனாளர் நலன்

124. கடுமையாக மனவளர்ச்சி குன்றிய நபர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்திர பராமரிப்பு தொகை 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக இந்த அரசு உயர்த்தி வழங்கி வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். **இந்த திட்டத்தில் 60 சதவீத அளவிற்கு மனவளர்ச்சி குன்றிய நபர்களுக்கு தற்போது உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் பயன் அதிக பயனாளிகளுக்கு சென்றடையச் செய்யும் நோக்கில் பயன் பெறுவதற்கான தகுதி 45 சதவீதமாக குறைக்கப்படும். குடும்பத்தில் மாற்றுத் திறனாளியாக**

**ஒருவர் இருந்தாலும், அக்குடும்பம் வருமான வரம்பு ஏதுமின்றி, முதலமைச்சரின் விரிவான சுகாதார காப்பீட்டுதிட்டத்தில் பயனாளியாக சேர்க்கப்படும்.** மாற்றுத்திறனாளிகளுக்கான திருமண உதவித் தொகையை, இதர திருமண உதவித் திட்டங்கள் அளவுக்கு உயர்த்தி இந்த அரசு ஆணையிட்டுள்ளது. **மேலும், இத்திட்டத்தின் கீழ் போதுமான நிதி ஒதுக்கப்படாத காரணத்தால் பல ஆண்டுகளாக நிலுவையிலிருந்த 3,308 மனுக்கள் அனைத்தையும் உடனடியாக தீர்வு செய்யும் வகையில் 6.75 கோடி ரூபாய் நிதியை அரசு கூடுதலாக ஒதுக்கீடு செய்துள்ளது.** அரசு வேலைவாய்ப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று விழுக்காடு இட ஒதுக்கீட்டை உறுதி செய்யும் வகையில் அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. மேலும், மாற்றுத் திறனாளிகள் எல்லா இடங்களுக்கும் சிரமமின்றி சென்றுவர ஏதுவான சூழலை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 2012–2013 ஆம் ஆண்டில் மாற்றுத் திறனாளிகளின் நலத்திற்காக 206.12 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## திருநங்கையர் நலன்

**125.** திருநங்கையரின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கென திருநங்கையர் நல வாரியத்திற்கு ஒரு கோடி ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **வரும் நிதியாண்டிலும் இவ்வாரியத்திற்கு நிதி உதவியாக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

## இலங்கைத் தமிழர் நலன்

**126.** தமிழக மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை, முகாம்களில் வசிக்கும் இலங்கைத்

தமிழர்களுக்கும் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இவ்வாணையின் மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இலங்கை தமிழர் மீது கொண்டுள்ள அக்கறை வெளிப்படுகிறது. இந்த அரசு, இலங்கை அகதிகளுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகையை பெருமளவில் உயர்த்தி வழங்கி வருகிறது. **2012–2013 ஆம் ஆண்டில், இத்தகைய உயர்த்தப்பட்ட மாதாந்திர உதவி தொகையை வழங்குவதற்காக வரவு–செலவுத் திட்டத்தில் 60 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** மேலும், இலங்கைத் தமிழர்களின் குழந்தைகள் பி.ஈ., பி.டெக். போன்ற பொறியியல் பட்டப்படிப்புகளில் இணை நுழைவின் மூலம் (lateral entry) சேரவும், பட்ட மேற்படிப்புகளான எம்.பி.ஏ., எம்.சி.ஏ., எம்.இ. மற்றும் எம்.டெக். போன்ற படிப்புகளில் சேர்வதற்கும் ஏதுவாக ஒற்றைச் சாளர கலந்தாய்வில் பங்கு கொண்டு பயன் பெறும் வகையில் இந்த கல்வி ஆண்டில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. முதல் தலைமுறையில் பட்டப்படிப்பு பயிலும் மாணவ–மாணவியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் இலங்கைத் தமிழர் அகதிகளின் குழந்தைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இவ்விரு சலுகைகள் மூலம் அக்குழந்தைகள் உயர் கல்வி பெறுவதற்கும், வளமான வாழ்வு அமைத்துக்கொள்வதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. **இலங்கை அகதிகளின் குடும்பங்கள் வாழ்ந்து வரும் தற்காலிக குடியிருப்புகளில் உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு நீடித்து நிலைக்கக் கூடிய வீடுகள் படிப்படியாக கட்டித் தரப்படும். 2012–2013 ஆம் ஆண்டில் தெரிந்தெடுக்கப்பட்ட முகாம்களில் 2,500 வீடுகள் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

## நெசவாளர் நலன்

127. நெசவாளர்களுக்கு உரிய வேலை வாய்ப்பு அளித்திடவும், ஏழை எளிய மக்களுக்கு வேட்டி, சேலைகள் வழங்கிடவும், அரசு

விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. **இத்திட்டம் வரும் நிதியாண்டில் 269 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். கைத்தறி துறைக்காக, மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படுத்தும் 'புத்துயிரூட்டுதல், சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்புத் திட்டம்' மாநில அரசால் செயல்படுத்தப்படும். கூட்டுறவுச் சங்கங்களில் நெசவுப் பணிக்காக கடன் பெற்ற நெசவாளர்களுக்கும், கூட்டுப் பொறுப்பு குழுக்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் பலன் கிடைக்கும். நமது மாநில சங்கங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் 548.35 கோடி ரூபாய் நிதி உதவி கிடைக்கும். இதில் மாநில அரசின் பங்கு 127 கோடி ரூபாய் ஆகும். இத்திட்டத்தின் கீழ் 962 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மறுசீரமைக்கப்படும்.**

## அரசு அலுவலர் நலன்

**128.** அரசின் பல்வேறு திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதற்கு அரசுப் பணியாளர்களின் ஊக்கமும், நலனும் இன்றியமையாதவையென இந்த அரசு கருதுகிறது. பல்வேறு துறைகளில் உள்ள காலிப்பணியிடங்களை விரைவாக நிரப்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது. அரசுப் பணியாளர்களின் செயல் திறனை மேம்படுத்த பயிற்சி மிகவும் இன்றியாமையாததாகும். இதனைக் கருத்தில் கொண்டு **சென்னையில் அமைந்துள்ள அண்ணா மேலாண்மை நிலையத்தில் பயிற்சிக்கான வசதிகள் மேம்படுத்தப்படும். புதிதாக சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் மூன்று மண்டல பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு பயிற்சிக்கான வசதிகள் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். வீடுகள் கட்டுவதற்கான செலவினம் உயர்ந்துள்ளதை கருத்தில் கொண்டு, அரசு ஊழியர்களுக்கான அதிகபட்ச வீட்டுவசதி கடன் 15 இலட்சம் ரூபாயிலிருந்து 25 இலட்சம்**

**ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இக்கடன் தேவைப்படும் அரசு ஊழியர்கள் பயன் பெறும் வகையில் இதற்கென வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் 247 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு ஊழியர்களுக்கான மருத்துவக் காப்பீட்டு திட்டம் இந்த ஆண்டு ஜூன் மாதத்துடன் முடிவதை கருத்தில் கொண்டு, இரண்டு லட்சம் ரூபாய்க்கு பதிலாக நான்கு லட்சம் ரூபாய் வரை காப்பீடு கொண்ட திருத்தியமைக்கப்பட்ட புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் விரைவில் செயல்முறைப்படுத்தப்படும்.**

## ஓய்வூதியதாரர் நலன்

**129.** தமிழ்நாட்டில் தற்போது **6.53** லட்சம் ஓய்வூதியதாரர்கள் உள்ளனர். இவர்கள் மூத்த குடிமக்களாக இருப்பதைக் கருத்தில் கொண்டு அவர்களின் நலனில் அரசு சிறப்பு அக்கறை எடுத்து வருகிறது. **ஓய்வூதியதாரர்களுக்கு 2012–2013 ஆம் ஆண்டில் 13,023.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு சிறப்பினமாக, தமிழ்நாடு ஓய்வூதியதாரர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ் ஓய்வூதியதாரர் இறக்கும் போது வழங்கப்படும் நிதி உதவி 25,000 ரூபாயிலிருந்து 35,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் பத்து கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.**

## பத்திரிக்கையாளர் நலன்

**130.** இந்த அரசு **2011** ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பத்திரிக்கையாளர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியத்தை **5,000** ரூபாயிலிருந்து **6,000** ரூபாயாகவும், குடும்ப ஓய்வூதியத்தை **2,500** ரூபாயிலிருந்து **3,000** ரூபாயாகவும் உயர்த்தி வழங்கியது. **பத்திரிக்கைத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற**

**பத்திரிக்கையாளர்கள் அதிக எண்ணிக்கையில் ஓய்வூதியம் பெறும் வகையில், அவர்களின் பணிக்கொடை உச்ச வரம்பு தகுதி ஒரு லட்சம் ரூபாயிலிருந்து இரண்டு லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும். மேலும், பணியில் இருக்கும் போது பெறும் ஆண்டு வருமானத்திற்கான உச்ச வரம்பு தகுதி 1.20 லட்சம் ரூபாயிலிருந்து இரண்டு லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.** பத்திரிக்கையாளர்கள் செய்தி சேகரித்து சிரமமின்றி செய்திகளை அனுப்புவதற்கு ஏதுவாக அவர்களுக்கான அறை தலைமைச் செயலகத்தில் புதுப்பிக்கப்பட்டது. **பத்திரிக்கையாளர்கள், செய்தி, புகைப்படங்கள், வீடியோ போன்றவற்றை தங்கள் பத்திரிகைகளுக்கு நொடிப்பொழுதில் செலவின்றி அனுப்பும் வகையில், ஒரு ஊடக மையமும், ஊடக பரிமாற்று மையமும் தலைமைச் செயலகத்தில் விரைவில் திறக்கப்படும்.**

## வரிகள்

**131.** இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு மதிப்புக் கூட்டு வரி விகிதத்திலும், மதுபானங்கள், பீர் ஆகியவற்றின் மீதான மாநில கலால் வரியிலும் சில மாற்றங்களைக் கொண்டுவந்தது. சில ஆவணங்களின் பதிவுக் கட்டணங்களிலும் சில மாற்றங்களைக் கொண்டு வந்தோம். இதனால் 2011–2012 ஆம் ஆண்டில் இந்த அரசால் தொடங்கப்பட்ட பல்வேறு புதிய திட்டங்களுக்குத் தேவையான கூடுதல் நிதித் தேவையை ஓரளவு ஈடு செய்ய முடிந்தது. அதே சமயம், சமையல் எரிவாயு, உரம், பூச்சிக்கொல்லி, பயிர் ஊட்டச்சத்து, விவசாயக் கருவிகள், நுண்பாசனத்திற்கான உபகரணங்கள் ஆகியவற்றின் மீதான மதிப்பு கூட்டுவரி முழுமையாக விலக்கிக் கொள்ளப்பட்டது. எனினும், பொருளாதார மந்த நிலையின் காரணமாக நாம் எதிர்பார்த்த அளவிற்கு வருவாய் வரவு இல்லை. இருந்தபோதிலும், வரவு–செலவு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முன்னர் நடத்தப்பட்ட வணிகர்கள், தொழில்

கூட்டமைப்புகளுக்கான கூட்டத்தில் எழுப்பப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையிலும், இதர கோரிக்கைகளின் அடிப்படையிலும் நுகர்வோருக்கு பயன் அளிக்கும் வகையில் கீழ்க்கண்ட பொருட்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கப்படும் :-

- **கோதுமை** மீது தற்போது விதிக்கப்படும் 2 சதவீத மதிப்புக் கூட்டு வரி முற்றிலும் விலக்கிக் கொள்ளப்படும்.
- **ஓட்ஸ்** மீது தற்போது விதிக்கப்படும் 5 சதவீத மதிப்புக் கூட்டு வரி முற்றிலும் விலக்கிக் கொள்ளப்படும்.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த சாதனங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, **மின் சக்தியால் இயங்கக்கூடிய இரு சக்கர வாகனங்களுக்கு** (E-bikes), விதிக்கப்படும் 14.5 சதவீத மதிப்புக் கூட்டு வரி 5 சதவீதமாக குறைக்கப்படும்.
- மின்சாரத்தை சேமிக்கும் சாதனங்களை ஊக்குவிக்கும் பொருட்**டு காம்பேக்ட் ப்ளோரசண்ட் விளக்குகள் மற்றும் காம்பேக்ட ப்ளோரசண்ட் குழல் விளக்குகளுக்கு**, தற்போது விதிக்கப்படும் 14.5 சதவீத மதிப்புக் கூட்டு வரி 5 சதவீதமாக குறைக்கப்படும்.
- பெருகிவரும் சர்க்கரை நோயினை கருத்தில் கொண்டு, "**இன்சுலின்**" மருந்துகளின் விலையினை குறைக்கும் பொருட்டு, அதன்மீது தற்போது விதிக்கப்படும் 5 சதவீத மதிப்புக் கூட்டு வரி முற்றிலும் விலக்கிக் கொள்ளப்படும்.
- உள்ளூர் தீக்குச்சித் தொழிற்சாலைகள் வெளிச்சந்தைப் போட்டியை சமாளிக்கும் வண்ணம், **மரக் குச்சிகள் மற்றும் மரப் பட்டைகளுக்கு** (splints and veneers) தற்போது விதிக்கப்படும் 14.5 சதவீத மதிப்புக் கூட்டு வரி 5 சதவீதமாக குறைக்கப்படும்.

- பெண்கள் மற்றும் குழந்தைகளின் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு இந்த அரசு எடுத்துவரும் பல்வேறு முயற்சிகளின் தொடர்ச்சியாக, **சானிடரி நேப்கின்கள் மற்றும் டயாஃபர்கள்** (sanitary napkins and diapers) தற்போது விதிக்கப்படும் 14.5 சதவீத மதிப்புக் கூட்டு வரி 5 சதவீதமாக குறைக்கப்படும்.
- **கையினால் தயாரிக்கப்படும் பூட்டுகளுக்கு** விதிக்கப்படும் 5 சதவீத மதிப்புக் கூட்டு வரி முற்றிலும் விலக்கிக் கொள்ளப்படும்.
- **பாலூட்டும் புட்டிகள், பாலூட்டும் காம்புகள்** ஆகியவற்றிற்கு விதிக்கப்படும் 5 சதவீத மதிப்புக் கூட்டு வரி முற்றிலும் விலக்கிக் கொள்ளப்படும்.
- போக்குவரத்து மற்றும் தொழிற்சாலைப் பாதுகாப்பினை மேம்படுத்தும் பொருட்டு, **தலைக்கவசத்திற்கு** விதிக்கப்படும் 5 சதவீத மதிப்புக் கூட்டு வரி முற்றிலும் விலக்கிக் கொள்ளப்படும்.

132. நலத் திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் தீவிரமாக செயல்படுத்த வேண்டும் என்பதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விருப்பம். இதற்கு போதிய நிதி ஆதாரங்கள் தேவை. எனவே தேவைப்படும் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டும் பொருட்டு கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

- ❖ தமிழ்நாடு மதிப்பு கூட்டுவரிச் சட்டம் அட்டவணை 2–ல் இனம் 3–க்கு உட்படாத, வெளி மாநிலங்களிலிருந்து வாங்கியோ / கொள்முதல் செய்தோ / கொண்டு வந்தோ விற்பனை செய்யப்படும், மனிதர்கள் உட்கொள்ளும் அனைத்து வகையான மதுவகைகளுக்கும் இரண்டாவது கட்ட விற்பனை நிலையில் 14.5 சதவீதமும், அட்டவணை 2–ல் இனம் 1, 3–க்கு உட்படாத,

மனிதர்கள் உட்கொள்ளும், அனைத்து வகையான மதுபானங்களுக்கும் மூன்றாவது கட்ட விற்பனை நிலையில் 14.5 சதவீதமும் விற்பனை வரி விதிக்கப்படும்.

❖ வரி ஏய்ப்பைத் தடுக்கும் வகையில், ஆண்டுக்கு 5 கோடி ரூபாய்க் குறைவாக தாவர எண்ணெய்களின் விற்பனை அளவு இருந்தால், அதற்கு அளிக்கப்பட்டு வந்த மதிப்புக் கூட்டு வரி விலக்கு நீக்கப்பட்டு, அந்த விற்பனைக்கும் ஐந்து சதவீதம் மதிப்புக் கூட்டு வரி விதிக்கப்படும்.

❖ வாகனங்கள் மீதான வரியை சீரமைக்கும் பொருட்டு, சுற்றுலா பயண வாகனங்கள், மாக்ஸி வாகனங்கள், தனியார் சேவை வாகனங்கள், மாற்று பேருந்து வாகனங்கள், கட்டுமானம் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், பிற மாநில ஒப்பந்த வாகனங்கள் (other state contract carriers) ஆகியவை மீதான வரிகள் சீரமைக்கப்படுவதுடன், முன்னுரிமையில் விருப்ப எண்களை பதிவு செய்வதற்கான கட்டணம் இருமடங்காக உயர்த்தி சில மாற்றங்கள் செய்யப்படும். இந்த மாற்றங்கள் இரு சக்கர வாகனங்களுக்கு பொருந்தாது.

❖ சொத்துக்களின் சந்தை மதிப்பு கணிசமாக உயர்ந்துள்ள போதிலும், வழிகாட்டி மதிப்பு இதற்கேற்றாற்போல் உயர்த்தப்படாத காரணத்தினால், அரசின் வருவாயில் பெருமளவில் இழப்பு ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, வரும் ஏப்ரல் ஒன்றாம் தேதி முதல் திருத்தியமைக்கப்பட்ட வழிகாட்டி மதிப்புகளை அமல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதே சமயம் பொது மக்களின் சுமையைக் குறைக்கும் பொருட்டு விற்பனை ஆவணங்கள் மற்றும் அதே நிலையில் முத்திரைத் தீர்வை விதிக்கப்படும் ஆவணங்களுக்கு, தற்போது

விதிக்கப்படும் 6 சதவீத முத்திரைத் தீர்வை, வரும் ஏப்ரல் ஒன்றாம் தேதி முதல் 5 சதவீதமாகக் குறைக்கப்படும்.

❖ தற்போது உள்ளூர் திட்ட அமைப்புகள் மூலம் வசூலிக்கப்பட்டு வரும் கட்டமைப்பு மற்றும் அடிப்படைக் கட்டணம் தற்போதுள்ள கட்டண அளவில் 50 சதவீதம் உயர்த்தி நிர்ணயிக்கப்படும்.

133. கூடுதல் வருவாயைத் திரட்ட எடுக்கப்படும் இந்த நடவடிக்கைகளின் காரணமாக மாநில அரசுக்கு சுமார் 1,500 கோடி ரூபாய் கூடுதலாகக் கிடைக்கும். இதன் மூலம், இந்த அரசு, மக்கள் நலத் திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் நிதிப்பற்றாக்குறை ஏதுமின்றி சிறப்பாக செயல்படுத்த இயலும்.

## வரி நிர்வாகத்தை வலுப்படுத்துதல்

134. வணிக வரித் துறையை கணினிமயமாக்கும் பணிகளுக்காக சிறப்பு நோக்குத் திட்ட முறையிலான நடவடிக்கைகள் இந்த அரசால் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன. இதற்கான செலவினத்திற்காக கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளவாறு 230.96 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் கணினிமயமாக்கும் பணிகளை இத்துறை தொடங்கியுள்ளது. **2012–2013 ஆம் ஆண்டில், பதிவுத் துறையிலும் தீவிரமான முனைப்போடு கூடிய கணினிமயமாக்கும் பணியை இந்த அரசு தொடங்கும்.**

## நிதி நிலை கணிப்புகள்

135. கடந்த 2011 ஆம் ஆண்டு மே திங்களில் இந்த அரசு பொறுப்பேற்றபோது, மாநிலத்தின் நிதிநிலை மோசமான நிலையிலிருந்தது. மாநிலத்தின் வருவாய் பற்றாக்குறை 2009–2010 ஆம் ஆண்டில் 3,531

கோடி ரூபாயாகவும், **2010–2011** ஆம் ஆண்டில் **2,729** கோடி ரூபாயாகவும் இருந்தது. **2010–2011** ஆம் ஆண்டில் நிதிப்பற்றாக்குறை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் **3.20** சதவீதம் என்ற அளவை எட்டியிருந்தது. இந்த சூழ்நிலையில் பொறுப்பேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாநிலத்தின் நிதிநிலைமையை சீரமைக்க பல்வேறு திறமையான நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இதனால் **2011–2012** ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் ஓரளவு வருவாய் உபரியாக **173.87** கோடி ரூபாய் மதிப்பிடப்பட்டது. அதே சமயத்தில் **2011–2012** ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதுவரை எட்டப்படாத உயர் மூலதன செலவாக **15,877.58** கோடி ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய **2011–2012** ஆம் ஆண்டுக்கான இறுதி மதிப்பீட்டில், திருத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டை விட சிறப்பான நிலையை எட்டி, வருவாய் உபரி **536.54** கோடி ரூபாய் என்ற அளவில் உள்ளது என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போன்று, கடன் மற்றும் முன்பணம் உட்பட, மூலதன செலவு, **2011–2012** ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில், **17,133.20** கோடி ரூபாய் அளவை எட்டி, நிதிப்பற்றாக்குறை அனுமதிக்கப்பட்ட அளவை விட சிறிது குறைந்து **16,596.66** கோடி ரூபாய் என்ற அளவில் இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**136.** **2012–2013** ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் மாநிலத்தின் நிதி நிலையை மேலும் வலுப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இதன்படி, வருவாய் வரவு **1,00,589.92** கோடி ரூபாய் எனவும், அதில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் **71,460.55** கோடி ரூபாய் எனவும், வரி அல்லாத வருவாய் **6,032.61** கோடி ரூபாய் என்ற அளவிலும் இருக்கும். மத்திய வரி வருவாயில் கிடைக்கும் பங்கு **15,032.47** கோடி ரூபாய் எனவும் மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியத் தொகை **8,064.29** கோடி ரூபாய் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

வருவாய் செலவினம் 98,213.85 கோடி ரூபாய் அளவிலும், அதில் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் 43 சதவீதம் அளவிலும் இருக்கும். இதனால், மாநிலத்தின் வருவாய் உபரி வரும் நிதியாண்டில் கணிசமாக உயர்ந்து 2,376.07 கோடி ரூபாய் அளவை எட்டும். மூலதன செலவிற்கு மொத்தமாக 20,856.08 கோடி ரூபாயும், கடன் மற்றும் முன்பணத் தேவைகளுக்கு 1,352.12 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் நிதிப்பற்றாக்குறை 19,832.13 கோடி ரூபாய் அளவில் இருக்கும் என்றாலும், இது மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 2.87 சதவீதம் என்ற அளவிலேயே இருக்கும்.

137. **பதின்மூன்றாவது நிதிக்குழு நிர்ணயித்த நிதிக்குறியீடுகளுக்கு உட்பட்டே நமது வரவு–செலவுத் திட்ட நிதிநிலைக் குறியீடுகள் உள்ளது என்பதை நான் இங்கு பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதில் வரையறுக்கப்பட்டபடி, மாநில அரசு வருவாய் உபரி தொடர்வதுடன், நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீத அளவிற்கும் குறைவாகவே இருக்கும்.** 2012–2013 ஆம் ஆண்டின் இறுதியில் மாநிலத்தின் மொத்த கடன் 1,35,060.47 கோடி ரூபாயாக இருக்கும். **எனினும், இது பதின்மூன்றாவது நிதிக்குழு அனுமதித்துள்ள அளவான, மாநில உற்பத்தி மதிப்பில் கடனின் விகிதாச்சார அளவு 24.8 சதவீதம் என்பதைவிட குறைவாக, 19.6 சதவீத அளவிலேயே இருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநிலத்தின் கடன் அளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும் என்று, ஏற்கெனவே அளித்திருந்த உறுதிமொழியின் அடிப்படையில், 2011–2012 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் நிகரக் கடன் பெற கணிக்கப்பட்ட அளவு 16,105.86 கோடி ரூபாய் என்று இருந்தாலும் 12,873.81 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே கடன் பெற்றுள்ளோம். அதேபோல், வரும் ஆண்டில் மத்திய அரசு நமது மாநிலத்திற்கு 20,716 கோடி ரூபாயை கடன் பெற்றுக்கொள்ள அனுமதித்துள்ளபோதிலும், நாம் பெறப்படும் கடன்**

**அளவை 18,387.47 கோடி ரூபாய் அளவிலேயே கட்டுப்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. மேலும், மாநிலத்தின் நிகரக் கடன், மூலதன செலவினங்களுக்காக கணிக்கப்பட்டுள்ள அளவைக் காட்டிலும் குறைவாகவே உள்ளதால் பெறப்படும் கடன் மூலதனப் பணிகளுக்காகவே செலவவிடப்படுகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விழைகிறேன்.** வரவு–செலவுத் திட்ட உரையின் இணைப்பில் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தின் விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இதனை, வரவு–செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, படிக்கப்பட்டதாக கருதி ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

**138.** மோசமான நிதி நிர்வாகத்தினாலும், பொறுப்பற்ற செலவினங்களாலும் மாநிலத்தின் நிதிநிலையை கடும் சீரழிவின் விளிம்பில் முந்தைய அரசுகள் ஒவ்வொரு முறையும் விட்டுச் செல்வதும், அந்தச் சுமையை ஏற்று உரிய நடவடிக்கைகளை எடுத்து நிதிநிலையை சீராக்குவதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பணியாகவே அமைந்து விடுவது கடந்த காலகட்டங்களை நோக்கும்போது நன்கு விளங்கும். அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் முடங்கிவிடாமல் தொடர்ந்து இயங்கி, மக்களுக்கு தமது சேவையை திறம்பட வழங்க வேண்டுமெனில், மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய, அதே சமயம் தாங்கக்கூடிய அளவிலான, சிறு சிறு மாற்றங்கள் கட்டணங்களில் அவ்வப்போது ஏற்படுத்தப்படுவது தவிர்க்க முடியாதது. இத்தகைய நடவடிக்கைகளால் மக்களிடம் அதிருப்தி ஏற்பட்டுவிடும் என்பதைக் காரணம் காட்டி, முடிவு எடுப்பதை தவிர்க்கும் அரசு, நிர்வாக அமைப்பிற்கும், மக்களுக்கும் அதிக பாதகத்தைத்தான் ஏற்படுத்தும். இந்த சூழ்நிலையில், மாநிலத்தின் நிதிநிலையை ஓராண்டுக்குள் சீரமைத்து மாற்றியமைப்பது என்பது ஒரு சாதாரண பணி அல்ல. இத்தகைய பணியை மேற்கொள்ள, தொலைநோக்கும், நெஞ்சுறுதியும் தேவை. இது நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மட்டுமே

சாத்தியமாகும். எனவே, வரிவிகிதம் மற்றும் கட்டணங்களை உயர்த்துவது போன்ற நடவடிக்கைகளை, தனது விருப்பத்திற்கும் மாறாக, கடும் நிதி நெருக்கடியைக் கருத்தில் கொண்டே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. **சமூக பாதுகாப்பு பணிகளுக்காகவும், நல்வாழ்வு திட்டங்களுக்காகவும் இந்த அரசு ஒட்டுமொத்தமாக 30,331 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது என்பதையும், இத்தருணத்தில் மனதில் கொள்ளவேண்டும்.** இதில் அனைவரும் வியந்து பாராட்டத்தக்க சாதனை என்னவெனில், வரலாறு காணாத எண்ணிக்கையில் சாமானிய மக்களின் நலன் கருதி நலத்திட்டங்கள் பலவற்றை தொடங்கி செயல்படுத்தி வரும் இந்த சூழ்நிலையிலும்கூட, மாநிலத்தின் நிதி ஆதாரம் வலுவான நிலைக்கு மீட்டெடுக்கப்பட்டுள்ளது என்பதுதான்.

**139.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ச்சியை ஊக்குவிக்கக்கூடிய, அனைவருக்கும் சமநிலையில் பயன்தரக்கூடிய, நலத்திட்டங்கள் முதன்மை பெற்றுள்ள, ஒரு நிதிநிலை அறிக்கையை இங்கு சமர்ப்பிக்க முயற்சி செய்துள்ளேன். பல முக்கியமான முயற்சிகளுக்கு மத்திய அரசு உதவிக்கரம் நீட்ட முன்வராத சூழ்நிலையிலும்கூட, நமது சொந்த கால்களின் வலுவிலேயே நின்று இந்த சாதனைகளை புரிந்துள்ளோம். இந்த வரவு–செலவுத் திட்ட அறிக்கையை பல்வேறு தரப்பு மக்களும் நிச்சயம் வரவேற்பார்கள் என நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து, அவர்களின் மேலான கருத்துக்களை எதிர்நோக்கியுள்ள அதே நேரத்தில், அவர்களின் பாராட்டுதல்களையும், ஆக்கப்பூர்வமான விமர்சனங்களையும் சமமாகவே எடுத்துக் கொள்வோம் என்பதை இங்கே உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன். நம்மிடையே பல்வேறு வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் மாநிலத்தின் நலனையும், மக்களின் நலனையும் முன்னிறுத்தும்போது, நம்மிடையே உள்ள குறுகிய கருத்து

வேறுபாடுகளை மறந்து, ஒற்றுமை உணர்வுடன் இணைந்து செயல்பட வேண்டியது அவசியம் எனக் கருதுகிறேன். மாநிலத்தை வளர்ச்சி மற்றும் வளமான பாதையில் கொண்டு செல்ல, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்த வரவு–செலவுத் திட்டத்தை முழுமையாக ஆதரிப்பீர்கள் என உறுதியாக நம்புகிறேன்.

**140.** ‘என் கடன் பணி செய்து கிடப்பதே’ என்ற அப்பர் அடிகளின் திருவாக்கிற்கிணங்க, தமிழ்நாட்டு மக்களின் நலனையே மனதில் கொண்டு, அல்லும் பகலும் அயராது உழைத்துவரும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அனைத்துத் துறைகளின் பணிகளையும் தொடர்ந்து ஆய்வு செய்து, தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களைச் செதுக்கியும் சீரமைத்தும், புதிய திட்டங்களைக் கவனமாக உருவாக்கியும், இந்த வரவு–செலவுத் திட்டத்தை உருப்பெறச் செய்துள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் புத்திக்கூர்மை, ஆழ்ந்த அறிவு, எல்லையற்ற அனுபவம், தெளிவான தொலைநோக்கு ஆகியவை சிறந்த அறிவுரைகளாகவும், விலைமதிப்பற்ற வழிகாட்டுதல்களாகவும், இந்த வரவு–செலவுத் திட்டத்தில் இழைந்தோடியுள்ளன. ஆழ்ந்த அறிவுக்கும், பரிவுக்கும் உறைவிடமாகத் திகழும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்ற எனக்கு வழிகாட்டியமைக்காக நான் என்றென்றும் நன்றிக் கடன்பட்டுள்ளேன்.

**141.** இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதில் என்னோடு சோர்வின்றி பணியாற்றிய நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., அவர்களுக்கும், அவருடன் பணியாற்றிய நிதித்துறை அலுவலர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**142.** இத்துடன் **2012–2013** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கு அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

**நன்றி**

**வணக்கம்**

**ஓ. பன்னீர்செல்வம்**

நிதி அமைச்சர்

சென்னை
2012 ஆம் ஆண்டு
மார்ச் திங்கள் 26 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2043
பங்குனித் திங்கள் 13 ஆம் நாள்

# இணைப்பு

## இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

தமிழ்நாடு நிதி நிலைப் பொறுப்புடைமைச் சட்டம் 2003 ன் 3(1) பிரிவின்படி, மாநில அரசு, வரவு–செலவுத் திட்ட அறிக்கையுடன் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றையும் சட்டப் பேரவையில் வைக்க வேண்டும். இச்சட்டத்தின் 3(2) பிரிவின்படி, நிதி நிலைக் குறியீடுகளான வருவாய் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை ஆகியவை குறித்த இலக்குகளை வரும் சில ஆண்டுகளுக்குக் குறிப்பிட்டு, அதற்கான அனுமானங்களை விளக்கி, இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின்படி, வரும் ஆண்டு மற்றும் அதற்கடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு, அதாவது 2012–2015 ஆம் ஆண்டுகளுக்குரிய இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் தயாரிக்கப்பட்டு சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகிறது.

### நோக்கங்கள்

வளர்ச்சி திட்டச் செலவினங்களுக்கான தேவைகள் மற்றும் நிதி சிக்கனத்திற்கும் இடையே ஒரு சமநிலையை ஏற்படுவது இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பல நலத் திட்டங்களை இந்த அரசு தொடங்கியுள்ளது. மேலும், மூலதனச் செலவினங்களும் பெருமளவு உயர்த்தப்பட்டுள்ளன. இத்திட்டங்களுக்குப் போதுமான நிதி வழங்கப்பட வேண்டும். அதே வேளையில், பதிமூன்றாவது நிதிக்குழு வகுத்துள்ள இலக்குகளுக்கு இணங்க நிதிநிலை உறுதித்தன்மையை அடையவும் அரசு உறுதியாக உள்ளது. இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டமானது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதிநிலை இலக்குகளை 2012–2015 ஆண்டு காலத்திலும் மற்றும் அதனைத் தொடர்ந்து பராமரிப்பதையும் உறுதி செய்கிறது.

(அ) வருவாய் உபரி தொடரும்.

(ஆ) நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீதத்திற்குள் இருக்கும்.

(இ) மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடனின் சதவீதமானது, 13வது நிதிக் குழு நிர்ணயித்துள்ள வரம்பிற்குள் பராமரிக்கப்படும். அதாவது, 2012–2013 ல் 24.8 சதவீதத்திற்கு குறைவாகவும், 2013–2014 ல் 25 சதவீதத்திற்குக் குறைவாகவும், 2014–2015 ல் 25.2 சதவீதத்திற்குக் குறைவாகவும் பராமரிக்கப்படும்.

## எதிர்காலக் கணிப்புகள்

### I. வருவாய்க் கணக்கு வரவுகள்

2012–2013 ஆம் ஆண்டில் மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் ரூ.1,00,589.92 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

### 1. மாநில அரசின் சொந்த வரிவருவாய்

2011–2012 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டின்படி மாநில அரசின் சொந்த வரி வருவாய் ரூ.59,932.31 கோடியாகும். 2012–2013 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி ரூ.71,460.55 கோடியாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 19.24 சதவீத வளர்ச்சியாகும். வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2012–2013 ன் படி, 2012–2013 ஆம் ஆண்டிற்கான மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் மாநில அரசின் சொந்த வரி வருவாய் விகிதம் 10.35 ஆக இருக்கும். மாநிலத்தின்

சொந்த வரி வருவாயின் முக்கிய அம்சங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(அ) வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு **2012–2013** ல் வணிக வரியின் மூலம் பெறப்படும் வரவுகள் ரூ.**46,678.10** கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பை விட **17.4** சதவீதம் வளர்ச்சி கொண்டதாக இருக்கும். இவ்வுயர் வளர்ச்சி விகிதமானது, நடப்பாண்டில் வரிகளைத் திருத்தியமைத்ததின் விளைவாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. இதன் முழு பலன் **2012–2013** ஆம் ஆண்டில் ஏற்படும். மேலும், சில கூடுதல் ஆதாரங்களைத் திரட்டுவதற்கான நடவடிக்கைகளும் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளன.

(ஆ) **2012–2013**ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை வரவுகள் ரூ.**11,473.97** கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் அதிக வளர்ச்சி விகிதம் இருந்ததைக் கருத்தில் கொண்டு, திருத்த மதிப்பீடு **2011–2012** ஐ விட **16** சதவீதம் உயர்வாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

(இ) வழிகாட்டும் மதிப்பு திருத்தியமைக்கப்படுவதால், **2012–2013** ஆம் ஆண்டில் முத்திரைத்தாள் தீர்வை மற்றும் பதிவு மூலமாகக் கிடைக்கும் வரவுகள், **30.91** சதவீதம் அளவிற்கு வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, **2011–2012** ஆம் ஆண்டில் இவ்வினத்தின்கீழ் பெறப்பட்ட ரூ.**6,467.55** கோடி வருவாயை விட உயர்ந்து, **2012–2013** ஆம் ஆண்டில் ரூ.**8,466.94** கோடியாக இருக்கும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஈ) வரும் நிதியாண்டிலிருந்து மோட்டார் வாகனவரியினைத் திருத்தி அமைப்பதால், இவ்வினத்தின் வளர்ச்சி அதிகமாக, அதாவது **28.99** சதவீத அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, **2011–2012** ஆம் ஆண்டில் இவ்வினத்தின்கீழ் பெறப்பட்ட ரூ.**3,210.39** கோடி வருவாயை விட உயர்ந்து, **2012–2013** ஆம் ஆண்டில் ரூ.**4,141.11** கோடியாக இருக்கும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 2. வரி அல்லாத வருவாய்

வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு **2012–2013** ல் வரி அல்லாத வருவாய் ரூ.**6,032.61** கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த இனத்திற்கு நமது மாநிலத்தில் குறைந்த வாய்ப்புகளே உள்ளதாலும், பெரும்பாலான அரசு சேவைகள் விலை இல்லாமலோ அல்லது குறைந்த விலையிலேயே வழங்கப்படுவதாலும், திருத்த மதிப்பீடு **2011–2012** ஆம் ஆண்டு அளவிலிருந்து குறைவான வளர்ச்சியான **9** சதவீதம் மட்டுமே எதிர்பார்க்கப்படுகிறது. **2013–2014** மற்றும், **2014–2015** ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் **3** சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 3. மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு

மத்திய அரசு பகிர்ந்தளிக்கக்கூடிய நிகர வரி வருவாயில் தமிழக அரசின் பங்கினை, சேவை வரியைப் பொறுத்த வரையில் **5.374** சதவீதத்திலிருந்து **5.047** சதவீதமாகவும், ஏனைய வரிகளைப் பொறுத்த வரையில் **5.305** சதவீதத்திலிருந்து **4.969** சதவீதமாகவும் குறைத்து பதிமூன்றாவது நிதிக்குழு

நிர்ணயித்துள்ளது. மத்திய வரிகளில் பங்கு **2012–2013** ஆம் ஆண்டிற்கான மைய அரசின் வரவு–செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு ரூ.**15,032.47** கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. **2013–2014** மற்றும் **2014–2015** ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் **15** சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 4. மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்,

**2012–2013** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் ரூ.**8,064.29** கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் பல்வேறு திட்டம் மற்றும் திட்டம்சாராப் பணிகளுக்கான நிதியுதவிகள், மற்றும் **13**வது நிதிக்குழு பரிந்துரைத்துள்ள நிதியுதவி ஆகியன கருத்தில் கொள்ளப்பட்டன. **2013–2014, 2014–2015** ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் **10** சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## II. வருவாய்க் கணக்கில் செலவுகள்

**2012–2013** ஆம் ஆண்டிற்கான வருவாய்க் கணக்கு செலவுகள் ரூ.**98,213.85** கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது திருத்த மதிப்பீடு **2011–2012** ஐக் காட்டிலும் **15.5** சதவீதம் கூடுதலாகும். அதிக அளவிலான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கியது, நடைமுறையிலுள்ள திட்டங்களுக்கான உதவித் தொகைகளை உயர்த்தியது மற்றும், காலிப் பணியிடங்களைத் திட்டமிட்டு நிரப்பியது போன்றவையே இந்த உயர்வுக்குக் காரணம்.

வருவாய்க் கணக்கு செலவுகளின் முக்கிய கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

(1) 2012–2013 ல் சம்பளம் குறித்த ஒதுக்கீடு ரூ.29,212.36 கோடி மற்றும் ஓய்வூதியம் குறித்த செலவினத்திற்கான ஒதுக்கீடு ரூ.13,023.50 கோடியாகும். இவ்வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் குறித்த செலவுகள் மொத்த வருவாய்ச் செலவுகளில் 43 சதவீதமாகும். ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி நிலுவைத் தொகை முழுவதுமாக வழங்கப்பட்டிருப்பினும், காலமுறை அகவிலைப்படி உயர்வு, சம்பள உயர்வு மற்றும் காலிப் பணியிடங்களை நிரப்புவதால் ஏற்படும் கூடுதல் செலவு ஆகியவை மேற்கூறிய செலவினம் அதிகரிக்கக் காரணங்களாகும். 2013–2014 மற்றும், 2014–2015 ஆம் ஆண்டுகளில் இதன் வளர்ச்சி விகிதம் 12.5 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(2) வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2012–2013 ல் மானியம் மற்றும் உதவித்தொகைக்கான ஒதுக்கீடு ரூ.36,190.67 கோடியாகும். இலவச அரிசி வழங்குவதாலும், பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்ட ஓய்வூதியத் தொகைகளின் உயர்வாலும், பல்வேறு திருமண உதவித் திட்டங்கள் மற்றும் மகப்பேறு உதவித் திட்டங்களின் உதவித் தொகை உயர்வாலும், கறவை மாடுகள், ஆடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் இலவசமாக வழங்குவதாலும், மாநிலத்தின் சொந்த வரி வருவாய் உயர்வுக்கேற்ப உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகமாக நிதி பகிர்ந்தளிக்கப்படுவதாலும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கூடுதல் உதவித் தொகை வழங்குவதாலும் அதிக ஒதுக்கீடு

அவசியமாகிறது. 2013–2014 மற்றும் 2014–2015 ஆம் ஆண்டுகளில் இதன் வளர்ச்சி விகிதம் 15 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்படுகிறது.

(3) 2011–2012 திருத்த மதிப்பீட்டைக் காட்டிலும் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2012–2013 ல் ஊதியம் அல்லாத செயல்முறை மற்றும் பராமரிப்பு செலவுகள் 10சதவீதம் அதிகரித்துள்ளன. இந்த உயர்வு, இலவச மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு சீருடை வழங்குதல் போன்ற திட்டங்களால் ஏற்பட்டுள்ளது. 2013–2014, 2014–2015 ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் 10 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்படுகிறது.

(4) 2012–2013 ஆம் ஆண்டில் வட்டி செலுத்துதல் ரூ.10,945.31 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2012–2013 ஆம் ஆண்டிற்கான வட்டிச் செலவு மொத்த வருவாய் வரவில் 10.88 சதவீதமாகும். இவ்விகிதம் 2013–2014 மற்றும் 2014–2015 ஆம் ஆண்டுகளில் முறையே 10.99 சதவீதம் மற்றும் 11.09 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

## III. மூலதனக் கணக்கில் செலவுகள்

2012–2013 ஆம் ஆண்டில் மூலதனம் குறித்த செலவுகளை பெருமளவு உயர்த்த இம்மாநிலம் கருதியுள்ளது. அதன் விளைவாக, மூலதனம் குறித்த செலவுகளுக்கு திருத்த மதிப்பீடு 2011–2012 ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.16,388.34 கோடியைவிட அதிகத் தொகை அளிக்கப்பட்டு, வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2012–2013 ல் ரூ.20,856.08 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது 27 சதவீத உயர்வைக் காட்டுகிறது. கடன் மற்றும் முன்பணங்கள் உள்ளடக்கிய மூலதனம் குறித்த செலவினத்திற்கு ரூ.22,208.20 கோடி மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2013–2014 மற்றும் 2014–2015 ஆம் ஆண்டுகளில் 15 சதவீதமாக வளரும் என கணிக்கப்பட்டுள்ளது.

## IV. வருவாய் உபரி மற்றும் நிதிப் பற்றாக்குறை

2012–2013 ஆம் ஆண்டில் வருவாய் உபரி ரூ.2,376.07 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இம்மாநிலமானது, 2013–2014 மற்றும் 2014–2015 ஆம் ஆண்டுகளிலும் தொடர்ந்து வருவாய் உபரியை பராமரிக்கும். 2012–2013 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை ரூ.19,832.13 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 2.87 சதவீதமாக இருக்கும். வரும் ஆண்டுகளில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை விகிதம் 2013–2014 ஆம் ஆண்டில் 2.88 ஆகவும், 2014–2015 ல் 2.86 ஆகவும் இருக்கும்.

## V. பொதுக் கடன்

2012–2013 ஆம் ஆண்டில் மாநில அரசு வாங்க அனுமதிக்கப்பட்ட கடன் அளவு ரூ.20,716 கோடியாகும். இருப்பினும், அரசு கடன் வாங்குவதைக் குறைக்க உத்தேசித்துள்ளது. மாநில அரசு தொகுநிதியில் நிகர கடன் வாங்குதல் ரூ.18,387.47 கோடியாக மட்டுமே மதிப்பிடப்பட்டுள்ளது. 31.03.2013 அன்று வருங்கால வைப்பு நிதி போன்றவை உள்ளிட்ட ஏனைய கடன் ரூ.1,35,060.47 கோடியாக இருக்கும். இது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 19.56 சதவீதமாகும்.

## VI. உத்திரவாதங்கள்

மாநிலம் தனது எதிர்பாராக் கடன் பொறுப்புகளை முறையாக நிருவகித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 100 சதவீத அளவிற்குக் குறைவாகவோ அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 10 சதவீத அளவிற்குக் குறைவாகவோ, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்கு அமையப்பெற வேண்டும். 31.3.2012 அன்று உள்ளபடி நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்களின் அளவு முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 11.95 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 1.44 சதவீதமாகவும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் (Risk weighted) கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 75 சதவீதத்திற்கு மிகாமலோ அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 7.5 சதவீதத்திலோ இதில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் இருக்க வேண்டும். 31.3.2012 அன்று உள்ளபடி மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட அரசு உத்திரவாதங்களின் (Risk weighted guarantees) அளவு, மொத்த வருவாய் வரவுகளில் 2.57 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 0.31 சதவீதமாவும் உள்ளது. பயனளிக்கக்கூடிய திட்டங்களுக்கு மட்டும் உத்தரவாதங்கள் அளிக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் அரசு உத்தரவாதங்கள் கட்டுப்படுத்தப்படும்.

## வேறுபாட்டு அளவுகள்

இந்த இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம், செலவினங்களில் பல்வேறு இனங்களை முழுமையாகக் கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளது. எனவே, இவை மேலும் உயர்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், பொருளாதாரத்தின் வளர்ச்சி குறையும்பட்சத்தில் வருவாய் வரவுகள் வேறுபட வாய்ப்புள்ளது. 2012–2013, 2013–2014 மற்றும் 2014–2015 ஆகிய ஆண்டுகளில் வருவாய் வரவுகளின் வளர்ச்சி 3 சதவீத அளவிற்குக் குறைந்தாலும், உதவித்தொகை மானியங்கள் மற்றும் மூலதனம் குறித்த செலவுகள் போன்ற செலவினங்களைக் குறைப்பதால், வருவாய் உபரி மற்றும் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறையை 3 சதவீதத்திற்குள் பராமரிக்க இயலும்.

## முடிவு

நமது மாநிலம் கடந்த பத்து மாதங்களில் குறிப்பிடத்தக்க அளவில் நிதிநிலை சீரமைப்பை அடைந்துள்ளது. பதிமூன்றாவது நிதிக்குழு 2012–2013 ஆம் ஆண்டுகளில் நிர்ணயித்துள்ள அனைத்து இலக்குகளையும் மாநிலம் அடையும். மேலும், வரும் ஆண்டுகளிலும் இதே நிலையை பராமரித்து வரும்.

* * * * *

# அட்டவணை - இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

(ரூபாய் கோடியில்) (தற்போதைய விலையில்)

| | 2010-2011 கணிப்புகள் | 2010-2011 கணக்குகள் | 2011-12 கணிப்புகள் | 2011-2012 திருத்த மதிப்பீடு | 2012-2013 கணிப்புகள் | 2012-2013 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2013-2014 கணிப்புகள் | 2014-2015 கணிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருவாய்** | **63,419.01** | **70,187.62** | **72,770.26** | **85,552.85** | **98,793.94** | **100,589.92** | **114,551.28** | **130,544.81** |
| மாநிலத்தின் சொந்த வருவாய் | **46,639.21** | **52,433.63** | **52,942.82** | **65,474.89** | **75,166.93** | **77,493.16** | **88,393.22** | **100,906.57** |
| வரி | 43,400.25 | 47,782.18 | 49,311.60 | 59,932.31 | 70,548.70 | 71,460.55 | 82,179.63 | 94,506.58 |
| வரி அல்லாதவை | 3,238.96 | 4,651.45 | 3,631.22 | 5,542.58 | 4,618.23 | 6,032.61 | 6,213.59 | 6,400.00 |
| மத்திய அரசிடமிருந்து பெறப்படுபவை | **16,779.80** | **17,753.99** | **19,827.44** | **20,077.96** | **23,627.01** | **23,096.76** | **26,158.06** | **29,638.23** |
| பங்கிடப்பட்ட வரிகள் | 10,233.24 | 10,913.97 | 11,961.94 | 12,714.95 | 15,077.74 | 15,032.47 | 17,287.34 | 19,880.44 |
| உதவி மானியம் | 6,546.56 | 6,840.02 | 7,865.50 | 7,363.01 | 8,549.27 | 8,064.29 | 8,870.72 | 9,757.79 |
| **வட்டியல்லாத செலவு** | **69,056.76** | **78,425.80** | **78,825.12** | **92,916.11** | **106,572.89** | **109,476.73** | **124,343.41** | **1,41,094.22** |
| சம்பளங்கள் (கல்விக்கான மானியங்கள் உட்பட) | 21,623.95 | 23,825.43 | 24,535.50 | 26,188.39 | 31,154.13 | 29,212.36 | 32,863.91 | 36,971.89 |
| ஓய்வூதியங்களும் ஓய்வுகாலப் பலன்களும் | 10,107.62 | 11,635.32 | 10,883.82 | 12,080.12 | 13,774.72 | 13,023.50 | 14,651.44 | 16,482.87 |
| ஊதியம் அல்லாத செயல்பாடுகளும் பராமரிப்புகளும் | 4,510.80 | 4,664.69 | 4,840.17 | 7,778.45 | 7,871.01 | 8,804.02 | 9,684.42 | 10,652.86 |
| உதவித் தொகைகளும் நிதி மாற்றங்களும் | 20,482.63 | 24,365.72 | 23,824.76 | 29,726.34 | 34,506.46 | 36,190.67 | 41,619.27 | 47,862.16 |
| ஏனைய வருவாய்ச் செலவினங்கள் | 7.13 | 16.71 | 7.57 | 9.61 | 7.34 | 37.98 | 39.88 | 42.27 |
| மூலதன ஒதுக்கீடு | 11,582.67 | 12,436.27 | 14,127.39 | 16,388.34 | 18,259.23 | 20,856.08 | 23,984.49 | 27,582.17 |
| நிகரக் கடன் வழங்கல் | 741.96 | 1481.66 | 605.91 | 744.86 | 1000.00 | 1352.12 | 1500.00 | 1500.00 |
| நிதிக் குறியீடுகள் | | | | | | | | |
| முதன்மை உபரி(+) / பற்றாக்குறை (-) | **-5,637.75** | **-8,238.18** | **-6,054.86** | **-7,363.26** | **-7,778.95** | **-8,886.81** | **-9,792.13** | **-10,549.42** |
| வட்டி செலுத்துதல் | 6,651.19 | 8,408.45 | 8,411.42 | 9,233.40 | 10,130.17 | 10,945.31 | 12,587.11 | 14,475.17 |
| மொத்த வருவாய் வரவுகளில் செலுத்தப்பட்ட வட்டித் ெ | 10.49% | 11.98% | 11.56% | 10.79% | 10.25% | 10.88% | 10.99% | 11.09% |
| வருவாய் உபரி(+) / பற்றாக்குறை (-) | **35.68** | **-2,728.69** | **267.01** | **536.54** | **1350.11** | **2376.07** | **3,105.26** | **4,057.58** |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-)% | 0.06% | -3.89% | 0.37% | 0.63% | 1.37% | 2.36% | 2.71% | 3.11% |
| நிதி உபரி(+) / பற்றாக்குறை(-)யில் வருவாய் உபரி(+) / பற்றாக்குறை (-)% | -0.29% | 16.39% | -1.85% | -3.23% | -8% | -11.98% | -14% | -16% |
| நிதி உபரி(+) / பற்றாக்குறை(-) | **-12,288.94** | **-16,646.62** | **-14,466.29** | **-16,596.66** | **-17,909.12** | **-19,832.13** | **-22,379.23** | **-25,024.59** |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதி உபரி(+) / பற்றாக்குறை(-) % | -2.73% | -3.21% | -2.96% | -2.85% | -2.74% | -2.87% | -2.88% | -2.86% |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பு (GSDP) | **4,50,474.00** | **5,18,576.00** | **4,87,996.00** | **5,81,635.00** | **6,54,340.00** | **6,90,542.00** | **7,76,859.75** | **8,73,967.22** |